மாத இதழ் - July 2012

# வண்ண வானவில்

பருவம் 02 වන්න වානවිල් Vanna Vaanavil உதயம் 21

30/-



ஐஸ்வர்யா ALBUM

## ஒலிம்பிக்கில் ஏன் நமக்கு பின்னடைவு?

## டெங்கு: தடுப்பது எப்படி?

## சிலுக்காக நடிக்க வித்யா கொடுத்த விலை!

S.Krishkanthan @ ANCL 2012


SINGER | Futura
தையல் உலகின் அடுத்த தலைமுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் போட்டிகள்

## ஒரு பின்நோக்கிய பார்வை



ஒலிம்பிக் போட்டியின் நோக்கக் குரல் (MOTTO) 'சிட்டியஸ், அல்டியஸ், போட்டியஸ்' என்பதாகும். தமிழில் இதனை 'வேகமாக, உயரமாக, பலம்மிக்கதாக' என்று கூறலாம்.

ஒலிம்பிக் கோட்பாடு அல்லது தாற்பரியம் 'வெற்றி பெறுவதல்ல; பங்கு பற்றுதலே ஆகும். இதனை போட்டியின் முக்கியத்துவம் வெற்றியல்ல. வெற்றியை நோக்கி மேற்கொள்ளபடும் போராட்டமாகும் என்று கூறலாம்.

நவீன ஒலிம்பிக்கின் முதலாவது போட்டி கிரேக்கத்தின் தலைநகரான அதென்ஸில் 1896ஆம் ஆண்டு நடைபெற்றது. பனதெனெய்க் விளையாட்டரங்கில் நடைபெற்ற முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டியில் 14 நாடுகளில் இருந்து 241 வீரர்கள் 43 போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர்.

முதலாவது மற்றும் இரண்டாவது உலக யுத்தங்கள் காரணமாக 1916, 1940, 1944 ஆகிய வருடங்களில் ஒலிம்பிக் போட்டிகள் இடம்பெறவில்லை.

1980, 1984 ஆகிய வருடங்களில் அமெரிக்க ரஷ்ய பனிப்போர் காரணமாக பெருமளவு நாடுகள் ஒலிம்பிக் போட்டியை பகிஷ்கரித்திருந்தன.

இரண்டாவது நவீன ஒலிம்பிக் போட்டி 1900 ஆம் ஆண்டு பிரான்சின் தலைநகரமான பாரிஸில் நடைபெற்றது. 1904ஆம் ஆண்டு போட்டி அமெரிக்காவின் சென் லூயிஸ் நகரில் இடம்பெற்றது. இப் போட்டியில் மொத்தம் 650 வீரவீராங்கனைகள் பங்குபற்றினர். பெண்கள் முதன் முதலில் பங்குபற்றியது இப் போட்டியிலாகும். மொத்தம் பங்குபற்றிய 650 வீர வீராங்களைகளில் 580 பேர் அமெரிக்காவை சேர்ந்தவர்களாவர்.

கோடை கால ஒலிம்பிக் போட்டிகள் என்று அழைக்கப்பட்ட போட்டிகளில் இடம்பெற்ற பனிச் சறுக்கல் மற்றும் ஐஸ் ஹொக்கி ஆகிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக பனிக்கால ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன் முதலாவது போட்டி 1924 ஆம் ஆண்டு பிரான்ஸில் ஆரம்பமாகியது.

இது தவிர பாரலிம்பிகஸ் என்ற பெயரில் வலது குறைந்த அல்லது ஊனமுற்றவர்களுக்கான ஒலிம்பிக் போட்டிகள் 1960 முதல் இடம் பெற்று வருகின்றன. ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறும் அதே வருடம் பராலிம்பிக் போட்டிகளும் நடைபெறுகின்றன.

புராதன ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்பம் கி.மு.776 என கல்வெட்டுகளில் இருந்து தெரிய வருகிறது.

புராதன ஒலிம்பிக் போட்டிகள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெற்றதாகவும் ஓட்டப் போட்டிகள், குத்துச்சண்டை, மல்யுத்தம், குத்துச்சண்டையும் மல்யுத்தமும் இணைந்த ஒரு போட்டி நிகழ்ச்சி, குதிரையேற்றம். ஆகியவற்றுடன் ஒரு பாய்தல் போட்டி, பரிதிவட்டம் மற்றும் ஈட்டி எறிதல், ஓட்டப்போட்டி மற்றும் மல்யுத்தம் ஆகிய ஐந்து போட்டி அம்சங்களை உள்ளடக்கிய பென்டத்லன் என்ற போட்டி ஆகியவை இடம்பெற்றதாகவும் இந்த கல்வெட்டுகளில் இருந்து தெரியவருகிறது. வீரர்கள் நிர்வாணமாக போட்டிகளில் கலந்துகொண்டதாகவும் கூறப்படுகிறது.



நவீன ஒலிம்பிக் போட்டிகளில் இடம்பெற்ற சில குறிப்பிடத்தக்க சாதனைகள் மற்றும் நிகழ்வுகள் கீழே தரப்படுகின்றன.

### 1936ஆம் ஆண்டு பேர்லின்

ஜெஸி ஓவன்ஸ் என்ற கறுப்பு இன அமெரிக்க ஓட்ட வீரர், 100 மற்றும் 200 மீட்டர் ஓட்டப் பந்தயங்கள், நீளம் பாய்தல் ஆகிய போட்டிகளிலும், 4X100 அஞ்சலோட்டத்தில் முதலிடத்தை பெற்ற அமெரிக்க அணியிலும் பங்குபற்றி மொத்தம் நான்கு தங்கப்பதக்கங்களை வென்றார். ஜெர்மன் சர்வாதிகாரி அடோல்ப் ஹிட்லர் அமெரிக்காவின் கறுப்பின வீரர்கள் மீது மிகுந்த காட்டம் கொண்டிருந்த அந்த கால கட்டத்தில் ஹிட்லரின் முன்னிலையில் இந்த தங்கப் பதக்கங்களை ஜெஸி ஓவன்ஸ் வென்றமை குறிப்பிடத்தக்கது.


பென் ஜோன்சன்


பொப் பீமன்



ஹுசைன் போல்ட்


ஜெஸி ஓவன்ஸ்

### 1972 ஆம் ஆண்டு - மியூனிச்

1972ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் பங்கு பெற்ற வந்திருந்த இஸ்ரேலிய பளுதூக்கும் வீரர்கள் ஐவரையும், பயிற்றுனர்கள் ஆறு பேரையும் ஒலிம்பிக் கிராமத்துக்குள் நுழைந்த பலஸ்தீனத்தின் 'பிளக் செப்டம்பர்' தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றனர். இந்த கொடூர சம்பவத்தால் முழு உலகமே அதிர்ச்சியடைந்தது. ஜெர்மன் பொலிஸார் நடத்திய பதிலடி தாக்குதலில் 5 தீவிரவாதிகளும் 1 பொலிஸ்காரரும் உயிரிழந்தனர். உயிரிழந்த இஸ்ரேலிய வீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் போட்டி தொடர்ந்து நடைபெற்றது.

### 1976 ஆம் ஆண்டு - மொன்ட்ரியல்

ருமேனிய ஜிம்னாஸ்டிக் வீராங்கனையான 14வயது நிரம்பிய நடியா கொமேனகி இப்போட்டிகளின் போது குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்தினார். ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் வீர வீராங்கனைகளின் குதித்தல், பாய்தல், சரியாக நிலை நிறுத்திக் கொண்டு போட்டியை முடித்துக் கொள்ளல் ஆகிய அம்சங்களுக்கு பத்துக்கு எத்தனை புள்ளிகள் என்று குறிப்பிடுவதுண்டு. வீரர்கள் விடும் சிறிய தவறுகளுக்கு கூட புள்ளிகள் கழிக்கப்பட்டு மொத்த புள்ளிகள் கணிக்கப்படும். இதில் 10க்கு 10புள்ளிகள் என்பது நினைத்துப் பார்க்க முடியாத துல்லியம் இருந்தால் மட்டுமே எட்டப்படலாம். நடியா இப்போட்டிகளின் போது 10 அம்சங்களில் 7 அம்சங்களில் 10க்கு 10 என்ற புள்ளிகளை தொட்டு அதிசயம் நிகழ்ச்தினார். அத்துடன் உலகப்புகழ் மற்றும் உலக மக்களின் மொத்த அபிமானத்தையும் அவர் தனது திறமையின் மூலம் ஈட்டிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.


நடியா

### 1968 ஆம் ஆண்டு - மெக்ஸிகோ

ஒலிம்பிக் போட்டிகளின் ஓட்ட மற்றும் தடகளப் போட்டிகளில் உலக சாதனைகள் நிகழ்த்தப்படுவதுண்டு. ஆனால் இவற்றில் சில சாதனைகள் மிகவும் அபூர்வமாக அமைந்து விடுவது உண்டு. இவ்வாறான ஒரு உலக சாதனை 1968இல் மெக்ஸிகோ ஒலிம்பிக் போட்டியில் நிகழ்த்தப்பட்டது. பொப் பீமன் என்ற கறுப்பின அமெரிக்க வீரர் நீளம் பாய்தலில் இந்த அபூர்வ உலக சாதனையை நிகழ்த்தினார். நீளப் பாய்தலில் வழங்கப்படும் மூன்று வாய்ப்புகளில் இரண்டு வாய்ப்புகளை முறையற்ற பாய்ச்சல் காரணமாக இழந்திருந்த பொப் பீமனுக்கு இன்னும் ஒரு பாய்ச்சல் மாத்திரமே மீந்திருந்து. தேற மாட்டார் என்று நினைத்திருந்த போது அவரது மூன்றாவது பாய்ச்சல் முழு உலகையும் ஸ்தம்பிக்கச் செய்து விட்டது.

ஏற்கனவே இருந்த உலக சாதனையை விட இரண்டு அடிக்கு மேல் அதிகமாக 8.90மீட்டர் தூரம் பாய்ந்த பொப் பீமன் நாட்டிய அந்த உலக சாதனை 23 வருடங்களின் பின் 1991இல் மற்றொரு கறுப்பு இன அமெரிக்க வீரர் மைக் பவலினால் முறியடிக்கப்பட்டது. 8.95 மீட்டர் என்ற மைக் பவலின் நீளப் பாய்தல் சாதனை இன்னும் தொடர்கிறது.

**ராம்ஜி**

(31ஆம் பக்கம் பார்க்க)

**அட்டையை அலங்கரிப்பவர்**
**கார்த்திகா**



**ஆகஸ்ட் மாத வானவில் 01ம் திகதி முதல் கடைகளில்...**

வண்ண வானவில்
Vanna Vaanavil
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு
- பாரதிதாசன்

முகவரி:
ஆசிரியர்,
வண்ண வானவில்
த.பெ. இல. 1218
கொழும்பு

Address:
Editor,
Vanna Vaanavil,
P.O. Box No: 1218
Colombo

தொலைபேசி: 0112429275
E-mail: vannavaanavil@gmail.com

விற்பனை தொடர்பாக தொடர்பு கொள்ள: 0112333924, 0112429378, 0112429381



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவியரை மயக்கிய வகுப்பறைப் பேய்



ரிஷி

இரவு வேளைகளில் படுக்கை அறையில் ஒரு பேய் பதுங்கி இருப்பதாகவும் அது தன்னைத் துரத்தி வருவதாகவும் கூறிய அவள் அந்த அறைக்குள் போவதையே தவிர்த்தாள். சடங்குகள், பரிகாரங்கள் செய்யப்பட்டன. எவையுமே அவளை சமாதானப்படுத்தவில்லை. திருமண இரவு முதல் தொடர்ந்த இந்தப் பிரச்சினையால் அவர்களால் தாம்பத்திய உறவு வைத்துக் கொள்ள முடியவில்லை. முதல் மனைவியின் பழிதீர்க்கும் ஆவியின் வேலையே இது என்றே அவ் வீட்டார் நம்பினார்கள். முதலில் இரவில் மாத்திரம் பயப்பட்ட அந்த இளம் மனைவி பின்னர் பகலிலும் வெறித்த பார்வையுடன் வீட்டை வலம் வரத் தொடங்கினாள். பேசுவதும் ஈடுபாட்டுடன் எதையும் செய்வதிலும் அவளுக்கு ஆர்வம் குன்றியது. சில மாதங்களில் அவள் மனநோயளியாகிப் போனாள். இதனால் கணவனும் நிம்மதியிழந்து போனாள்.

மாந்திரிகத்துக்கும், மந்திரங்களுக்கும் கட்டுப்படாத இந்தப் பழிவாங்கும் பேயை என்ன செய்வது? என்ற கவலையில் ஆழ்ந்துபோன அக்குடும்பத்தவர்களிடம் ஒருவர், ஏன் நீங்கள் ஒரு மனநல மருத்துவரிடம் இந்தப் பெண்ணை அழைத்துச் சென்று ஆலோசனை கேட்கக் கூடாது? என்று ஒரு யோசனையை முன்வைத்தார்.

இதையடுத்து ஒரு மனநல மருத்துவரை அக்குடும்பத்தார் அணுகினார்கள். அவரிடம் பிரச்சினையை சொன்னார்களே தவிர பின்னணிக் காரணங்களையோ யூகங்களையே தெரிவிக்கவில்லை.

மருத்துவர் அப் பெண்ணை ஆழ்நிலை உறக்கத்துக்கு ஆளாக்கி நடந்த அத்தனை விஷயங்களையும் அவள் மூலமாகவே அறிந்து கொண்டார்.

அதன் பின்னர் உளவியல் சிகிச்சை ஆரம்பமானது பேய், ஆவி பற்றிய நம்பிக்கைகளை கலைந்து, புதிய கணவருடன் அனுசரணையாக வாழ்க்கை நடாத்துவது பற்றிய அறிவுரைகளைத் தந்து மருத்துவர் அவளை படிப்படியாகக் குணமாக்கினார். கணவரைத் தனியாக அழைத்து தன் புதிய மனைவியுடன் குடும்பம் நடத்துவது எப்படி என்பது தொடர்பாக ஆலோசனைகளை வழங்கினார். இறந்த மனைவி பற்றி குறிப்பிட்டுப் பேச வேண்டாம் என்று கூறினார்.

அத்தம்பதியினர் அதன் பின்னர் பழைய வாழ்க்கையை மறந்து சந்தோஷமாக வாழத் தொடங்கினர்.

பெண்கள் பாரம்பரிய நம்பிக்கைகளை அப்படியே கேள்வி கேட்காமல் பின்பற்றும் இயல்பு கொண்டவர்கள் என்பதோடு மூட நம்பிக்கைகள் மீதும் சந்தேகம் கொள்ளமாட்டார்கள். அரசியல் கட்சிகள் இளைஞர்களை குறிவைப்பது போலவே மதங்கள் பெண்களை குறி வைப்பதன் நோக்கமே, அவர்கள் பெரும்பாலும் சந்தேகப்படுவதில்லை என்பதால்தான்.

இங்கே இன்னொரு இளம் பெண்ணின் உளவியல் பிரச்சினையைப் பார்ப்போம்.

குழந்தை உளவியல் மற்றும் பதின்ம பருவத்து உளவியல் என்பது பல விஷயங்களை உள்ளடக்கிய முக்கியமான உளவியல் துறை. ஒரு குழந்தை மூன்று வயது வரை விரல் சூப்பலாம். அது ஏழு வயதிலும் விரல் சூப்புமானால் ஏதோ ஒரு மனக் கோளாறினால் அல்லது குறைபாட்டினால் அக்குழந்தை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அர்த்தம். விரல் சூப்புவது என்பது தனது பயத்தை சமாளிப்பதற்காக ஒரு துணையைத் தேடிக் கொள்வதற்கு சமமானது. சிகரட் பழக்கமும் இப்படித்தான் தொற்றிக் கொள்கிறது.

எதையேனும் சிந்திக்கும் போது 'ஆலோசனை' சொல்ல சிலருக்கு ஒரு துணை தேவைப்படுகிறது. எவருக்காகவேனும் ஓரிடத்தில் காத்திருக்கும் போது கூட இருக்க ஒரு துணை தேவைப்படுகிறது. தனியாக இருக்கும் போதும், பிரச்சினைகள் ஏற்படும்போதும் அல்லது மகிழ்ச்சியைக் கொண்டாட நினைக்கும் போதும் ஒரு துணை தேவைப்படுகிறது.

பலருக்கு சிகரட் தான் அந்தத் துணை. குற்றச் செயல்களிலும் பாலியல் குற்றங்களிலும் தீவிரமாக ஈடுபடுபவர்கள் சிறுவயதில் நீண்ட காலமாக விரல் சூப்பும் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள் என்பது கண்டறியப்பட்டிருக்கிறது.

டீன் ஏஜ் பருவத்தை அடையும் பருவமும், டீன்ஏஜ் பருவமும் அடிப்படையில் பல சிக்கல்கள் நிறைந்தவை. எதைச் செய்வது, எதைச் செய்யக் கூடாது; எதை நம்புவது, யாரை நம்புவது என்று ஏகப்பட்ட பிரச்சினைகள். ஏராளமான புதிய விஷயங்களையும், கொஞ்சம் சுதந்திரத்தையும், திறந்த ஒரு உலகத்தையும் அறியும் பருவம் இது.

இங்கே, பெற்றோர்களின் வளர்ப்பு முறை, அவர்களின் அன்பு பூரணமாகக் கிடைக்காதது, பெற்றோரின் மித மிஞ்சிய கண்டிப்பு மற்றும் பல்வேறு அச்ச உணர்வுகள் அவர்களில் வித்தியாசமான இயல்புகளைத் தோற்றுவிக்க முடியும்.

பாடசாலையில் டீச்சர் பயம், வீட்டில் பெற்றோரின் கண்டிப்பு, ஏனைய மாணவர்களை விட மதிப்பெண் குறைய எடுத்தால் அதனால் எழக் கூடிய தாழ்வு மனப்பான்மை, எதற்கெடுத்தாலும் தயங்குவதால் கிடைக்கும் கேலிப் பேச்சுகள் என்பனவற்றோடு பேய், பிசாசு, ஆவி போன்றவற்றில் ஏற்படும் அதீத நம்பிக்கை எனப் பல சிக்கல்களை பதின்ம பருவத்தினர், குறிப்பாகப் பெண்கள், எதிர்கொள்கிறார்கள்.

பாடசாலை வகுப்பறை ஒன்றில் பேய் நடமாட்டம் இருபதாகவும் பேயின் பார்வையால் மாணவிமார் அடிக்கடி மயக்கம் போட்டு விழுவதாகவும் ஒரு பிரச்சினை பாடசாலையொன்றில் ஏற்பட்டது. இதனால் அந்த வகுப்பறையையே இழுத்து பூட்டி விட்டார்கள்.

பின்னர் இவ்விவகாரம் பற்றி ஆராய மனநல மருத்துவர் ஒருவரை பாடசாலை நிர்வாகம் அணுகியது. அவர் பாடசாலைக்குச் சென்று உண்மையில் என்ன நடந்தது என்பதை விசாரிக்க தொடங்கினார்.

அந்த வகுப்பறையில் அமர்ந்திருந்த மாணவி ஒரு நாள் திடீரென மயங்கி விழுந்தாள். அவளுக்கு வலிப்பு வந்திருந்தது. மாணவியை நிர்வாகம் வீட்டுக்கு அனுப்பி வைத்தது. மறுநாள் மற்றொரு மாணவி அந்தக் கதிரையில் அமர்ந்து பாடம் கேட்டுக் கொண்டிருந்தாள் அவளும் திடீரென மயங்கிக் கீழே விழுந்தாள். மூன்றாவது நாள் மற்றொரு மாணவி அதே கதிரையில் அமர்ந்திருந்தபோது அவளுக்கும் மயக்கம் ஏற்பட்டது. இதனால் களேபரமடைந்த பள்ளி நிர்வாகம் வகுப்பறையை இழுத்துப் பூட்டிவிட்டது!

முதலில் பேய், பிசாசு எல்லாம் கிடையாது என்று பள்ளி நிர்வாகத்திடமும் ஆசிரியர்களிடமும் அவர் கூறிப் பார்த்தார். எனினும் அடுத்தடுத்து நடைபெற்ற சம்பவங்கள், ஏதோ ஒரு அமானுஷ்ய சக்தியின் செயலாக இருக்குமோ என்ற சந்தேகத்தை அவர்களிடம் தோற்றுவித்திருந்தது.

மருத்துவர், முதலில் மயங்கி விழுந்த மாணவியை அழைத்து சிகிச்சைக்கு தயார் படுத்தினார். மாணவியை ஆழ்நிலை உறக்கத்துக்கு கொண்டு சென்றார்.

அம் மாணவி உண்மைகளைச் சொல்லத் தொடங்கினாள்.

ஒருநாள் அம் மாணவி படிப்பதற்காகத் தன் தோழி வீட்டுக்குச்' செல்வதாகச் சொல்லி வெளிக் கிளம்பினாள். ஆனால் அன்று தோழி வீட்டில் ஏதோ விசேஷம். உறவினர்கள் வந்திருந்தார்கள். கொஞ்சநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அவள்' தன் வீட்டுக்குத் திரும்பினாள்.

வீட்டின் கதவு மூடப்பட்டிருந்தாலும் பூட்டியிருக்கவில்லை. மெல்லத் திறந்த படி உள்ளே சென்றாள் அம்மாணவி. அம்மாவைக் காணவில்லை. குரல் கொடுக்க நினைத்த போது படுக்கையறையில் இருந்து குசுகுசுவெனப் பேசும் குரல் கேட்டது. அவள் திரைச் சீலையை விலக்கி உள்ளே எட்டிப் பார்த்தபோது அவளது அம்மா இன்னொரு ஆளுடன் அலங்கோலமாக படுக்கையில் கிடப்பதைப் பார்த்து அப்படியே விக்கித்துப் போனாள்.

அவளுக்கு அக் காட்சி பேரிடியாக அமைந்தது. பின் புறமாக அடியெடுத்து திரும்பி வாசலுக்கு பதைக்கும் நெஞ்சத்துடன் வந்தாள். தெருவை எட்டிப் பார்த்தபோது அவளது தந்தை மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

அம்மாவை இந்த நிலையில் அப்பா பார்த்துவிட்டால்...?

ஏதோ மூளையில் வெடித்துச் சிதறுவதைப் போல அவள் உணர்ந்தாள். அடுத்த கணம் வாசல் படியில் அம்மா என்று கத்தியபடியே அவள் மயங்கி விழுந்தாள். அவள் உருண்டு விழவும் உடையை சரி செய்தபடி அம்மா வாசலுக்கு வரவும் அவள் கணவன் மோட்டார் சைக்கிளை வாசலில் நிறுத்தவும் சரியாக இருந்தது.

அம்மாவுடன் இருந்த ஆள் பின் கதவால் தப்பி ஓடிப் போனான். மூர்ச்சையான மகளைக் கண்ட அப்பா அவளைத் தூக்கி விராந்தையில் கிடத்தினார். அம்மா தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் தெளித்தார்.

ஒரு பெரும் குடும்ப விபத்தை தமது மகள் மூர்ச்சையானதன் மூலம் தவிர்த்திருக்கிறாள் என்பது அந்த அப்பாவி அப்பாவுக்குத் தெரியாது!


வண்ண வானவில்

***வண்ண வானவில் விளம்பரக் கட்டணங்கள்***

| | |
|---|---|
| முழுப்பக்கம் (கறுப்பு வெள்ளை) | – ரூ 25,000.00 |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | – ரூ 28,000.00 |
| கறுப்பு மற்றும் இரண்டு கலர் | – ரூ 30,000.00 |
| முழு வர்ணப் பக்கம் | – ரூ 32,000.00 |

**சாதாரண விளம்பரங்கள்**

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | – ரூ 125.00 கலம் செமீ |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | – ரூ 140.00 கலம் செமீ |
| கறுப்பு இரண்டு கலர் | – ரூ 150.00 கலம் செமீ |
| முழு வர்ணம் | – ரூ 160.00 கலம் செமீ |

12% வட் வரி சேர்க்கப்படும்.

தொடர்பு கொள்க : 0112429367
ப(f)க்ஸ் : 0112429320



வண்ண வானவில்

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.30 |
| 1 வருட சந்தா | ரூ.360.00 |
| 6 மாத சந்தா | ரூ.180.00 |
| 3 மாத சந்தா | ரூ.90.00 |

சந்தாவை செலுத்தியதும் நாம் உங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்வோம் எமது ஏஜண்ட்டிடம் இதனை பெறலாம்.

**தபால் மூலம் பெறுவதற்கு:**

| | |
|---|---|
| 1 வருட சந்தா | ரூ.552.00 |
| 6 மாத சந்தா | ரூ.276.00 |

மேலும் விபரங்களுக்கு:
011-2319760, 2429444
மின்னஞ்சல்:
subscription@lakehouse.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழ் திரையுலகம்



தம்பி ஐயா தேவதாஸ்

*ஈழத்து திரைப்பட வரலாற்றை தொகுத்தளித்ததன் மூலம் மிகப்பெரும் பணியை செய்து முடித்திருக்கும் தம்பி ஐயா தேவதாஸ் தன் இலங்கை திரைப்பட அனுபவங்களை இங்கே சுவையாகப் பதிவு செய்கிறார்.*

# காட்டில் எரிந்த நிலாவாகிப்போன

# இளைய நிலா

இளைய நிலா மாஸ்டர் கொப்பி அப்படியேதான் இருக்கிறது. அது சேதமடையவில்லை. பல முயற்சிகள் செய்யப்பட்ட போதிலும் ஏதோ காரணங்களால் இளைய நிலாவை 30 வருடங்களின் பின்னரும் கூட திரையிட முடியாத நிலை. அதன் அருமையான பாடல்களைக் கூட ஒலிபரப்ப முடியாத நிலை! என்ன கொடுமை பார்த்தீர்களா?

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற கலவரம் இலங்கையின் பலதுறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அது சினிமாத் துறையையும் விட்டு வைக்கவில்லை. அக்காலத்தில் தமிழ்த் திரைப்படங்களைப் போலவே சிங்களப் படங்கள் பலவும் தீயில் அழிந்தன. அப்பொழுது திரைக்குவரத் தயாராகியிருந்த இரண்டு தமிழ்த் திரைப்படங்களும் தீக்கு இரையாகின. பிரபல சிங்களத் திரைப்பட இயக்குநர் லெனின் மொறாயஸ் இயக்கிய 'நெஞ்சுக்குத் தெரியும்' என்ற படமும் கணேசலிங்கன் தயாரித்த 'எனக்கென்று ஒரு உலகம்' என்ற படமுமே அவை. இவ்விரண்டு படங்களும் முழுமையாக தயாரிக்கப்பட்டு ஹெந்தளை விஜயா ஸ்ரூடியோவில் வைக்கப்பட்டிருந்தபோதே அவை எரியூட்டப்பட்டன.

ஹெந்தளை விஜயா ஸ்ரூடியோ. கே.குணரெத்தினத்துக்கு சொந்தமானது. ஆனால் இன்னுமொரு தமிழ்ப்படம் டெல்மன் என்பவரின் ஸ்ரூடியோவில் இருந்தமையால் அழிவில் இருந்து தப்பித்துவிட்டது. அப்படித்தப்பிய படம்தான் 'டென்மார்க் சண்' தயாரித்த 'இளைய நிலா' என்னும் படமாகும். தீயில் தப்பிய இத்திரைப்படம் மனித அரக்கர்களிடமிருந்து தப்பித்து இதுவரை திரைக்கு வரமுடியாமல் இருக்கிறது. 'இளைய நிலா' திரைப்படம் இப்பொழுதும் பூரண திரைப்படமாகவே இருக்கிறது. தயாரிப்பாளர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக திரையேற்ற முடியாமல் தூங்கிக் கொண்டிருக்கிறது.

இப்படத்தில் இடம் பெற்ற பாடல்கள் இனிமையானவை மட்டுமல்ல; முக்கியமானவையும் கூட. இப்படத்தின் தயாரிப்பாளர் 'டென்மார்க்சண்' ஒரு சிறந்த இசையமைப்பாளர் என்பதால் இப்படத்துக்காக அவர் உருவாக்கினார். சிறந்த கலைஞர்களை அவர் உருவாக்கினார். சிறந்த கலைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களைக் கொண்டு பாடுவித்தார்.

இலங்கையில் உருவான இப்படப் பாடல்களை பிரபல தென்னிந்தியப் பாடகர்கள் பாடியிருக்கின்றனர் என்பது முக்கியமான விடயம். சும்மா சாதாரணமான பாடகர்கள் பாடவில்லை. பிரபல தென்னிந்தியப் பாடகர்களான எஸ்.பி.பாலசுப்பிரமணியமும் எஸ்.பி.சைலஜாவும் பாடியிருக்கின்றனர்.

பிரபல இலங்கை வானொலி அறிவிப்பாளரும் கவிஞருமான இராஜகுரு சேனாதிபதி கனகரெத்தினம் இப்படத்துக்கான பாடல்களை எழுதினார்.

இ.சே.கனகரெத்தினம் இலங்கை வானொலியில் பல மெல்லிசைப் பாடல்களை எழுதியிருக்கிறார். அவரது பாடல்களில் 'கண்ணன்' 'ராதை' என்ற சொற்கள் அடிக்கடி வருவதை அவதானிக்கலாம். வானொலிக்கு மெல்லிசைப் பாடல்கள் எழுதுவதனால் ஒரு கட்டுப்பாடுகளுக்குள் நின்றே எழுதவேண்டும். விரசமான சொற்கள் எதுவும் வரக்கூடாது. ஆனால் சினிமாவுக்குப் பாட்டெழுதும் போது இவ்வாறான கட்டுப்பாடுகள் குறைவு.

'இளையநிலா' படத்துக்கு பாட்டெழுதும் வாய்ப்பு இ.சே.கனகரெத்தினத்துக்குக் கிடைத்தது. விடுவாரா கவிஞர்? 'முத்தம் ஒன்று வேண்டும்' என்று தனது முதலாவது பாடலை ஆரம்பித்து விட்டார். அடுத்த பாடல்களில் 'கட்டிப்பிடி' 'எட்டிப்பிடி' என்றே எழுதத் தொடங்கிவிட்டார். கவிஞரின் முதலாவது பாடல் இப்படித்தான் ஆரம்பமாகிறது.

'முத்தம் ஒன்று வேண்டும் முத்தமிழில் தோன்றும் முக்கனியின் சாரம் முத்தமிடும் நேரம்.'

இது தான் பாடலின் பல்லவி

சினிமாப்பாடல் ஒன்று சிறப்புற அமைய வேண்டுமானால் அதன் பல்லவி நல்ல முறையில் அமைய வேண்டும் என்பார்கள்.

இ.சே.கனகரெத்தினமும் பொருத்தமான பல்லவியைத்தான் எழுதியிருக்கிறார்.

'டென்மார்க் சண்' நன்றாகவே இசையமைத்திருந்தார். எஸ்.பி.பாலசுப்பிரமணியமும் இனிமையாகவே பாடியிருந்தார். ஏறக்குறைய இந்திய தமிழ்ச் சினிமாப் பாடலைப் போலவே அமைந்திருக்கிறது. ஆரம்பத்தில் இப்பாடல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. 'இளைய நிலா' படத்தின் அந்தப் பாடல் பல்லவியில் மட்டுமன்றி அடுத்துவரும் சரணங்களிலும் தனது வார்த்தை ஜாலங்களை அள்ளி விளையாடியிருக்கிறார் கவிஞர் கனகரெத்தினம் முதல் சந்தர்ப்பமல்லவா? விடுவாரா?

அடுத்து வரும் சரணமும் அருமையாக அமைந்திருக்கிறது.

'மேகத்திரோர் மேகம்
மேனியென மோதும்
மோகத்திலே கூடும்
கூடியபின் நாளும்
பூவினிலோர் வண்டு
போதையது கொண்டு
தேனையது உண்டு
தேடுவது கண்டு'

என்று இடம்பெறுகிறது முதலாவது சரணம். இரண்டாவது சரணமும் பரவாயில்லை. அது இப்படி ஆரம்பமாகிறது.

'கடலோடு வானம் தொடுவானில் சேரும் அதுபோலும் உள்ளம் அதுபோலத் தேடும்'

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் தனக்கே உரித்தான நளினத்துடன் இனிமையாகப் பாடியுள்ளார்.

அடுத்த பாடல் கதாநாயகனும் கதாநாயகியும் சேர்ந்து பாடும் காதல் பாடல் எஸ்.பி.பாலசுப்பிரமணியமும் எஸ்.பி.சைலஜாவும் சேர்ந்து பாடியிருக்கின்றனர். கவிஞர் இ.சே.கனகரெத்தினம், கண்ணன் மீது பக்தி கொண்டவர். தனது சினிமாப் பாடலில் கண்ணனைக் கொண்டு வந்தார். கதாநாயகி பாடலின் பல்லவியை இப்படி ஆரம்பிக்கிறார்.

'உன்னையின்றி ராதை இங்கு ஏது கண் கலந்து காதல் கொள்ளும் போது கண்மணி போல் இங்கு ஒரு மாது காதலுக்கு நாலுகண்கள் தூது'

எதுகை மோனை அருமையாக அமைந்த பாடல் தொடரும் பல்லவியை எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாடுகிறார்.

'ராதையின்றி கண்ணன் இங்கு ஏது கண்கலந்து காதல் கொள்ளும்போது ராணி என் வாழ்வில் நீ தானே ராஜா எப்போதும் நான் தானே'

என்று அமைகிறது.

இப்படி இனிமையான பல பாடல்கள் 'இளைய நிலா'வில் இடம் பெற்றன. ஆனால் பாடல்களை முழுமையாக இரசிக்க, படம்தான் வெளிவரவில்லை. பாடல்களை வானொலியில் ஒலிபரப்பினால் கேட்கலாம் என்றால் அதுவும் இல்லை. படம் வெளிவரவில்லை; அதனால் பாடல்களை ஒலிபரப்ப முடியாது என்று நிறுத்தி விட்டார்கள். எனவே 'இளைய நிலா' படத்தையும் பார்க்க முடியவில்லை, பாடல்களையும் கேட்க முடியவில்லை. எல்லாமே விழலுக்கு இறைத்த நீராகப் போய்விட்டது.

'இளைய நிலா' படத்தில் இந்திய நடிகர்களும் இலங்கை நடிகர்களும் நடித்தனர். கதா நாயகனாக காமினி பொன்சேகா நடித்தார். கதாநாயகிகளாக தென்னிந்திய நடிகை ஸ்வப்னாவும், சங்கீதாவும் நடித்தார்கள். தியாகராஜன் வில்லனாக நடித்தார்.

'இளைய நிலா' தயாரிக்கப்பட்டது 1982ஆம் ஆண்டில். இந்த வருடத்தோடு அந்தப்படத்துக்கு 30 வயதாகிறது. இருந்தும் கூட திரைப்படத்தை திரையிடுவதற்கு உரியவர்கள் பல வழிகளிலும் முயன்ற போதும் அது கைகூடாமல் போய்விட்டது. திரைப்படம் இப்பொழுது வேறு தயாரிப்பாளரிடம் இருக்கிறதாம்.

'இளையநிலா' படத்தில் கதாநாயகனாக நடித்த காமினி பொன்சேகா இறந்து விட்டார். வில்லனாக நடித்த தியாகராஜனுக்கு வயது போய்விட்டது. ஸ்வப்னாவும், சங்கீதாவும் எங்கே போனார்கள் என்று தெரியவில்லை. படத்தை இயக்கிய டென்மார்க் சண், டென்மார்க்கில் வாழ்கிறார். 'இளைநிலா' திரைப்படம் காட்டில் எரிந்த நிலாவாக மாறிவிட்டது.



இளையநிலா படத்தில் தியாகராஜனும் காமினி பொன்சேகாவும்



பாலசுப்பிரமணியம்

## அப்பாவுக்கு என்ன தெரியும்? - தந்தையைப் பற்றி மகன்!

5 வயது : என் தந்தையால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை

7 வயது : என் தந்தைக்குப் பல விஷயங்களைப் பற்றி நன்கு தெரியும்

10 வயது : என் தந்தைக்கு எல்லா விஷயங்களைப் பற்றியும் தெரியாது.

12 வயது : என் தந்தைக்கு ஒன்றுமே தெரியாது.

14 வயது : அவரா? அவருக்குக் காலம் மாறியது எங்கே புரிகிறது?

21 வயது : கிடக்கிறார் அவர். அவரிடம் போய் யோசனை கேட்பதா?

35 வயது : ஏதோ கொஞ்சம் தெரியும்.

40 வயது : அவர் என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதில் தப்பில்லையே.

45 வயது : அவரின் யோசனையைக் கேட்டு பின் முடிவு எடுக்கலாமே.

50 வயது : என் தந்தையார் இது போன்ற விஷயங்களில் எவ்வளவு சிறப்பாகத் தீர்மானம் எடுப்பார் தெரியுமா?

55 வயது : அவர் இல்லாதது உண்மையிலேயே பெரிய கஷ்டமாக இருக்கிறது. அவரின் ஆலோசனையைக் கேட்க முடியாமல் போனது பெரிய நஷ்டம்.

60 வயது : அவருடைய அறிவும் அனுபவமும் எங்கே? நான் எங்கே...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கைபேசியில் தொங்கும் அசகாய சூரர்கள்!

கார்த்திகேசு

நான் பஸ்ஸில் ஏறி ஜன்னலோரமாக அமர்ந்து கொண்டேன். எதிர் இருக்கை ஜன்னலோரமாக ஒரு இளம் பெண் அலைபேசியை காதில் இடுக்கிக் கொண்டு முணுமுணுத்துக் கொண்டிருந்தாள். நான் ஐம்பது கிலோ மீட்டர் தூரம் பயணிக்க வேண்டியவன். அப்படி இப்படி என்று இரண்டு மணித்தியாலம் எடுத்துவிடும். டிக்கட் வாங்கிய கையோடு தூங்கிப் போனேன். சுமார் ஒரு மணித்தியாலம் கழிந்து தூக்கம் விழித்தேன். என்ன ஆச்சரியம்! அந்த பெண் தொடர்ந்தும் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தாள்! அவளுக்கு கை வலிக்காதா, காது நோகாதா என்று எண்ணிக் கொண்டேன். நிச்சயம் அது காதலுடனான உரையாடலாகத்தான் இருக்கும். அங்க பாவங்கள் மூலம் அறிய முடிந்தது. இரண்டு மணித்தியாலம் கடந்த பின்னரும் அவள் பேசுவதை நிறுத்தவில்லை.

பஸ்சில் பயணம் செய்யும் போது ஆண்களை விட பெண்களே அதிகம் தொலைபேசிகளில் உரையாடுகிறார்கள் என்பதை உங்களால் அனுமானிக்கக் கூடும். ஆனால் அவர்களுடன் உரையாடும் ஆண்கள் பெரும்பாலும் பஸ்களில் பயணம் செய்வதாகத் தெரியவில்லை. அப்படியானால் இந்த ஆண்கள் எங்கிருந்துதான் இப்பெண்களுடன் ஈடு கொடுத்து உரையாடுகிறார்கள்? தெரியவில்லை! எனினும் ஃபோன் கம்பனிகள் இந்தப் பெண்களுக்கு ஸ்பெஷல் போனஸ் ஏதேனும் கொடுக்கத்தான் வேண்டும். வாழ வைக்கும் தெய்வங்கள் அல்லவா!

ஒரு நாள், ஃபுட்போர்டில் நிரம்பி வழிகின்ற அளவுக்கு சனக்கூட்டம். ஒரு இளைஞன் ஒரு கையால் ஃபுட்போர்ட் பைப்பை பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தான். ஒரு கால் உள்ளே, மற்றது வெளியில். அந்த நிலையிலும் தோள்பட்டையை உயர்த்தி காதருகே ஃபோனை இடுக்கிக் கொண்டு சுவாரசியமான உரையாடலில் ஈடுபட்டிருந்தான் அவன். அவனது ஆபத்தான நிலையை புரிந்து கொள்ளாத கண்டக்டர் அவனிடம் டிக்கட் எடுக்கச் சொன்னார். நம் கதாநாயகன் அசரவில்லை. மற்ற கையால் ஷேர்ட் பொக்கட்டுக்குள் கைவிட்டு தாள்களை உருவினான். பத்து ரூபாய் இருபது ரூபாய் நோட்டுகள் வெளியே வரவே உற்றுப் பார்த்து விட்டு அவற்றை மெதுவாக பொக்கட்டுக்குள் வைத்துவிட்டு நன்றாக குனிந்து பார்த்து ஒரு ஐம்பது ரூபா தாளை உருவி எடுத்து கண்டக்டரிடம் தந்தான். இத்தனைக்கும் மத்தியில் அவன் தோள்பட்டையில் இடுக்கிய ஃபோனில் சுவாரசியமாகப் பேசுவதை நிறுத்தவேயில்லை! டிக்கட்டை அவனிடம் மீதி பணத்துடன் தந்தபடி இரண்டு ரூபா இருக்கா? என கண்டக்டர் கேட்டபோது, மீதியை பொக்கட்டில் வைத்து விட்டு காற்சட்டைப் பைக்குள் கையை விட்டுத்துழாவி இரண்டு ரூபாவை எடுத்தும் தந்தான் அந்த அசாகய ஃபோன் சூரன்!

என் அலுவலக நண்பன் அவன். அவனிடம் ஒரு கைபேசி உள்ளது. எப்போதாவது ஒரு முறை தான் அதை உபயோகிக்கக் கண்டிருக்கிறேன். என் மேசைக்கு வரும் அவன் இலக்கம் எழுதிய ஒரு துண்டை நீட்டுவான். அலுவலக தொலைபேசியில் ஓசியில் பேசுவதற்காக! ஒரு நம்பரை தந்து அழைப்பை எடுத்துத் தரும்படிக் கேட்பான். அவசர, அவசிய அழைப்புகளுக்கு மறுப்பு சொல்வதில்லை. அவனுக்கு அழைப்பை ஏற்படுத்திக் கொடுத்தேன் ஒரு நாள்...

சாவகாசமாக நாற்காலியில் சாய்ந்து கொண்டு, "மாடு கன்று போட்டு விட்டதா? பசுவா, காளையா? நாய் நொண்டிக் கொண்டிருந்ததே. டொக்டரிடம் காட்டினீர்களா? இங்கே என்றால் இரண்டு நாளா நல்ல மழை... அங்கே வெயில் அடிக்கிறதா? எங்கள் வீட்டு நாய்க்குட்டி அழகான ரெண்டு குட்டி போட்டிருக்கு..." என்று ஆரம்பித்தான். தொடர்ந்து 25 நிமிடங்களாக மனிதர்களையும் மிருகங்களையும் சுகம் விசாரித்தபடி இருந்தான். நான் பற்களைக் கடித்துக் கொண்டேன்.

ஒரு வாரத்தின் பின்னர் நம்பர் துண்டை நீட்டினான். முடியாது என்று சொல்ல இயலாததால் நம்பர் எடுத்துக் கொடுத்தேன். மீண்டும் அதே கதைதான். அந்த வீட்ட மாமி மாமி வீட்டுப் பிரச்சினைகள். சின்னம்மா மகள் திருமண வயதைக் கடந்து வீட்டில் இருப்பது. நாய்க்குட்டி இறந்து போனது என்று ரொம்பவும் 'முக்கியமான' மெட்டர்களைத் தான் ஓசி டெலிபோனில் அலசினான், அதுவும் நான்கு பேர் கேட்கக் கூடியதாக. இப்போது என்யோசனையே, இவனிடம் இருந்து கழன்று கொள்வது எப்படி என்பதுதான்!

ஒரு தடவை பஸ்சில் எனக்கு பின்னால் அமர்ந்திருந்தவர் தொலைபேசி அழைப்பை எடுத்து ஒருவரிடம் சீரியசாக பேசிக் கொண்டிருந்தார். தன் ஃபோனை ஓப் செய்த அவர் மீண்டும் பேசத் தொடங்கினார். உரத்த குரலில் அவர் பேசியதால் என்ன பேசுகிறார் என்பதை என்னால் கேட்கக் கூடியதாக இருந்தது.

அப்போதுதான் எனது இருக்கையில் இருந்து மூன்று இருக்கைக்கு அப்பால் அமர்ந்திருந்த ஒருவரும் தொலைபேசியில் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

பின்னால் இருந்தவர் "நான் இப்போது கொழும்பில் தான் இருக்கிறேன்... பம்பலப்பிட்டிக்கு போய்க் கொண்டிருக்கிறேன்..." என்றதும் மறுமுனையில் இருந்தவரும் தானும் பம்பலப்பிட்டிக்குத் தான் போய்க் கொண்டிருப்பதாக கூறியிருப்பார் போலும்.

"அட, நீங்களும் அங்கதான் போறீங்களா? இப்போ எங்க இருக்கீங்க?" என்றதும் அவர் கோல்பேஸ் ஹோட்டலை பஸ் தாண்டிக் கொண்டிருக்கிறது என்று கூறியிருக்க வேண்டும். இவர்,

"அட நானும் அந்த இடத்தைத் தானே தாண்டிக் கொண்டிருக்கிறேன்!" என்றார். எனக்கென்னவோ இருவரும் ஒரே பஸ்ஸில் அமர்ந்து விஷயம் தெரியாமல் பேசிக் கொண்டிருப்பது மாதிரித் தோன்றியது. முன்சீட்டில் அமர்ந்திருந்தவர் என் பக்கமாகத் திரும்பி,

"ரெண்டு பேரும் ஒரே பஸ்சில் இருந்தபடி பேசிக்கொண்டிருப்பதை அவதானித்தீர்களா?" என்று கூறிச் சிரித்தபோது வேடிக்கை உறுதியானது. இதை அவதானித்து நின்று கொண்டிருந்த ஒரு பயணி, பின்னால் இருந்தவரிடம் விஷயத்தைப் போட்டு உடைக்க அவர் முன்னால் அமர்ந்திருந்தவரை பெயர் சொல்லி அழைக்க... பஸ் முழுவதும் சிரிப்பலைகள். இருவரும் முகம் சிவந்து போனார்கள்!

சில சீரியசான விஷயங்களும் பஸ்களில் நடப்பதுண்டு. அது ஏனோ தெரியவில்லை, பல காதல்கள் பஸ்களில்தான் முறிகின்றன போலும் ஏனெனில் சில பெண்கள் நீண்ட நேரம் துயரத்துடன் திரும்பத் திரும்ப காதலனுடன் உரையாடி கடைசியாக ஃபோனை ஓப் செய்து விட்டு கண்ணீர் விட்டு அழுவார்கள்! கதை முடிந்து விட்டது என்று நான் நினைத்துக் கொள்வேன்! (குரூரத் திருப்தி?) பெண்களும் இளைஞர்களுக்கு 'பூட்' கொடுப்பதுண்டு. எனினும் அழுது மூக்கு சிந்தும் இளைஞர்களை நான் பஸ்களில் கண்டதில்லை.

நீங்களும் கூட அவதானித்திருப்பீர்கள், சிலர் பஸ்சில் ஏறியதில் இருந்து இறங்கும் வரை தன் அலைபேசியை நோண்டிக் கொண்டே இருப்பார்கள். இப்போது Big Screen, Touch System என்று ஏகப்பட்ட வசதிகளுடன் ஃபோன்கள் வந்துவிட்டன. ஓன் செய்ததும் ஸ்கிறீன் பூந்தோட்டம் போல ஜெகஜ்ஜோதியாக விரிகிறது. இந்த மெஜிக்குகளை எல்லாம் மற்றவர்களுக்குக் காட்ட வேண்டும் என்பதற்காகத்தான் நாமும் பார்க்கிற மாதிரி முகத்துக்கெதிரே தூக்கிப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை.

இவற்றைப் பார்க்கும்போது பழைய ஞாபகங்கள் வரத்தான் செய்கின்றன.

எழுபதுகளின் கடைசியில்-அப்போதுதான் திறந்த பொருளாதாரம் நடைமுறைக்கு வந்திருந்தது-புலிக், கெனியோ, ஜெவிஸி, பனசோனிக் நிறுவனங்களின் கெஸட் ரேடியோக்கள் அல்லது Two-in-one சந்தைக்கு வந்திருந்தன. அது ஒரு பெரும் தொடர்பாடல் துறைப் புரட்சி. ரெக்கோர்ட் பிளேயர் யுகத்துக்கு குட்பை!

எனக்குத் தெரிந்த ஒருவர் தன் பசுமாட்டை விற்று கெனியோ டூ-இன்-வன் கெஸட் ரேடியோவை வாங்கி தான் வசித்த பகுதியில் ஹீரோவாகத் தன்னைக் காட்டிக் கொண்டார். எனக்கோ, பால் தரும் பசுவை விற்று கெஸட் ரேடியோ வாங்கினாரே என்று எரிச்சல். எனவே, மாட்டுக் கெஸட் என அதற்கு பெயரிட்டு எங்களுக்குள் அழைத்துக் கொண்டோம். அக் காலத்தில், பஸ்களில் டூ-இன்-வன் டிரான்சிஸ்டர்களை பஸ்களில் பலர் எடுத்துச் செல்வார்கள். எடுத்துச் செல்வதில் பிரச்சினை இல்லை. ஃபுல் சவுண்டில் கெஸட் பாடல்களை அல்லது ரேடியோவை பஸ்களில் ஒலிக்கச் செய்து நம் உயிரை வாங்குவார்கள். நம்மிடம் கெஸட்-ரேடியோ இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக பஸ்களில் தூக்கிச் சென்றதைப் போலத்தான் மொபைல்களையும் இன்று காட்சிப்படுத்துகிறார்கள் என்று நினைக்கிறேன்.

இன்று ஃபோன்களில் எல்லா வசதிகளும் வந்துவிட்டன. பலருக்கு இந்த வசதிகளை உபயோகிப்பது எப்படி என்று தெரியாது. ஆனால் எட்டு வயது பையனிடம் கைபேசியைக் கொடுத்தால் அவனால் எப்படி அதில் உள்ள அத்தனை ரகசியங்களையும் தோண்டித்துருவி ஆராய்ந்து பார்க்க முடிகிறது? ஆச்சரியம் தான்!

உலகம் இனி கைபேசியில் அடக்கம் என்கிறார்கள். சரி, உலகமே உங்கள் உள்ளங்கைக்குள் வந்துவிட்ட பின் வாழ்க்கையில் என்ன தான் சுவாரசியம் இருக்கப் போகிறது? தேடுவதில்தானே சுவாரசியமே இருக்கிறது!

கடைசியாக ஒன்று...

தகவல் தொழில்நுட்பம் அசுர வளர்ச்சி பெற்று விட்டது. உள்ளங்கைக்குள் உலகம். ஆனால் சராசரி இளைஞனிடம் டொனமூர் அரசியலமைப்பு என்றால் என்ன என்று கேட்டால் விழிக்கிறான். கே.எப்.சியைத் தெரிகிறது. பாரதியாரைத் தெரியவில்லை.

உண்மையில் என்னதான் நடக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலின் பேரால் நடந்த முக்கொலை


ஐயம்பதி ஐயசிங்க

கண்டி மாவட்டத்தில் கட்டுகஸ்தோட்ட பிரதேசத்தில் குருந்து கஹமட மற்றும் குளுகம்மான ஆகிய இரு இடங்களும் அக்கம் பக்கமாக இருந்த இரு குக் கிராமங்கள்.

கடந்த மாதம் இங்கு இடம்பெற்ற ஒரு சம்பவம் இந்த இரு கிராம மக்களையும் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த இரு கிராமங்களிலும் வசித்து வந்தவர்கள் எந்த வம்பு தும்புக்கும் போகாதவர்கள். தாம் உண்டு தமது வேலை உண்டு என்று இருப்பவர்கள். ஒருவருக்கொருவர் சகோதர வாஞ்சையுடனும் அந்நியோன்யத்துடனும் பழகி வருபவர்கள்.

ஆனால்...,

காலம் மாறிப்போய் நவீன இளைஞர் கலாச்சாரம் இந்த குக்கிராமங்களுக்கும் பரவிய நிலையில் இக் கிராம இளைஞர் யுவதிகள் அக்கம் பக்கத்தை தாண்டி நகர்ப்புறம் செல்லும் வாய்ப்பு அதிகரித்தது.

இக்கிராமங்களுக்குள் நாகரிக போக்குகள் தலைகாட்டத் தொடங்கியதையடுத்து இங்கிருந்த இளைஞர் யுவதிகள் நகர்புறம் சென்றுடன் அங்கிருந்து டெனிம் ஜீன்ஸ், டீ சேர்ட் ஆகியவை கிராமங்களுக்கு வரத் தொடங்கின.

கிராம யுவதிகள் அவற்றை தைரியமாக அணிந்து கொண்டு துணிச்சலுடன் கிராமத்தில் நடமாடும் அளவுக்கு நாகரிகம் இப்போது அந்த கிராமங்களை மாற்றிவிட்டது.

அந்த கிராமத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற ஒரு சம்பவம் அக் கிராமவாசிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்தது.

அந்த சம்பவம்...

ஒரு முக்கொலை....

கடந்த மே மாதம் 19ஆம் திகதி இந்த சம்பவம் நடந்தது.

அன்றைய தினம் அதிகாலை 4 மணியளவில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டதும் வீட்டுத் தலைவரான ஏக்க நாயக்க தூக்கக் கலக்கத்துடன் சென்று கதவைத் திறந்தார்.

எதிரே T-56 ரக துப்பாக்கியுடன் ஒருவன்....

டுமீல்....

முதல் சூடு விழுந்தது. ரவை வயிற்றில் பட்டதால் அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்தார் ஏக்கநாயக்க. ஏக்கநாயக்க போட்டிருந்த லைட் வெளிச்சத்தில் உள்ளே நுழைந்தான் அந்த துப்பாக்கிதாரி.

ஏக்க நாயக்கவின் மனைவி ரஞ்சனி குமாரிக்கு விழுந்தது அடுத்த சூடு! அலறிக் கொண்டே கீழே விழுந்தாள் அவள்.

உள்ளே நுழைந்த துப்பாக்கி தாரி அருகில் இருந்த அறையை நோட்டமிட்டான்.

திடீரென்று கேட்ட துப்பாக்கி சத்தங்களும் அலறல்களும் படுக்கையில் இருந்த நிரோசாவை தூக்கிப் போட்டன. சத்தங்கள் எங்கே இருந்து வந்தன என்று அவளால் அனுமானிக்க முடியவில்லை... ஆனால் மிகவும் அருகில் இருந்து....

.... வீட்டில் லைட் எரிகிறது. இந்த இரவில் லைட் போட்டது யார்?

அறைக்கு வெளியே சென்றாள் நிரோசா. அங்கே தனது தந்தையும் தாயும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

எங்கள் வீட்டில் இருந்துதான் அந்த துப்பாக்கி சத்தம் கேட்டிருக்கிறது.

யார் சுட்டிருப்பார்கள்?

நினைத்த மறு கணமே அவள் மீதும் டுமீல்...

துப்பாக்கி சூடு விழுந்தது.

துப்பாக்கி தாரி அவளையும் விட்டு வைக்கவில்லை...

முழுக் குடும்பத்தையும் இல்லாதொழிப்பதே அவனது நோக்கம் இன்னும் இருவர் குடும்பத்தில் மீந்திருந்தனர்.

நிரோசாவுக்கு ஒரு அண்ணனும் தங்கையும் இருந்தனர்.

அவர்களை அம்மனிதன் தேடினான்.

நிரோசாவின் மூத்த சகோதரனும் இளைய சகோதரியும் வெவ்வேறு அறைகளில் படுத்திருந்தனர். துப்பாக்கி சத்தம் கேட்டதும் இளைய சகோதரி பயந்து கொண்டு அண்ணனின் அறைக்குள் நுழைந்து விட்டாள்.

மூத்த சகோதரன் துப்பாக்கி சத்தம் கேட்டதும் மெல்ல கதவை திறந்து வெளியே பார்த்து நிலைமையை



உணர்ந்து கொண்டான். நிலைமை அவனுக்கு புரிந்தது. உள்ளே நுழைந்து தங்கையை கவனமாக இருக்குமாறு கூறிவிட்டு மெத்தைக்கு அடியில் தான் எப்போதுமே வைத்திருக்கும் கருங்காலி கம்பை கையில் எடுத்துக்கொண்டு கதவின் பின்னால் ஒளிந்து கொண்டான். அந்த அறையில் வெளிச்சம் எதுவும் இருக்கவில்லை ஆனால் முன் அறையில் போடப்பட்டிருந்த லைட்டின் வெளிச்சம் அந்த அறைக்குள்ளும் லேசாக விழுந்தது.

வெளிச்சம் இல்லாத அந்த அறைக்குள்தான் நிரோசாவின் அண்ணனும் தங்கையும் படுத்திருக்கவேண்டும் என்ற எண்ணத்தில் அந்த அறைக்கதவை மெதுவாக திறந்து உள்ளே நுழைந்தான் துப்பாக்கிதாரி.

அவனது தலை அறைக்குள் நுழைந்ததுதான் தாமதம் நிரோசாவின் அண்ணன் கதவின் மறைவில் இருந்து வெளிப்பட்டவாறே கருங்காலி கம்பால் போட்டான் ஒரு போடு!

இருட்டில் தலையில் படவேண்டிய அடி சற்று விலகி வெட்டு புறமாக தோள் பட்டையில் பலமாக தாக்கியது. அலறிக் கொண்டே கீழே விழுந்தான் துப்பாக்கிதாரி. துப்பாக்கியை அவன் கைவிடவில்லை. நேராக சுட்டுக்கொண்டே போனான் ரவைகள் கூரையில் பட்டுத் தெறித்தன. ஆனால் அடியின் காரணமாக அவனால் எழும்ப முடியவில்லை. அவன் எதிர்பார்த்தில் நிறையவே நடந்துவிட்டது. மூவரை பலி வாங்கியாகி விட்டது. இனி தனக்கு எப்படியும் உயிர் வாழ முடியாது. ஏற்கனவே தற்கொலை எண்ணத்துடன் இருந்த துப்பாக்கிதாரி துப்பாக்கியை தன் மீதே நீட்டி....

மீண்டும் டுமீல்!

உயிரற்ற சடலமானான் துப்பாக்கிதாரி...

இனி நடந்த கதைக்கு வருவோம்.

குருந்துகஹமட கிராமத்தை சேர்ந்தவள் நிரோசா. கிராமத்துக்குள் நுழைந்த நாகரிக காற்று நிரோசாவையும் தொட்டுச் சென்றது. பார்வைக்கு ஏற்கனவே 'ஜும்' மாக இருந்த நிரோசா டெனிம் ஜீன்ஸ் டீசேர்ட்டில் அப்சரஸாக மாறினாள்.

அடுத்த கிராமமான களுகம்மானாவில் வசித்து வந்த உபுல் பிரியந்த ஒரு இராணுவ வீரன். அடிக்கடி கட்டுகஸ்தோட்டை நகருக்கு வந்து போகும் நிரோசாவுக்கும் பிரியந்தவுக்கும் காதல் தீ பற்றிக்கொண்டது.

இருவரும் காதல் வானில் சிறகடித்துப் பறந்தனர்.

இளமையில் காதல் எத்தனை சுகம் என்பது காதல் வயப்பட்ட இளசுகளுக்குத்தான் தெரியும்.

ஆனால், காலம் செல்லச் செல்ல நிரோசாவின் தோழிகளின் வற்புறுத்தல் காரணமாக அவள் பிரியந்த மீது வைத்திருந்த காதல் மெல்ல மெல்ல குறையத் தொடங்கியது.

'இராணுவத்தில் உள்ள ஒருவனை மணக்காதே ஏதாவது நடந்தால் விதவையாகிவிடுவாய்' என்று நிரோசாவின் தோழிகள் அவளுக்கு ஓதி வந்தனர்.

இதனை நிரோசா பிரியந்தவிடம் கூறிய போது அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

'அட பைத்தியம், யுத்தம் எல்லாம் முடிந்து வருடங்கள் மூன்றாகி விட்டன. அவ்வாறான நிலை மீண்டும் ஒரு போதும் வராது' என்று பல முறை கூறிய போதிலும் நிரோசா அதனை ஏற்றுக் கொள்வதாக இல்லை.

இந்த நிலையில் உபுல் பிரியந்த நிரோசாவின் வீட்டுக்கு வந்து பெண் கேட்டான்.

'எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. மகள் நிரோசா விரும்பினால் திருமணம் செய்து கொள்ளுங்கள்' என்று நிரோசாவின் பெற்றோர் கூறிவிட்டனர்.

தன்னை திருமணம் செய்து கொள்ளுமாறு காலில் விழாத குறையாக நிரோசாவிடம் கெஞ்சினான் பிரியந்த. ஆனால் இராணுவத்தை விட்டு விலகினால்தான் நான் உன்னை திருமணம் செய்வேன். இல்லையேல் என்னை மறந்துவிடு என்று நிரோசா கூறிவிட்டாள்.

இராணுவத்தில் இருந்து லேசில் விலக முடியாது. குறிப்பிட்ட காலத்தின் பின்னர் திருமணத்துக்கு அனுமதி தரப்படுமே தவிர இராணுவ சேவையில் இருந்து குறிப்பிட்ட காலத்துக்கு விலக முடியாது என்று பிரியந்த கூறிய எதனையும் நிரோசா ஏற்கவில்லை.

எவ்வளவு தூரம் தான் பிரியந்த கெஞ்சுவான்! காதலி மனைவியாக வேண்டும் இராணுவத்தில் சேவையாற்றவும் வேண்டும். இரண்டுமே ஒரே நேரத்தில் சாத்தியப்படாது. ஆனால் அவனுக்கு இரண்டுமே வேண்டும் என்ற நிலையில் பித்துப் பிடித்தவன் போலானான் பிரியந்த.

பிரியந்தவின் பித்து தலைக்கேறியதன் காரணமாக இடம் பெற்ற முக்கொலை அந்த கிராமங்களை அதிர வைத்தது.

காதல் காதல் காதல்
காதல் போயின்
வேறென்ன...?
சாதல் சாதல் சாதல் தானே!
அதுதான் நடந்தது... நிரோசாவுக்கும் பிரியந்தவுக்கும்!

## கோப்பிக்காலத்தில்... தோட்ட டிஸ்பென்சரி உருவான வரலாறு

தோட்டத்துரைமார் ஏற்கனவே நடைமுறையில் உள்ள தோட்ட மருத்துவ நடைமுறைக்கு ஒப்புதல் அளித்து அதன்படி செயல்பட இணங்கியிருந்தபோதிலும் ஆஸ்பத்திரிகளில் மரணமடையும் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றது. தொழிலாளர் மரண எண்ணிக்கை இவ்வாறு அதிகரித்துச் செல்வது லண்டன் காலனி அலுவலகத்துக்கு கவலை தருவதாக இருந்தது. தோட்ட மருத்துவ நடைமுறையில் காணப்படும் குறைபாடே இதற்குக் காரணம் எனக் கருதிய காலனி அலுவலகம், இது தொடர்பாக ஏதேனும் நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை ஆளுநர் ஹெவ்லொக்கைப் பணித்தது. எனினும் அவர் ஏனைய உள்நாட்டு விவகாரங்களில் அதிக கவனம் செலுத்தி வந்ததால் உடனடியாக உரிய மாற்று நடவடிக்கைகளை எடுப்பதில் தாமதம் காட்டி வந்தார். எனினும் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து யோசனைகளைச் சமர்ப்பிக்கும் வகையில் ஒரு ஆணைக்குழுவை அமைத்தார். 1893ம் ஆண்டு 'மாவட்ட ஆஸ்பத்திரி மரணங்கள் விசாரணைக் குழு' அமைக்கப்பட்டது.

இக்குழு முதலாவதாக மருத்துவ செலவுகளுக்கான நிதி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டது. தோட்ட உரிமையாளர்கள் ஏற்கனவே நடைமுறையில் இருந்த ஏற்பாடுகளுக்கு அமைய தமது நிதி பங்களிப்பை வழங்கத் தயாராக இருந்தனர். வருமான அதிகரிப்பால் இது அவர்களுக்கு சுமையாக இருக்கவில்லை. எனினும் தோட்ட மருத்துவத் துறையில் ஏற்படக் கூடிய செலவுகளின் பேரில் மேலதிக நிதி வழங்குவதற்கு அவர்கள் உடன்படவில்லை. மேலதிக செலவினங்களால் துண்டுவிழும் தொகையை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்பது தோட்ட உரிமையாளர்களின் வாதமாக இருந்தது. அச்சமயத்தில் அரிசி விலை அதிகரித்திருந்ததால் அச்சுமையையும் தாமே சுமக்க வேண்டியிருக்கிறது என தோட்ட உரிமையாளர்கள் அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டி மேலதிக நிதி வழங்கலில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள எத்தனித்தனர். இந்நிலையில் மொத்த தோட்ட



மருத்துவ செலவில் ஏற்படும் துண்டு விழுந்தொகையில் மூன்றில் ஒரு பகுதியை அரசு ஏற்றுக்கொண்டது. மிகுதித் தொகையை வழங்க திறைசேரி முன்வரவில்லை. இதே சமயம் மேலதிக தொழிலாளர் வரவால் வருடா வருடம் மருத்துவ செலவுகளும் அதிகரிக்கத் தொடங்கின. எனவே நிதிப்பற்றாக்குறையை சமாளிப்பது எப்படி என்பதில் இலங்கை அரசாங்கம் கரிசனை காட்டத் தொடங்கியது.

இது இப்படி இருக்க, தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் நோய் முற்றிய நிலையிலேயே ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டு வந்தனர். ஆஸ்பத்திரி மரணங்களுக்கு இது ஒரு முக்கிய காரணம் எனக் கண்டறியப்பட்டதால் இதைத் தவிர்க்கும் மாற்று நடவடிக்கை குறித்து ஆலோசிக்கப்பட்டது.

(31ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள சமூகத்துக்காகவும் சேவையாற்றிய சேர் பொன்னம்பலம் ராமநாதன்

யாழ்ப்பாணத்தில் உயர் குலமாக கருதப்பட்ட வெள்ளாள குலத்தில் 1851 ஏப்ரல் மாதம் 16ம் திகதி சேர் பொன்னம்பலம் ராமனாதன் பிறந்தார். அவரது தந்தை கேட் முதலியார் குமாரசாமி பொன்னம்பலம் ஆவார். தாய் செல்லாச்சி அம்மாள். இக்குடும்பம் சட்டவாக்க கழகத்துக்கு பெறுமதி மிக்க அங்கத்தவர்களை பெற்றுக்கொடுத்த ஓர் பிரத்தியேக குடும்பம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சேர் பொன்னம்பலம் ராமனாதனின் மாமனாரும் அவருடைய இரு சகோதரர்களும் அவருடைய மருமகனும் பல சந்தர்ப்பங்களில் சட்டவாக்கக் கழகத்தில் அங்கத்துவம் வகித்தனர்.

கொழும்பு அகடமி அல்லது ரோயல் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை கற்ற சேர் பொன்னம்பலம் ராமனாதன், பின்பு வழக்கறிஞராக கல்வி பயின்று வழக்கறிஞராக தமது தொழிலையும் ஆரம்பித்தார்.

கீழைத்தேய மற்றும் மேலைத்தேய தத்துவங்களை பற்றிய ஆழ்ந்த அறிவைக் கொண்ட சேர் பொன்னம்பலம் ராமனாதன், ஆங்கில மொழியிலும் தமது தாய்மொழியான தமிழிலும் நன்கு உரையாற்றக் கூடிய சிறந்த பேச்சாளராகவும் விளங்கினார்.

சிறந்து விளங்கிய சட்ட அறிஞரான சேர் பொன்னம்பலம் ராமனாதன், 1879 தொடக்கம் 1892 வரை தமிழ் மக்கள் சார்பாக இலங்கை சட்டசபையில் கடமை புரிந்தார்.

1892 தொடக்கம் 1902 காலப்பகுதியில் சொலிசிட்டர் ஜெனரலாக கடமை புரிந்த அவர், பல சந்தர்ப்பங்களில் பதில் அட்டர்னி ஜெனரலாகவும் கடமை புரிந்தார்.

இவ்வாறு நியமன அங்கத்தவராகவும் சிறிது காலம் சொலிசிட்டர் ஜெனரல் என்ற பதவியை வகித்ததன் மூலமும் சட்டசபையில் கடமை புரிந்த அவர் அத்துறைகளில் ஆழ்ந்த அனுபவத்தை பெற்றுக் கொண்டார்.

அவர் முதலில் இலங்கை சட்டவாக்க கழகத்துக்கே உத்தியோக பற்றற்ற நியமன அங்கத்தவர் என்ற முறையில் நியமிக்கப்பட்ட போதிலும், வாக்குகள் மூலம் அங்கத்தவர்களை தேர்ந்தெடுக்கும் செயல்முறை அமுலுக்கு வந்தவுடன் படித்த இலங்கையர் சார்பாக அவர் சட்டவாக்க கழகத்துக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் தேர்ந்தெடுக்கப்படுகையில், அவரது சமூகமான தமிழ் சமூகத்தை போலவே சிங்கள சமூகத்தின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள அவரால் முடிந்தது. அதன் பெறுபேறாக 1911ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவருடைய பிரதிவாதியான சேர் மார்க்கஸ் பெர்னாண்டோவைத் தோற்கடித்து வெற்றி பெறும் வாய்ப்பைப் பெற்றார்.

படித்த இலங்கையர் சார்பாக சட்டவாக்க கழகத்துக்கு யார் போகவேண்டும் என்ற கேள்வி எழுப்பப்பட்டபோது, அதற்காக சேர் பொன்னம்பலம் ராமனாதன் முன்வரவேண்டும் என்று படித்த சிங்களவர்களில் பெரும்பாலானோர் அவரை கேட்டுக்கொண்டனர்.

அது மட்டுமல்லாமல் சேர் பொன்னம்பலம் ராமனாதனின் தேர்தல் பிரசார பணிகளில் சிங்கள தலைவர்களான சட்டத்தரணி ஹெக்டர் ஜயவர்தன, கேர்னல் டி.ஜி.ஜயவர்தன, வழக்கறிஞர் பிரான்சிஸ் சொய்ஸா போன்றவர்களும் அதற்கு முன்னணியில் நின்று ஒத்துழைப்பு வழங்கினர்.

1911ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற இத் தேர்தலில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட சேர் மார்க்கஸ் பெர்னாண்டோவை விட 664 அதிகப்படியான வாக்குகளினால் வெற்றி பெற்ற சேர் பொன்னம்பலம் ராமனாதன், 'ALL CYLON ELECTORAL' அடிப்படையில் இலங்கை சட்டவாக்க கழகத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பிரதிநிதியாகவும் விளங்கினார்.

சேர் பொன்னம்பலம் ராமனாதன் இறக்கும் பொழுது அரை நூற்றாண்டுக்கும் மேலாக சட்டவாக்க கழகத்தில் சேவை புரிந்திருந்தார்.

சட்டவாக்க கழகத்தில் சுறுசுறுப்பாக செயற்பட்ட சேர் பொன்னம்பலம் ராமனாதன், காலனித்துவ ஆட்சியை தீவிரமாக விமர்சித்த ஒரு பிரதிநிதியாக விளங்கினார்.

ஆட்சியை விமர்சிக்கும் தைரியத்தை கொண்டிருந்த அவர், அரசின் கடமைகள், செயற்பாடுகள், பிழையான ஆட்சியின் பெறுபேறுகள் எனக் குறிப்பிட்டு தமது விமர்சனங்களை முன் வைத்தார்.

பொதுமக்களின் இன்னோரன்ன துயரங்களை வெளிக்கொணர்வதற்காக தமது சகாக்களான உத்தியோகபற்றற்ற உறுப்பினர்கள் சிலருடன் தொடர்ச்சியாக தகவல்களை சேகரிப்பதில் கரிசனையாக இருந்தார்.

சேர் பொன்னம்பலம் ராமனாதன் வழக்கறிஞராக இருந்த போதிலும் பொது மக்கள் கல்வியில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். குறிப்பாக யாழ்ப்பாண மக்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக அவர் உடுவில் ராமனாதன் மகளிர் கல்லூரியையும் யாழ்ப்பாண பரமேஸ்வரா கல்லூரியையும் தாபித்தார்.

பிற் காலத்திலே இப் பரமேஸ்வராக் கல்லூரி யாழ்ப்பாண பல்கலைக்கழகமாக உருவெடுத்ததை நாம் அறிவோம். இதற்கு புறம்பாக சட்டவாக்க கழகத்திலே இலங்கையின் கல்வித் துறையை மேம்படுத்துவதற்காக மசோதாக்கள் சமர்ப்பிக்கப்பட்ட பொழுது அவ்விவாதங்களிலே கூடிய ஆர்வமாக கலந்து கொண்டு புத்திக் கூர்மையுடன் செயற்பட்டார்.

சட்டவாக்க கழகத்திலும் அதற்கு வெளியிலும் நாட்டுக்கும் சமூகத்துக்கும் குறிப்பாக சிங்கள சமூகத்துக்கு அவர் மேற்கொண்ட சேவை அளப்பரியது.

சேர் பொன்னம்பலம் ராமனாதனின் தந்தையார் கொழும்பு புறக் கோட்டையில் கொப்பரா வியாபாரத்திலும் வெள்ளைப் வியாபாரத்திலும் முதன்மை இடம் வகித்தார். ஆகவே பொன்னம்பலம் ராமனாதன் பெருமளவு சொத்துகளுக்கு பணத்துக்கும் அதிபதியாக விளங்கினார். எனவே அவர் சட்டவாக்க கழகத்தில் கடமையாற்றிய காலகட்டத்தில் குதிரை வண்டியில் நாடு முழுவதும் பயணம் செய்து மக்களின் குறைபாடுகளை கண்டறிந்ததோடு பழைய நீர்ப்பாசன திட்டங்களை புனரமைப்பதில் நாட்டம் கொண்டிருந்தார்.

சிங்கள மக்கள் பரந்து வாழ்ந்த பிரதேசங்களில் இந்த நீர்ப்பாசன திட்டங்கள் அமைந்திருந்ததால் அவருடைய முயற்சிகள் சிங்கள சமூகத்துக்கு பெரும் பயனளித்தது. அவர் சட்டவாக்க கழகத்தில் பணி புரிந்த பொழுது பௌத்த நிறுவன மசோதாவை முன்வைத்தார்.

வெசாக் போயா தினத்தை விடுமுறை தினமாக கோரி ஒரு பிரேரணையையும் அவர் சமர்ப்பித்தார். இதனோடு நின்றுவிடாது பாடசாலைகளில் பௌத்த கல்வியை விருத்தி செய்வதற்கு ஹென்ரி ஸ்டீல் ஒல்கொட்டுடன் ஒன்றிணைந்து பிரம்மஞான சபையை நிறுவ ஒத்துழைப்பு நல்கியதுடன் பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்துக்கும் அயராது உழைத்தார்.

சிங்கள தலைவர்களுடன் ஒன்றிணைந்த அவர் மது ஒழிப்பு இயக்கத்தின் அச்சாணியாகவும் விளங்கினார். காலனித்துவ ஆட்சியின் கீழ் மதுபானசாலைகளை நிறுவுவதற்கு எதிராக சட்டவாக்க கழகத்தில் குரல் எழுப்பினார். இது பற்றி சட்டவாக்க கழகத்தில் குரல் எழுப்பியதுடன் கள்ளுத் தவறணைகள் எத்தனை என்பதையும் அவை அமைந்துள்ள மாவட்டங்கள் மற்றும் கிராமங்கள் பற்றிய விபரங்களையும் தமக்கு வழங்குமாறும் சேர் ஜூப்பூ கிளப்பர்ட் என்ற அன்றைய குடியேற்ற செயலாளராக கேட்டுக் கொண்டார்.

அதற்கு பதிலளிக்க முடியாது என அவர் கூறியபொழுது பொன்னம்பலம் ராமனாதன் கோபத்துடன் அவருக்கு இவ்வாறு பதிலளித்தார்:

''தவறணைகள் நிறுவப்பட்டுள்ள இடங்கள் பற்றிக் கேட்கும் போது என்னுடைய நண்பர் தமக்குத் தெரியாது என்று கூறுகிறார். இது ஒரு முறையற்ற செயலாகும். அரச சார்பான, மது வரி தொடர்பான கடமைகளுக்கு பொறுப்பாகவும் நீதியையும் நியாயத்தையும் மக்களுக்கு வழங்குவதற்கு பொறுப்பாகவும் உள்ள இவர் தமது பதிலின் பாரதூரத்தை விளங்காது இருப்பது பற்றி நான் மனம் வருந்துகிறேன்.''

சிங்கள தலைவர்களுடன் இணைந்து மது ஒழிப்பு செயல் முறையில் ஆக்கபூர்வமான பணியை அவர் ஆற்றியிருப்பது, நாட்டுக்கும் மக்களுக்கும் அவர் ஆற்றிய சேவைக்கு ஓர் உதாரணமாகும்.

1915ஆம் ஆண்டு கம்பளையில் இடம் பெற்ற சிங்கள-முஸ்லிம் கலவரத்தின் போது அவர் ஆற்றிய பணி, சிங்கள மக்களுக்கு அவர் ஆற்றிய சேவைகளுக்கு மகுடமாக விளங்கியது.

இக்கலவரம் ஒரு சிறு பிரதேசத்திலே ஏற்பட்டு விரைவிலேயே முடிந்து விட்டாலும், அது தொடர்பாக அரசு அளவு கடந்த கவனத்தை செலுத்தி பீதியடைந்து, 'மார்ஷல் லோ' என்ற இராணுவ சட்டத்தை பிரகடனப்படுத்தியதோடு சிங்கள, தலைவர்கள் பலரையும் கைது செய்தது.



அவர்களுள் டி.எஸ்.சேனநாயக்க, டி.ஆர்.விஜயவர்தன, ஏ.எச்.மொலமூரே, எப்.ஆர்.டயஸ்.பண்டாரநாயக்க, ஈ.டி.எ.சில்வா, அமரசூரிய போன்றவர்கள் அடங்குவர். இவர்கள் சார்பாக முன்னின்று இவர்களை விடுவிப்பதற்காக பணிபுரியுமாறு அனகாரிக தர்மபால விடுத்த கோரிக்கைக்கு இணங்க சேர் பொன்னம்பலம் ராமனாதன் சிங்கள தலைவர்களின் விடுதலைக்காக பிரித்தானிய அரசுடன் போராடி வெற்றி கண்டார்.

இந்த சந்தர்ப்பத்தில் மற்றுமொரு விடயத்தையும் கூறுவது பொருத்தமானதாகும்.

அரசியல் சட்டம் கருதி சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தி கலகத்தை மேலும் உக்கிரமடைய செய்யும் வாய்ப்பு தலைவர்களுக்கு இருந்தது. ஆயினும் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. குறிப்பாக சேர் பொன்னம்பலம் ராமனாதன் அரசியல் லாபம் கருதாது இவ்விரு சமூகங்களுக்கும் இடையில் பிளவு ஏற்படாதவாறு கைது செய்யப்பட்ட சிங்களத் தலைவர்கள் சார்பாக முன்னின்று அரசிடம் விளக்கமளித்து அந்தத் தலைவர்களை விடுவிக்க செயல்பட்டதோடு, இக் கலவரம் தோன்றுவதற்கான காரணங்களையும், மறுபடியும் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறாத வண்ணம் தடுக்கவும் ஓர் மீளாய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் எடுத்துரைத்தார். இம் முயற்சியில் வெற்றியும் பெற்றார்.

சிங்கள சமூகம் காலனித்துவ ஆட்சியில் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்ட தருணங்களில் அவர்களுக்காக குரல் கொடுத்து அவர்களின் விடுதலைக்காக போராடிய இவரை, சிங்கள மக்கள் இன்றும் தேசிய வீரராக போற்றி வருகின்றனர்.

சேர் பொன்னம்பலம் ராமனாதன் இப் பணியோடு மட்டும் நின்று விடாது மக்களின் ஆத்மீக துறையை விருத்தி செய்யும் பொருட்டு பல நூல்களை இயற்றினார்.

இந்நூல்களில் தமது சமயமான இந்து சமயத்தை மட்டும் வரையறையாகக் கொள்ளாமல் கிறிஸ்தவ சமயத்துக்காகவும் எழுதினார்.

அவர் எழுதிய நூல்கள் பின்வருமாறு

1. An Eastern exposition of the Gospel of Jesus according to St.methews (1898)
2. An Eastern exposition of the Gospel of Jesus according to St.John (1902)
3. The culture of the soul among Western Nationals (1907)
4. The spirit-of the East contrasted with the spirit of the West (1907)
5. On Faith or love of God (1897)
6. Tamil Translation of BhagvadGita (1914)
7. Thirukkural (1919)
8. Sri Ramanatha Dharma Sastra (Lessons)

இவ்வாறு சமய தத்துவங்கள் பற்றி நூல்களை எழுதி மக்களின் ஆத்மீக வாழ்க்கையை சீர் செய்வதில் பணி புரிந்த அவர் ஒரு ஆத்மீக தலைவராகவும் சிறந்த பேச்சாளராகவும் பெயர் பெற்றிருந்ததால் அவரை அறிஞர்கள் அமெரிக்காவிலுள்ள பல கழகங்களில் உரையாற்ற அழைத்தனர். இவருடைய அறிவாற்றலினால் ஈர்க்கப்பட்ட பலர் அவரை தமது ஆசானாகவும் மதித்து வந்தனர்.

இவருடைய பேச்சாற்றலில் கவரப்பட்ட சலிஸ்பரி பிரபு பிரித்தானிய சாம்ராஜ்யத்துக்குள் ஒரு சிறப்புமிக்க பேச்சாளராக இவரை குறிப்பிட்டிருந்தார்.

அவரது பேச்சாற்றலின் பெறுபேறாக 1897ம் ஆண்டில் இங்கிலாந்தில் நடைபெற்ற விக்டோரியா மகாராணியின் பொன் விழா கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட பிரதிநிதியாக இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்.

இவரது பேச்சாற்றலுக்காக அச் சந்தர்ப்பத்தில் மகாராணி ஒரு தங்கப் பதக்கத்தினையும் இவருக்கு வழங்கினார்.

இவ்வாறு அரசியல் வாழ்விலும் சமூகப் பணிகளின் ஊடாகவும் இலங்கையின் சுதந்திரத்துக்காக போராடிய சேர் பொன்னம்பலம் ராமனாதன், இலங்கையில் வாழ்ந்த சிங்கள தலைவர்களின் பாராட்டையும் பெற்றிருந்தார். இலங்கை மாதா பெற்றெடுத்த மகத்தான ஒரு இலங்கையர் என்று டி.எஸ்.சேனநாயக்க இவரை வர்ணித்தார்.

அவரை பாராட்டிய சேர்.டி.பி.ஜயதிலக்க கடந்த 50 ஆண்டு காலத்தில் இலங்கை உருவாக்கிய மகத்தான மனிதர் சேர் பொன்னம்பலம் ராமனாதன் என்று குறிப்பிட்டார்.

நாட்டின் அரசியல் அபிவிருத்தியில் அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. இலங்கையின் சுதந்திரத்தைக் காண்பதற்கு முன் அவர் மண்ணைவிட்டு பிரிந்து விட்டார். அவருடைய சேவையைப் பற்றி எஸ்.நமசிவாயம் தனது நூலில் எழுதியுள்ள இப் பந்தியை முழுவதாக இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

'தங்க வர்ணம் கொண்ட நூல்களினால் வேலைப்பாடுகள் செய்யப்பட்ட தலைப்பாகை ஒன்றையும் நீண்ட பட்டு மேலங்கியொன்றையும் அணிந்து இந்திய இளவரசன் ஒருவனைப் போல் தோற்றமளித்த சேர் பொன்னம்பலம் ராமனாதன், சட்டவாக்க கழகத்தில் தோன்றும் போது அவருடைய மனம் கவரும் தோற்றமும் அவர் அணியும் உடையும் சட்டவாக்க கழகத்தின் தோற்றத்துக்கு ஒரு மகத்தான பொலிவைச் சேர்த்தது.'

அவருக்கு முன் இருந்த பலர் எதிர் கொண்டது போலவே, அவரது வாழ்க்கையின் இறுதி ஆண்டுகளில் அவரை பிற்போக்கு வாதி என இளைஞர்கள் அவர் மீது முத்திரை குத்தினர்.

19ஆம் நூற்றாண்டின் அரசியல் அனுபவங்களினால் பயிற்சி பெற்ற அவர் பிற்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் யாப்பு ரீதியான அபிவிருத்திக்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்ளவில்லை. சர்வஜன வாக்குரிமை வழங்குதல், நிறுவனங்களை தேசிய மயமாக்குதல் போன்ற மாற்றங்களை அவர் சந்தேகக் கண் கொண்டு பார்த்தார். எவ்வாறு இருப்பினும் இலங்கை அரசியல் துறையின் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவை அளப்பரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் 5 மாதங்களில் உலகம் அழிந்துவிடுமாமே!



## உலகம் அழியும் ஆனால் அழியாது...

சென்ற இதழின் தொடர்ச்சி

பூமியில் அநியாயம் அதிகரித்து விட்டது; அதனால்தான் கடவுளின் அக்னிப் பார்வை பூமியின் மீது விழுந்து விட்டது. என்றும் விரைவிலேயே கடவுள்நியாந்தீர்க்க வருவார் என்றும் ஏராளமானோர் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையின் உச்சமாகத்தான் நம்மவர்கள் 2012இல் உலகம் அழியலாம் என்று கருதுகிறார்கள். சில மதங்களின் சில மத கோட்பாடுகளின் காரணமாகத்தான் இந்த உலக அழிவு அச்சம் பரவத் தொடங்கியிருக்கிறது. உலக அழிவை காரணம் காட்டியே சிலர் மத மாற்றத்தையும் வளர்த்திருக்கிறார்கள். மத மாற்றத்திற்கான பெரிய ஆயுதமாக இந்த உலக அழிவு அல்லது மனிதகுல அழிவு இருந்து வருகிறது. உலக அழிவுகள் பற்றி பல தடவைகள் ஆருடம் கூறப்பட்ட போதும் இதுவரை இவ்வுலகத்துக்கு எந்தப் பாதிப்பும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பூமி நலமாகத்தான் இருந்து வருகிறது.

விஞ்ஞானத்தின் அடிப்படையில் பார்ப்போமானால் உலகம் அழிவதாக இருந்தால் அது சூரியனால் தான் நிகழும் என்பது மறுக்க முடியாத உண்மை. அதற்கும் சூரியனில் பெரும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அந்தக் கொடிய திகதி வந்தடைவதற்கு நாம் இன்னும் 500 கோடி ஆண்டுகள் காத்துக் கிடக்க வேண்டும், நீங்கள் தயாரா?

சூரியனின் ஆயுளின்படி இப்போதுதான் 500 கோடி ஆண்டுகளை அது முடித்திருக்கிறது. இன்னும் 500 கோடி ஆண்டுகள் வரை அது உயிர் வாழும். ஆனால் இன்னும் இருபது கோடி ஆண்டுகளுக்குப் பிறகு சூரியனில் மாற்றம் ஏற்படத் தொடங்கி விடும் அதன்படி சூரியனின் சக்தி குறைய அது தடுமாற்றத்தை சந்திக்கும். இதன் காரணமாக சூரியனின் உற்பகுதி சுருங்க ஆரம்பிக்கும். அப்போது வெளிப்புறம் உப்பிப் பெரிதாக, வெப்பம் பன்மடங்காக அதிகரித்து தீக் குழம்புகள் சீறி எழும். சூரியனின் வெளிப்புறம் உப்பிப் பெரிதாகும் போது சூரியனின் அருகே அதைச் சுற்றிவரும் மேற்குறி மற்றும் வீனஸ் கிரகங்கள் பஸ்பமாகிவிடும். இக்காலப்பகுதியில் பூமியில் வெப்பம் பன்மடங்கு அதிகமாகி, அதன் தட்ப வெப்ப காலநிலை மாறிவிடும். இது நடைபெறுவதற்கு பல லட்சம் வருடங்களுக்கு முன்னரேயே ஜீவராசிகளும் தாவரங்களும் மடிந்து போயிருக்கும், மனிதர் உட்பட வெப்ப அதிகரிப்பு காரணமாக கடல் நீராவியாகிவிடும். அதன் மேற்பரப்பு சாம்பல் தரையாகிவிடும். இப்படி நடக்கப் போகும் சம்பத்தை நினைத்து நீங்கள் அச்சப்படத் தேவையில்லை ஏனென்றால் மனிதகுலம் மறைந்து பல ஆயிரம் ஆண்டுகள் கடந்து விட்டிருக்கும். அல்லது அண்டவெளியில் மிகவும் தொலைவிலுள்ள வேற்று கிரகத்தில் அமர்ந்து வேதனையுடன் பூமி அழிவதை மனிதர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாம். எப்படியோ, சூரியனில் ஏற்படக் கூடிய பெரும் மாற்றங்களே பூமிக்கு உலைவைக்கும் என்பது உறுதி.

நமது பூமியின் வயது 460 கோடி ஆண்டுகள். ஆனால் இந்த பூமியும், கிரகங்களும் கடவுளால் படைக்கப்பட்டவை என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான் இந்த உலக அழிவுப் பற்றிப் பேசப்படுகிறது. உலகமும், அதில் வாழும் உயிரினங்களும் ஒரு சில தினங்களில் படைக்கப்பட்டவை அல்ல. கோடான கோடி வருடங்களுக்கு முன்னால் இயற்கையின் சுய பரிசோதனை முறைகளின் ஊடாகவே பூமியின் உயிரினங்கள் தோன்றின. ஆனால் இந்த விடயத்தை அனேகர் புரிந்துக் கொள்ள மறுக்கிறார்கள்.

உலகமும், உயிரும் படைக்கப்பட்டது. படைத்தவருக்கு எதிராக பாவங்களை நாம் செய்வதால் அது அவரை எரிச்சலடையச் செய்யும் என்றும் பிறகு அவரின் ஆத்திரம் நம்மை முற்றாக அழித்து விடும் என்றும் பரவலான ஒரு நம்பிக்கை காணப்படுகிறது. ஏற்கனவே பிரளயத்தின் மூலம் உலகம் அழிக்கப்பட்டதாகவும் எஞ்சிய உயிரினங்கள் மூலம் மீண்டும் உயிரினப் பெருக்கம் நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது. இக் கோட்பாட்டை முற்றிலும் மறுப்பதற்கில்லை. ஏனெனில் உலகம் பெரும் அழிவுகளை சந்தித்திருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. எனினும் உலக அழிவு எப்போது வேண்டுமானாலும் நிகழலாம் என்ற மத அடிப்படையிலான நம்பிக்கையே, 2012இல் அழிவு வரலாம் என்ற பீதியை மாயன் கலண்டர் வாயிலாக மீண்டும் புகுத்தப்படுகிறது.

பரிணாம வளர்ச்சியினால் தான் மனிதன் உலகில் தோன்றினான் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. மிருகங்களின் பல குணங்கள் நம்மிடையே அப்படியே காணப்படுகின்றன. ஆத்திரம், மூர்க்கம், இரத்தவெறி என்பன, சில சமயங்களில், மிருகங்களை விட மோசமாகவே நம்மிடம் உறைந்துள்ளன. உலகில் நிகழும் அல்லது அதிகரித்துச் செல்லும் வன்முறைகள், கொடூரங்கள், யுத்தங்களை எடுத்துக் கொண்டால் நாம் மிருக சாயல் கொண்டவர்களே தவிர தேவ சாயல் கொண்டவர்களாக இல்லை என்பது புலனாகும்.

நம்முடையதும் ஏனைய மிருகங்களினதும் அடிப்படையாக இருப்பது அடித்து பிடித்து வாழ வேண்டும் என்ற உந்துதல்தான். ஓட்டத்தில் எது திறமைசாலியோ, ஈடுகொடுக்கக் கூடியதோ அதுவே முந்தும், நீடித்து நிலைக்கும் என்பது டார்வின் தத்துவம். எல்லா உயிரினங்களும் உயிர் வாழ்வதற்காக போராடிக் கொண்டிருக்கின்றன. ஈடுகொடுக்க முடியாதவை மடிந்துவிட ஏனையவை களத்தில் நிற்கின்றன. மனிதனால் ஈடுகொடுக்க முடிவதால்தான், ஒரு காலத்தில் டைனோசர்களால் ஆளப்பட்ட இந்த உலகை இன்று மனிதனால் ஆள முடிகிறது. ஈடுகொடுக்க முடியாத எண்ணற்ற தாவரங்கள் மடிந்துவிட்டன. உயிரினங்களும் அப்படியே.

உலகில் ஒரு பேரழிவு நிகழ்ந்த போது டைனோசர்கள் மடிந்தன. அப்படி மடிந்திருக்காவிட்டால் பாலூட்டிகள் தோன்றியிருக்க முடியாது. என்பது உயிரியல் அறிஞர்களின் முடிவு. பாலூட்டிகளின் வளர்ச்சியை மனிதனை தோற்றம் பெறச் செய்தது. எனினும் இதே மனிதன் தனது நலன்களுக்காக இயற்கையின் மீது தற்போது தாக்குதல் தொடர்ந்திருக்கிறான். இது எல்லையில்லாமற் போனால் இயற்கை திருப்பித்தாக்கத் தொடங்கும். இது மனிதனை பேரழிவுக்கு இட்டுச் செல்லும்.

460 கோடி வயதை பூர்த்தி செய்துள்ள இந்த பூமியின் கடைசிக் காலத்தில் பாரிய பூகம்பங்களும் எரிமலைக் குமுறல்களும் நடக்கும் என்று சில மதங்கள் சொல்கின்றன.

எனினும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த அளவுக்கு இன்று பூகம்பங்களும், கடற்கோள்களும் எரிமலைச் சீற்றங்களும் இல்லை. ஏழு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த அளவுக்கு இன்று பூகம்பங்களும், கடற்கோள்களும் எரிமலைச் சீற்றங்களும் இல்லை. ஏழு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த சுனாமி சீற்றம் தான் சமீபகாலத்தில் பரவலாக நடைபெற்ற மிகப் பெரும் அழிவு. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தான் அப்படி ஒரு சுனாமிப் பேரலை நிகழ்ந்திருக்க வேண்டும். பண்டைய கால இயற்கை அனர்த்தங்களோடு ஒப்பிடும்போது இன்றைய உலகம் அமைதிப் பூங்காதான். இதற்காக அந்தக் காலத்தில் தான் பாவிகள் அதிகம் இருந்திருப்பார்கள் என்று முடிவு கட்டிவிடத்தேவையில்லை. தனது அழிவை தானே உருவாக்கிக் கொள்ளும் சக்தி பூமிக்கு கிடையாது. பூமிக்கு கேடு ஏற்படுமானால் அது பூமிக்கு வெளியில் இருந்து தான் வர வேண்டும். அப்படி வரும் கேடு என்ன என்பதை கண்டு பிடித்து சொல்வதற்கும் நமது விஞ்ஞானிகள் தயாராகத்தான் இருக்கிறார்கள். அப்படி ஒரு வால் வெள்ளியோ விண்பாறையோ பூமியின் மீது மோதப் போகிறது என்றால் அதை விண்ணிலேயே கண்டுப் பிடித்து அழித்து விடும் ஆற்றலும் அமெரிக்க போன்ற பெரிய நாடுகளிடம் இருக்கிறது. இத்தகைய ஒரு ஆபத்து வருமானால் அது இடி இறங்குவது போல சட்டென நடைபெறாது. வால் வெள்ளியோ அல்லது விண்பாறையோ, அது பூமியை நெருங்குவதற்கு பல மாதங்களுக்கு முன்னரேயே விண்வெளி ஆய்வாளர்களினால் கண்டு பிடித்து விட முடியும். பூமிக்கு எவ்வளவு அண்மையில் அது வரும் என்பதையும் துல்லியமாகக் கணித்துவிடலாம். மாற்று ஏற்பாடுகளைச் செய்து அதை அழிக்க போதிய அவகாசம் இருக்கிறது. சூரியனை பல்வேறு பாதைகளில் சுற்றிவரும் விண் பாறைகளில் பெரியவை பலவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றின் பாதைகளும் கண்டறியப்பட்டுள்ளன. எனினும் சிறிய விண்கற்கள் தினமும் ஆயிரக் கணக்கில் பூமியில் விழுந்து கொண்டு தான் இருக்கின்றன. பாதி எரிந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட விண் கற்களை பல உலக அருங்காட்சியங்களில் பார்க்கலாம்.

எனினும் பெரிய பிரமாண்டமான பாறை எப்போதோ ஒரு தடவைதான் பூமியின் மீது மோதி பிரமாண்டமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. அவ்வாறான ஒரு வாய்ப்பு சமீபத்தில் கிடையாது. நிச்சயமாக 2012இல் இல்லை.

மணி ஸ்ரீகாந்தன்

Star Baby



ஸைனி ஸாரா

அமீர்அலி - அஸ்கா, வாழைச்சேனை - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் அதிக அளவில் தீவிபத்துகளில் சிக்குவது ஏன்?

## தீக்காய மருத்துவர் இஸட்.எம்.ஹாஜித் பேசுகிறார்

நேர்காணல்: ஸாதிக் ஷிஹான்



இலங்கையில் பெண்களே அதிகமாக தீ விபத்துகளுக்கு உள்ளாகின்றனர். இவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு வரும் போது, இப் பெண்கள் பொலிஸ் விசாரணையிலும் வைத்தியர்களிடமும் விபத்துக்கான உண்மைக் காரணங்களை மறைத்து போலிக் காரணங்களைச் சொல்வது வழமை. குடும்பத்தவர்களை அல்லது கணவனைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்ற அக்கறையே இதற்குக் காரணமானாலும் காயங்கள் ஏற்பட்ட இடங்கள், அதன் தீவிரத்தன்மை என்பனவற்றைக் கொண்டு அந்த விபத்து தற்செயலானதா திட்டமிடப்பட்ட தாக்குதலா என்பதை மருத்துவர்களால் அனுமானித்துக் கொள்ள இயலும்.

பெண்கள் நீண்ட அங்கிகளை அணிந்தபடி அடுக்களையில் சமைப்பது, தரையில் அடுப்பு மூட்டி சமைப்பது, நைலோன் அல்லது செயற்கை இழை ஆடைகளை அணிந்தபடி சமையலில் ஈடுபடுவது, குழந்தைகளை அருகில் வைத்துக் கொண்டு சமையல் வேலை செய்வது, குப்பி விளக்குகளை உபயோகிப்பது என்பன பெண்கள் தீ விபத்துக்கு ஆளாவதற்கான காரணங்களாகக் குறிப்பிடலாம்.

இரவு நேரங்களில் கனமான பருத்தி (cotton) ஆடைகளை பெண்களும், சிறுவர்களும் அணிவது நல்லது.

காதல் தோல்வி, காதலி மீது காதலனுக்கு ஏற்படும் ஆத்திரம், குடும்பத் தகராறு என்பனவற்றினாலும் தீ(ய) தாக்குதலுக்கு பெண்கள் ஆளாகின்றனர்.

விறகு அடுப்புகளை மூன்று அல்லது மூன்றரை அடி உயரத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும். சமைக்கும் போது குழந்தைகளை சமையலறைக்குள் விட வேண்டாம். அடுப்பங்கரை பக்கமாக அவர்களை வரவிடக் கூடாது. சில பெண்கள் ஒரு கையில் குழந்தையை ஏந்தியபடியே சமைப்பார்கள். குழந்தைகள் தீ விபத்துக்குள்ளாவதற்கு இது காரணமாகிறது.



கொதிக்கும் கறிக்குள் கை விடுவது, சுவரில் தொங்கும் குப்பி விளக்கை பற்றிப் பிடிப்பது, சூடு பறக்கும் ஆவி முகத்தில் படுதல், திடீரென வளைந்து கொதி நீருக்குள் விழுவது போன்ற விபத்துகள் நேர வாய்ப்புண்டு. மேசை மீதிருக்கும் தேனீர், சுடுநீர், சூடான உண்வுகள், எண்ணெய் என்பனவற்றை குழந்தைகள் இழுக்க முயலும். எனவே, பெற்றோல் நிலையத்தில்' தீக்குச்சியை உரச வேண்டாம் என்பது போலத்தான் சமையலறையில் குழந்தைகளும்.

கிராமங்களில் விறகு அடுப்பு பாவனை அதிகம் நகரங்களில் தற்போது விறகு அடுப்பு குறைந்து மண்ணெண்ணை மற்றும் காஸ் அடுப்புகள் மிகுந்து வருகின்றன. விறகு அடுப்பில் ஏற்படக் கூடிய அத்தனை அபாயங்களும் மண்ணெண்ணை அடுப்பிலும் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

காஸ் அடுப்புகளில் ஒழுக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. சில சமயம் தவறுதலாக காஸ் அடுப்பு திறந்து வைக்கப்படவும் முடியும். காஸ் கனமான ஒரு வாயு என்பதால் அது தரையில் இருந்து ஒரு அடி உயரத்துக்கு பரவியிருக்க முடியும். காலையில் எழுந்து சமையல் கட்டுக்குள் வரும் ஒரு பெண் காஸ் அடுப்பை பற்ற வைக்கும் போது தரையில் பரவியிருக்கும் வாயு கணத்தில் குப்பென பற்றி எரிய ஆரம்பிக்கும்.

உண்மையில் காஸ் வாயு மணமற்றது. மிக எளிதில் தீப்பற்றக் கூடிய வாயுவாக இருப்பதால் தான் அதற்கு நாசித்துவாரத்தை எளிதில் ஈர்க்கக்கூடிய மணமொன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. அடுக்களைக்குள் நுழைந்ததும் காஸ் வாசனை வருகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். பின்னர் சமையலறை கதவு, ஜன்னலைத் திறந்துவிட வேண்டும். பின்னர் வெளியே சென்று ஒரு ஐந்து நிமிடத்தில் திரும்பி வந்து காஸ் அடுப்பை பற்ற வைக்கவும். மூடப்பட்ட அல்லது குறுகிய இடமொன்றில் காஸ் தீப்பற்றிக் கொண்டால், என்ன நடந்தது என்பதை அறிந்து ஓட எத்தனிப்பதற்குள் காஸ் தன் வேலையைக் காட்டி விடும் என்பதால் எப்போதும் முன்னெச்சரிக்கையாக இருக்கவும், அடுப்பை அவ்வவ்போது சுத்தம் செய்யுங்கள். புதிய சிலிண்டருடன் இணைப்பைப் பொருத்தும் போது சரியாகத்தான் பொருத்தினோமோ என்பதை நிச்சயம் அவதானியுங்கள்.

அண்மைக்காலமாக பிரஷர்குக்கர்களின் பாவனை வெகுவாக அதிகரித்து காணப்படுகின்றது. இந்த பிரஷர்குக்கர்களிலிருந்து வெளியேறும் நீராவி மூலம் எதிர்பாராத எரி காயம் ஏற்படுகின்றது. எனவே அதனை கையாளம் போது கவனமாகவும், ஆறுதலாகவும் செயற்பட வேண்டும்.

அதேபோன்று வீட்டுத் தோட்டங்களில் காணப்படும் குப்பைகளை எரிப்பது வழக்கம். வாசனைத் திரவிய வெற்று போத்தல்கள், பயன்படுத்திய பூச்சிக் கொல்லி ஸ்பிரேக்கள் குப்பையுடன் கலந்து இருக்கும் போது அதனை அறியாத நிலையில் நாம் அந்த குப்பையை பற்றவைத்தால் இப்பொருட்கள் பாரிய வெடித்து சத்தத்துடன் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.

வீட்டுத் தோட்டக் கழிவு பொருட்களை எரிக்கும் போது இவ்வாறான பொருட்களை அப்புறப்படுத்தி விட்டு குப்பைகளை மாத்திரம் எரிக்கும் பட்சத்தில் தீ அனர்த்தங்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

அதேபோன்று வீடுகளில் கொதிநீர் ஆவி பிடிக்கும் போது பொருத்தமான, அகலமான பாத்திரங்களை பயன்படுத்தினால் கிடைக்கக் கூடிய பாதி பலன் அதிகமாக இருப்பதுடன் அது பாதுகாப்பாகவும் இருக்கும்.

மேற்குறிப்பிட்ட விபத்துக்கள் தவிர்ந்து தற்கொலை முயற்சிகள், குடும்பத்தகராறுகள், போதிய கல்வி அறிவின்மை, வறுமை என்பன காரணமாகவும் தீக்காயங்கள் ஏற்படுகின்றன. பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அவற்றுக்கு தீர்வு காணமுயற்சித்தால் இவ்வாறான திடீர் முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கலாம்.

இந்தியா போன்ற அயல் நாடுகளில் அதிக எண்ணிக்கையில் தீ விபத்துகள் ஏற்படுவதற்கு ஏழ்மையும் அறியாமையும் மட்டுமல்ல; சாதி பாகு பாடு, சீதனப் பிரச்சினை போன்றவையும் காரணமாகின்றன.


தீக் காயங்களை குணப்படுத்திவிடலாம் என்றாலும் இதற்கு பாதிக்கப்பட்டவர்களின் ஒத்துழைப்பும் அவசியம். தீக்காயம் பட்டவர்கள் குணமாகி வீடு திரும்பிய பின்னர் அனைத்தும் முடிந்து விட்டது என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் மீண்டும் மருத்துவரைச் சந்திக்க வேண்டும்.

தீக்காயம் பெரிதாக இருந்து அக்காயம் குணமாகும் போது

(31ஆம் பக்கம் பார்க்க)



தீக்காயங்களை, தழும்பு, வடுக்களின்றி குணமாக்க உதவும் விசேட அங்கிகள்



இந்த வசீகரமான தொப்பி இளைஞர் யார் தெரிகிறதா? மட்டக்களப்பில் இருந்து தமிழகம் சென்று புகழ்பெற்ற கெமராமேனாகவும் பின்னர் இயக்குநராகவும் முத்திரை பதித்த பாலுமகேந்திரா. பக்கத்தில் இளையராஜா. தமிழ்த் திரையுலகின் வாடா மலர்கள்.




குருவும் சிஷ்யனும்

இப் படத்தை நகல் செய்யும் போது அலுவலக பையன் சில தவறுகளைச் செய்து விட்டான். வலப்பக்க படத்தில் ஆறு தவறுகளை செய்திருக்கிறான். அவற்றைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்களா? கண்டுபிடிப்பை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அறுவரின் பெயர்களை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்றும் இன்றும்

மணி ஸ்ரீகாந்தன்







இரத்தினபுரி ஆஸ்பத்திரிக்கு அண்மையில் பாணந்துறை வீதி ஆரம்பமாகும் சந்தியின் அன்றைய, இன்றைய தோற்றங்களையே இங்கு காண்கிறீர்கள். அறுபதுகளின் முற்பகுதியிலும் இக் காட்சியைக் காணமுடிந்தது.

## மரண விசாரணை மன்றில் கேட்ட கதைகள்

# களனி ஆற்றங் கரையினிலே...

*எழுபதுகள் முதல் கொழும்பு திடீர் மரண விசாரணை மன்றுக்கு பத்திரிகையாளராக சென்று செய்தி சேகரித்துவரும் கட்டுரையாளர் தனக்கு தெரியவந்த உண்மைச் சம்பவங்களை இங்கே உங்களுடன் சுவை பட பகிர்ந்து கொள்கிறார்.*

சுமணாவுக்கு 18, தாபரேவுக்கு 20. படிக்கும் போதே இருவரும் காதலர்கள். பாடசாலைகளில் இருந்த கட்டுப்பாட்டினால் அடக்கி வாசிக்கப்பட்ட அவர்களின் காதல் பாடசாலையை விட்டு விலகிய பின் தீவிரமடைந்தது.

தாபரேவுக்கு அரசாங்க அமைச்சு ஒன்றில் 'பியூன்' வேலை கிடைத்ததும் இருவரும் திருமணம் செய்து கொள்ள தீர்மானித்தனர்.

பாலத்துறை பிரதேசத்தில் இவர்களது பாடசாலைக் காதலைப் பற்றி இரு வீட்டாருக்கும் தெரிந்திருந்ததால் இரு பக்கமும் பெற்றோர் தரப்பில் இருந்து பச்சைக் கொடி கிடைத்ததும் திருமணத்துக்கு மற்றொரு காரணமாக இருந்தது.

திருமணம் முடிந்த மறு வாரமே தனிக்குடித்தனம் போய்விட வேண்டும் என்பது தாபரேவின் எண்ணம். சுமணா மறு பேச்சு பேசவில்லை. அவளும் அதைத்தான் விரும்பினாள்.

சொந்த பந்தங்களின் பிக்கல் பிடுங்கல் இன்றி வாழ்க்கையை ஜாலியாக அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை இருவருக்கும் இருந்தது.

தனிக்குடித்தனத்துக்காக வாடகைக்கு வீடு தேடினான் தாபரே. தகுந்த வீடு எளிதில் கிடைக்கவில்லை. நண்பன் ஒருவனுக்கு சொந்தமான ஒரு வீடு கூலியாக இருப்பதாக இன்னொரு நண்பனிடம் இருந்து தகவல் கிடைத்தது.

ஓடோடிப் போய் அந்த நண்பனை கையோடு பிடித்துக் கொண்டான். வீடு இன்னும் காலியாகத்தான் இருந்தது.

சின்ன வீடுதான். ஆனால் களனி கங்கையின் கரையைத் தொட்டுக் கொண்டிருந்தது.

''உன்னிடமிருந்து எப்படி கூலி வாங்குவது? நீ எனக்கு பாடசாலையில் எவ்வளவோ செய்திருக்கிறாய்... விரும்பியதை கொடு'' என்று நண்பன் கூறிவிட்டான். ஒரு சிறிய தொகையை கொடுத்து ஒரு வருடத்துக்கு வீட்டை வாங்கிக் கொண்டான்.

வீடு களனி ஆற்றை தொட்டுக் கொண்டிருந்ததால் சுமணா என்ன சொல்வாளோ என்ற சந்தேகம் தாபரேக்கு இருந்தது. ஆனால் வீட்டை பார்த்த சுமணா எதுவும் சொல்லவில்லை.

பெரிய தொகையை கூலியாகக் கொடுத்து வீடு வாங்கக் கூடிய நிலையில் அவர்கள் இல்லை என்பது சுமணாவுக்கு தெரியும். எனவே குற்றம் ஏதும் சொல்லவில்லை.

வீட்டைப் பேசி முடித்த பின்னரே திருமணத்துக்கு தயாரானான் தாபரே. இரு தரப்பிலும் பெற்றோரிடம் இருந்து சிறிய தொகையே திருமணச் செலவுக்கென கிடைத்தது. மிகுதியை தாபரேவே புரட்ட வேண்டியதாயிற்று.

செலவுகளை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக்கு குறைத்து திருமணத்தை நடத்தி முடிந்ததும் கையில் கொஞ்சம் பணமே மிஞ்சியது. கையில் வேலை இருந்ததால் தாபரே எதற்கும் கவலைப்படவில்லை. தைரியமாக தனிக்குடித்தனம் சென்றான்.

உறவினர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினரின் பிக்கல் பிடுங்கல்கள் எதுவுமின்றி நான்கு மரச் சுவர்களுக்குள் சுமணாவுக்கும் தாபரேவுக்கும் வாழ்க்கை நாள் தோறும் இனித்தது.

மூன்று மாதங்களிலேயே சுமணா கருவுற்றாள். இருவரும் எதிர்பார்த்தது போலவே ஆண் குழந்தை பிறந்தது.

தனது பரம்பரையை கொண்டு செல்ல முதலாவது குழந்தை ஆண் குழந்தையாக இருக்க வேண்டும் என்று தாபரே விரும்பினான் அது போலவே நடந்ததில் இருவருக்குமே சந்தோஷம்.

இரண்டு பேரின் பெயர்களிலும் இருந்த முதல் எழுத்துக்களை எடுத்து சுதா என்று மகனுக்கும் பெயர் வைத்தார்கள்.

தாபரேயின் வீடு களனி ஆற்றை தொட்டுக் கொண்டு இருந்ததால் மழை பெய்யும் போது களனி ஆற்றில் நீர் மட்டம் வீட்டின் வாசற்படியை தொடும். ஆனால் 2, 3 மணித்தியாலங்களில் நீர் மட்டம் குறைந்துவிடும் ஆனால் சில சமயங்களில் ஓரிரு நாட்களுக்கு நீடிக்கும்.


தாபரேயின் மகன் சுதாவுக்கு இப்போது 9 மாதம் ஆகிறது. நன்றாக தவழ்கிறான். விடுமுறை நாட்களில் அவனுடன் விளையாடுவதே தாபரேவின் பொழுது போக்காகமாறியிருந்தது.

இந்த நிலையில்...

மலையகத்தில் மழைக்காலம் ஆரம்பமாகியது. மூன்று நாட்களாக பெய்த பேய் மழையில் களனி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்தது.

அன்று வெள்ளிக்கிழமை.

தாபரே அமைச்சில் வேலை முடிந்து திரும்பிய ஒரு மணிநேரத்தில் களனி கங்கையில் நீர் வரத்து அதிகரித்து தாபரேயின் வீட்டுக்குள்ளும் நீர் நிறைந்து விட்டது. சுமார் 1 அடி உயரத்துக்கு வீடு முழுவதும் வெள்ள நீர். வீட்டில் இருந்த மேசை, கதிரை, கட்டிலை தவிர மற்றைய பொருட்களை அருகில் இருந்த தெரிந்த கடையொன்றில் வைத்துவிட்டு வந்தான் தாபரே.



உடனடியாக வீட்டில் நிரம்பியிருந்த நீரை வாரி வெளியே இறைத்துவிட்டு முடித்த போது 12 ஆகிவிட்டது. சுமணாவும் அவனுக்கு துணை செய்தாள். அடுத்த வீட்டுக்காரர்கள் அதுவரை, சுதாவை வெளியே வைத்துக் கொண்டிருந்தனர்.

வீட்டுக்குள் புகுந்த நீரை வெளியே வாரி கூட்டித்துடைத்து முடித்த போது ஆற்றின் நீர் மட்டமும் குறைந்திருந்தது.

அடுத்த நாள் அமைச்சில் பெரிய அதிகாரியொருவர் வீடு மாறிப் போவதாக இருந்தார். அவரது வீட்டுப்பொருட்களை புதிய வீட்டுக்கு எடுத்துச் செல்லும் சுமை தாபரேயின் தோளில் சுமத்தப்பட்டது.

''காலை சரியாக 6 மணிக்கு அவரது வீட்டில் இருந்தாக வேண்டும். எனவே கொஞ்சம் தூங்க வேண்டும். நான் கதிரையில் உட்கார்ந்தே தூங்கிக்கொள்கிறேன். நீ கட்டிலில் சுதாவுடன் படுத்துக்கொள்'' என்று சுமணாவிடம் கூறிவிட்டு கதிரையில் படுத்த சிறிது நேரத்தில் குறட்டை விடத் தொடங்கினான் தாபரே. நீரை வெளியேற்றிய சிரமத்தின் களைப்பு அவன் முகத்தில் தெரிந்தது.

சுமணாவும் சுதாவை கட்டியணைத்தவாறு படுத்தாள். களைப்பில் அவளும் சீக்கிரமே தூங்கிப் போனாள். மேசை மேல் இருந்த மண்ணெண்ணை விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அதிகாலை மூன்று மணியிருக்கும் திடீரென கண் விழித்து தாபரே காலை கீழே வைத்தபோது கால் நன்றாக நனைந்து விட்டது. பார்த்தால் 1 1/2 அடிக்கு நீர் நிறைந்திருந்தது.

இரவில் மீண்டும் ஆற்றில் நீர் மட்டம் அதிகரித்து திரும்பவும் ஆற்று நீர் வீட்டுக்குள் புகுத்திருக்கிறது.

அடித்துப் பிடித்துக் கொண்டு சுமணாவை எழுப்பினான். கதறியடித்துக்கொண்டு அவளும் எழுப்பினாள்.

சுதாவை கட்டிலில் காணவில்லை. பதறியடித்துக்கொண்டு தேடினர்.

அதன்பின் உயிரற்ற உடல் கதவிடுக்கில்...

இரவில் எழுந்த சுதா கட்டிலில் தவழ்ந்த போது தவறி கீழே விழுந்து நீரில்மூழ்கி........


விபத்து மரணம் என்பது மரண விசாரணை அதிகரியின் அறிக்கை. சுமணாவும் தாபரேயும் இன்னும் அழுது கொண்டிருக்கின்றனர். சுமணவுக்கு 19, தாபரேவுக்கு 21

பரம்பரை தொடரும் சாத்தியம் நிறையவே உண்டு.

ஏ. மதுரை வீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிக்கறி





ஆரையூர் தமிழ்ச்செல்வி

நேற்று ராத்திரியெல்லாம் விடிய விடியப் பெய்த கடும் மழையில் ஒழுகிக் கரைந்துபோன களிமண் வீட்டின் ஓட்டுத் திண்ணையில் உட்கார்ந்து குமுறிக்கொண்டிருந்தான் குழந்தவேலு.

சே, என்ன வாழ்க்கை இது! காலையில எழும்பினா கட்டின பொண்டாட்டியக் காணல்லை... அவள் ஒரு சுண்டு அரிசிக்காக பொழுது விடியிறதுக்கு முன்னமே அடுத்த வீட்டு ஆமினா உம்மாவோட சேர்ந்து அவில் இடிக்கப்போயிற்றாள். புள்ளயள் ரெண்டும் பறட்டத் தலையோட, மழைத்தண்ணியில கப்பலோட்டி விளையாடுதுகள். பள்ளிகூடம் போறதுக்கு அதுகளுக்குச் சீருடை இல்ல. கொப்பி பென்சில் இல்ல ஒழுங்கான சாப்பாடு இல்லாம சோர்ந்து துவண்டு போய்க் கிடக்குதுகள். பசியை மறப்பதுக்குத் தண்ணியில விளையாடுதுகள்.

இந்தச் சின்னஞ்சிறிய குருத்துகள் செழித்து வளர வேண்டிய நேரத்தில, இப்படிக் கஷ்டப்படுதுகளே கடவுளே... இதென்ன சோதின,

வலுவிழந்துபோன தன்னிரு கால்களையும் சேர்த்து, முழங்கால் இரண்டையும் கட்டிப் பிடித்துக் கொண்டே தன் உள்ளத்து வேதனைகளில் குமுறிக் கொண்டிருக்கிறான் குழந்தைவேலு. அவன் உள்ளத்திலிருந்து எழுந்த நெருப்புக் கோளங்கள் அவன் கண்களிலிருந்து அருவி நீரைக் கொட்டின.

வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

வானத்தே நீர்ப் பொதிகளைச் சுமந்து கொண்டு கறுத்துத்திரண்டு இளங்காலை எழுஞாயிறை மறைத்துக்கொண்டிருந்த கருமேகக் கூட்டங்கள் தாம் சுமந்து வந்த நீர்ச்சுமைகளை மழையாக இறக்கி வைத்த மகிழ்ச்சியில் வெள்ளைப் புறாக்களாகவே சிறகடித்து மிதந்து கொண்டிருக்கின்றன.

குழந்தை வேலுவின் உள்ளத்து எரிமலையிலிருந்து கொழுந்துவிட்டெறியும் அந்தக் கொடூர நிகழ்வுக்குக் காரணம் யார்? எவை குழந்த வேலுவை அவனது இதயமே கேள்வி கேட்கின்றது. அன்று நிகழ்ந்த அந்த நிகழ்வுக்குக் காரணம் வேறு யாருமல்ல, நீயே தான் காரணம். இப்போது நீ படுகின்ற இந்தத் துன்பத்துக்கு நீயே காரணம். அது உன்னால்தான் விதைக்கப்பட்டது. இப்போது நீயே அதை அறுவடை செய்கின்றாய் என்று ஓயாமல் அவன் மனச்சாட்சி ஒலிமிட்டுக் கொண்டிருந்தது.

ஒரு வருடக காலச் சிறைவாசத்தின் பின்னர் அன்று அதிகாலையில்தான் அவன் வீடு திரும்பியிருந்தான். அவன் சிறைவாசஞ் செய்வதற்குக் காரணமாயிருந்த அந்த நிகழ்ச்சி இப்போது அவன் கண்களின் முன் நிழலாடுகின்றது.

குழந்தைவேல் நல்லபிள்ளை என்று ஊரில் பெயரெடுத்தவன். கடுமையாக உழைக்கின்ற தொழிலாளிதான் அவன். எந்த வேலையைக் கொடுத்தாலும் அதைத் திறமையாகவும், சிறப்பாகவும் செய்து முடிப்பாள். கூலி அதிகம் கேட்கமாட்டான். கொடுத்ததை வாங்கிக் கொள்வாள். அமைதியான பிள்ளை. அதனால் ஊரார்க்கு அவனை நன்கு பிடிக்கும். அவனும் நாலெழுத்துப் படித்தவன்தான், ஆனால் அவரது உத்தியோகம் தேடி அலையாமல் கிடைத்த வேலைகளைச் செய்து வந்தான்.

வயோதிபத் தாய் தந்தை, தம்பி, தங்கை இவங்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் பொறுப்புள்ளவனாக இருந்தான். இந்தப் பொறுப்புகள் தனக்குக் கிடைத்ததற்காக அவன் மகிழ்ச்சியடைந்தாள். ஒரு போதும் சலித்துக் கொள்வதில்லை.

இப்படி ஒழுக்கச் சீலனாக வாழ்ந்து வந்த அவன் நாளடைவில் கூடாதவர்களோடு கூடிக் குடிபோதைக்கு அடிமையானான். திருமண வாழ்வைத் தொடங்கியதும் அவன் தனது குடி பழக்கத்தை நிறுத்துவதற்கு முயற்சித்த போதும் அவனால் முடியவில்லை. இதனால் கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தின் பெரும்பகுதியைக் கூட்டாளிமாரோடு கூடிக்குடித்து விரயமாக்கினான். இதனால் மனைவி மக்களை சரியா-கவே கவனிக்க முடியவில்லை.

அவன் மனைவி செல்லம்மா கணவனே கண் கண்ட தெய்வம் என்னும் பரம்பரையில் வந்தவள். கணவன் போதையில் வந்து அடித்தாலும், உதைத்தாலும் திட்டினாலும் அந்த ஆக்கினைகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு அவனுக்கு கற்பில் கண்ணகியாகவும், பிள்ளைகளுக்குப் பாசமுள்ள தாயாகவும் இருந்து கொண்டு அண்டை, அயல் குடிமனைகளில் அரிசி, மிளகாய் இடித்துக் கொடுத்துக் கால்வயிறும் அரைவயிறுமாக ஒருவாறு காலத்தை ஓட்டிக் கொண்டு வந்தாள்.

அன்று வெள்ளாப்பில் வேலைக்குப் போன குழந்தைவேலு வழமைபோல நாலுகாலில் வந்தான். "பொடிச்சி செல்லம்மா! சோத்தை எடு இண்டைக்கு மத்தியானம் ஒண்டும் கிடைக்கல. பசி உசிரப் போக்குது." என்று வரும்போதே சத்தம் போட்டு கொண்டு வந்தான்.

நீங்க எண்ணெண்டாலும் வாங்கிற்று வருவீங்கெண்டு இவ்வளவு நேரமும் காத்திருந்து பொறகு இப்பதான் அவள் அன்னம்மாட்டப் போய்க் கடனுக்கு ஒரு சுண்டு அரிசிவாங்கித்து வந்து அத உலையில போட்டிருக்கன்... நீங்க குளிச்சிற்று வாங்க சோறு எடுத்து வெக்கிறன்" என்று செல்லமாமா கூறினான்.

"சோறு தின்ன என்னடி கறியாக்கி வைச்சிருக்கா..." கடுமையான தொனியில் கேட்டான்

"கறி ஒண்டும் கிடைக்கல்ல" என்று பயத்தினால் வார்த்தைகளை விழுங்கி விழுங்கி பேசினாள் செல்லம்மா

"கறி ஒண்டும் இல்லாம என்ன வெறுஞ் சோத்தையா திண்ணச் சொல்லுறா? வர வர உனக்கு கொழுப்பேறிப் போச்சுதடி! இருந்திக்க வாறன்" என்று அவளை அதட்டிக் கொண்டே குறுவடு வேலியால் எட்டிப் பார்த்தான். அங்கே பக்கத்து வீட்டு வளவுக்குள்ள ஒரு பாணிச்சேவல் தீன்பொறுக்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். அதைக் கண்டதும் குழந்தைவேலுக்க உசார் பிறந்துவிட்டது.

அவன் வேலிக்குள்ளால் மெதுவாகப் புகுந்து பதுங்கிப் பதுங்கிப் போய் அந்தச் சாவலைப் பிடித்து அதன் கழுத்தைத் திருகி எடுத்துக் கொண்டு வந்து அதை அறுத்து உரித்து செல்லமாவிடம் கொடுத்து 'கெதியாக் கறி ஆக்கிவை என்றான். அவள் நடுக்கத்துடன் அதை வாங்கிக் கொண்டே

"ஏன் இப்படியெல்லாம் செய்யுறீங்க. இது கோழிக்காறிக்குத் தெரிஞ்சா; இவ்விடத்தில குடியிருக்க உடமாட்டாள்." என்று சினந்தாள்.

"அதெல்லாம் ஒண்டும் நடக்காது இந்த வேலன ஒருத்தராலும் அசைக்கேலாது. நான் மேல் கழுவித்துவாறன் கெதியா ஆக்கிவெய். பசியால உசிர் போகுது"

அவன் கிணற்றடிக்குச் சென்றுவிட்டான்.

ஒரு வழியாகச் சாப்பாடு சமைத்து முடிந்த சாப்பிட்டுத் தூங்கிவிட்டார்கள். இரவு பத்து மணியிருக்கும். பக்கத்து வீட்டிலிருந்து கொம்பலும் கூக்குரலும் கேட்கின்றது.


"நாசமத்துப் போவானுகள் என்ட கோழிச்சாவலத் திண்டுபோட்டானுகள். ஐயோ இப்ப நான் என்ன செய்வன். என்டபிள்ளைக்குத் திடீரெண்டு வருத்தம் எழும்பி அதற் தூக்கிக் கொண்டு போய் வயித்தியரிட்டக் காட்டித்து இப்பதான் வந்த நான். அவர் எழுதித் தந்த மருந்து வாங்கக் காசில்லாம வெள்ளாப்பில் இந்தச் சாவல் வித்துத்தான் மருந்து வாங்க வேண்டும் எண்டுத்து வந்தநான்.. இஞ்ச சாவலக் காணலை. இப்ப எப்பிடி மருந்து வாங்குவன். எப்பிடி என்ட புள்ளயக் காப்பாத்தப் போறேனோ. கடவுளே! இந்த அனியாயத்தையெல்லாம் பாத்துக் கொண்டுதான் இருக்கியா? நாசமத்துப் போவானுகளுக்கு குடிச்ச வாய்க்குக் கோழிக்கறியா கேக்குது? எனக்கு ஆரெண்டு தெரியும். பொழுது விடியட்டும் அவனுக்குக் கட்டிக்காட்டுறன் மருந்து!"

அந்தக் கொப்பலும் கூக்குரலும் ஓய்வதற்கு வெகுநேரம் எடுத்தது. செல்லமாவுக்கு நித்திரையேவரவில்லை. விடிஞ்ஞா என்ன நடக்கப் போகுதோ அவள் உடலெல்லாம் வெடவெடத்து நடுக்க மெடுக்கத் தொடங்கிவிட்டது. குழந்தை வேலுக்கு இந்த ஒப்பாரி ஓலம் ஒன்றும் கேட்கவில்லை. அவன் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தான்.

அடுத்த நாள் காலையில் இரண்டு பொலிஸ்காரர்கள் வந்து குழந்தை வேலுவைக் கைது செய்து கொண்டு போனார்கள். முன்னரும் குடி போதைக்காக பல திருட்டு விளையாட்டுகளைச் செய்திருந்த குழந்தை வேலு வசமாக மாட்டிக்கொண்டான். நீதிமன்றத்தில் அவனுக்கு ஒரு வருடம் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

"தீமைச் செயல்களை விட்டுவிட்டு நன்மையான செயல்களைச் செய்வதுதான் நாம தேடிச் சம்பாதிக்கின்ற பெரிய சொத்துக்களாகும். பிறருக்கு செய்கின்ற நன்மையான செயல்கள் தான் நம்மோடு வந்து நம்மை நலமாக வாழவைக்கும். நாம் பிறருக்குச் செய்கின்ற தீமையான செயல்களோ நம்முடன் இருந்து நம்மையும் நமது குடும்பத்தாரையும் அழிந்துவிடுகின்றன. அதனால்தான் "நன்மையும் தீமையும் பிறர்தர வாராது" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதனால் இனிமேலாவது ஒழுக்கமாக நடந்து கொள்ளுங்கள்." என்று அவன் சிறையிலிருந்து விடுதலையானபோது அந்தச் சிறைச்சாலை அதிகாரி கூறிய வார்த்தைகள் இப்போதுதான் புத்தியில் உறைத்தன. ஒரு முடிவுக்கு வந்தவனாகத் துள்ளி எழுகிறான் அவன். தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக ஒழுங்கான உழைப்பைத் தேடி நடக்கிறான்.

## என்னைத் தெரிகிறதா?



கண்டுபிடிக்க முடியாவிட்டால் புரட்டுங்கள் 28ஆம் பக்கத்தை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போன கூப்பன் புத்தகங்கள்...

எழுபத்து ஏழாம் ஆண்டில் ஜே.ஆர். அரசு பதவிக்கு வந்தது. அதன் பின்னர்தான் கூப்பன் பங்கீட்டு முறை ஒழிக்கப்பட்டது. கூப்பன் உணவு பங்கீட்டு முறை என்றால் என்ன என்பது இன்றைய தலைமுறையினருக்கு தெரியாது.

அந்தக் காலத்தில் அரிசியும் மிளகாய், மாசி, கொத்தமல்லி போன்ற உணவு பொருட்களையும் ஒரு வாரத்துக்கு இவ்வளவு என்று பங்கீட்டு முறையில் ஒவ்வொருவருக்கும் அரசு வழங்கி வந்தது. ஒரு வாரத்துக்கு ஒருவருக்கு இரண்டு கொத்து அரிசி வழங்கப்படும். பின்னர் ஒரு கொத்து அரிசி 25 சதத்துக்கும் இரண்டாவது கொத்து அரிசி இலவசமாகவும் வழங்கப்பட்டது. அன்றைக்கு அரிசிதான் அரசியலை ஆட்டிப் படைத்து வந்தது. அரிசி தவிர்ந்த ஏனைய பொருட்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டிருந்தது. இந்த பொருட்களை மாதம் ஒரு முறை மொத்தமாக வாங்கிக் கொள்ளலாம். ஒரு இறாத்தல் மிளகாய் குடும்ப அட்டைப்படி வாங்கினால் ஐந்து ரூபாவுக்கும் குறைவாகத் தான் இருக்கும். வெளிச்சந்தையில் 1969-70 காலப்பகுதியில் 25-30 ரூபாவாக இருக்கும்.

ஆனால் அரிசியை அனைவருமே வாரா வாரம் தவறாமல் வாங்கி விடுவார்கள். இந்த வாரம் வாங்காவிட்டால் அடுத்த வாரத்துக்கு அது செல்லுபடியாகாது. அரிசி வாங்குவதற்கென ஒரு கார்ட் ஒவ்வொருவர் பெயரிலும் வழங்கப்பட்டிருக்கும் இதை கூப்பன் புத்தகம் என்று அழைப்பார்கள். ஒரு வீட்டில் பத்துப் பேர் இருந்தால் பத்து கூப்பன்களிலும் உள்ள பத்து இலக்கங்களை வெட்டி எடுத்துக் கொண்டு கடைக்காரர் பத்து கொத்து அரிசி வழங்குவார். 50 சதத்துக்கு இரண்டு கொத்து (இரண்டு கிலோவுக்கும் சற்றுக் குறைவு) அரிசி வழங்கப்படும் என்றால் இன்றைக்கு யார் நம்பப் போகிறார்கள்!

இந்தக் கூப்பன் புத்தகம் உயிர் நாடி மாதிரி. இதைத் தொலைத்துவிட்டால் அரிசி கிடைக்காது. வெளிச் சந்தையில் ஒன்று முதல் ஒன்றரை ரூபா வரை கொடுத்து அரிசி வாங்க வேண்டியிருக்கும். பெரும்பாலான குடும்பங்களுக்கு இது கட்டுப்படியாகாது. எனவே, பெண்கள் தாலியைப் பாதுகாப்பது போல மக்கள் தமது கூப்பன் புத்தகங்களை பாதுகாத்து வந்தார்கள். இக் கூப்பனின் அத்தியாவசியத்தையும் முக்கியத்துவத்தையும் இன்றைய தேசிய அடையாள அட்டைக்கு ஒப்பிடலாம். தேர்வுக்குச் செல்ல, அரசாங்க வேலைகளைச் செய்ய அனைத்துக்கும் கூப்பன் கார்ட் இருக்கிறதா? என்று கேட்பார்கள். கூப்பன் புத்தகம் இல்லாவிட்டால் உங்களை அந்நியன் மாதிரிப் பார்ப்பார்கள்.

அக்காலத்தில் தென்னிந்தியர்கள் திருட்டுத்தனமாக இலங்கைக்கு வந்து தொழில் செய்து வந்தார்கள். இவர்களின் வரவைத் தடுப்பதற்காக வடக்கு கடற்கரையோரமாக இராணுவ ரோந்து தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. ஒரு தமிழரிடம் கூப்பன் இல்லாவிட்டால், திருட்டுத்தனமாக இந்தியாவில் இருந்து வந்தவனோ? என்ற சந்தேகப்பார்வை விழுந்து விடும். எனவே தமிழர்கள் தமது கூப்பன்களை கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தார்கள்.



அந்தக் காலத்தில் வீட்டில் கடைசி பையனான என்னிடம் தான் கூப்பன் அரிசி வாங்கும் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. வாரம் இருபது கொத்து அரிசியை வாங்கி மூலைப்பையில் போட்டு சைக்கிளில் மாட்டி வீட்டுக்கு எடுத்து வருவது என் வேலை. வீட்டுக்கு வந்ததும் அரிசியை ஒரு பெரிய வாளியில் கொட்டிவிட்டு அறையில் இருக்கும் (பாதுகாப்பு கருதி கூப்பனை பையின் அடியில் வைத்து அதன் மேல் அரிசியை போட்டு எடுத்து வருவேன்) கூப்பன் புத்தகங்களை (ஒரு உறையில் போட்டு வைத்திருப்போம்) அது இருக்க வேண்டிய இடத்தில் வைத்து விடுவேன்.

ஒரு தடவை கூப்பன் கடையில் அரிசி வாங்கி வந்தேன். மறுகிழமை திரும்பவும் அரிசி வாங்கத் தயாரான போது கூப்பன்களை வைத்திருந்த இடத்தில் அவை இருக்கவில்லை. பொதுவாக ஒரு கவரில் போட்டுத்தான் வைத்திருப்போம். தேடிப் பார்த்ததில் கூப்பன் புத்தகங்கள் கிடைக்கவே இல்லை. வீட்டையே புரட்டிப் போட்டுத் தேடியாகிவிட்டது. இறுதியில் பழி என் மீது திரும்பியது. ''நீதான் கடைசியாகக் கடைக்குப் போனவன். வேறெங்கோ பராக்கு பார்த்துக் கொண்டிருந்து விட்டு கூப்பனைத் தொலைத்து விட்டாய்!'' என்றார் மூத்த அண்ணன் எனக்கென்னவோ கடைக்குள் போட்டபின் அரிசியை வாங்கியதாக ஞாபகம். எனினும் குடும்பத்தாரின் தாக்குதல்களுக்கு தனியாக என்னால் ஈடு கொடுக்க முடியவில்லை.

சாப்பிட உட்காரும் போது, ''நன்றாக அமுக்கத் தெரியும்; கூப்பனைத் தேடித்தரத் தெரியாது'' என்றார் அண்ணா. ''கூப்பன் இல்லாவிட்டால் உனக்கு சோறு கிடையாது'' என்றார் இளைய அண்ணன். நான் குற்றவாளியாக அலைந்து திரிந்தேன்.

எங்கள் மாமாவின் மகன் ஜோன் அப்போது எங்களுடன் தங்கியிருந்தான். தனக்கு தெரிந்த மாந்திரிகர் இருப்பதாகவும் மை வெளிச்சத்தில் நடந்த விஷயங்களை சரியாகப் பார்த்து சொல்லக் கூடியவர் என்றும் அவன் சொல்லிவிட்டு மாந்திரிகரைப் பார்க்கச் சென்றான்.

இரவில் திரும்பி வந்தவன், ''மை வெளிச்சத்தில் சரியாக அவன் சொன்னான். வீடு இருக்கும் இடத்தையும் வீட்டின் முன் ஒற்றைத் தென்னைமரம் நிற்பதையும் சரியாகச் சொன்னான்'' என்று வீட்டாரிடம் சொல்ல ஆரம்பித்தான். நான்தான் குற்றவாளியோ என்று நினைத்து என் உடல் சில்லிட்டு விட்டது.

காணாமல் போன பொருள் வீட்டுக்கு வெளியே தூரத்தில் இருக்கிறது. சில பரிகாரங்கள் செய்ய வேண்டும். அப்போது அது திரும்பிவரும் வீட்டில் ஏற்பட்ட சில கஷ்டமான காரணங்களினால்தான் அந்தப் பொருள் வெளியே நிற்கிறது என்று மாந்திரிகன் தன்னிடம் கூறியதாகவும் பரிகாரங்கள் செய்ய வேண்டியிருக்கும் என்றும் எங்கள் மச்சான் சொன்னான்.

கிறிஸ்தவர்களான நாங்கள் பரிகாரம் செய்ய நிறைய யோசித்தோம். பரிகாரம் செய்யப்போய் தம்பிக்கு (எனக்கு) ஏதேனும் நேர்ந்துவிடுமோ என்றும் வீட்டில் பயந்ததாக கேள்விப்பட்டேன்.

சில நாட்கள் சென்றிருக்கும். அம்மா ஞாயிறு கோவிலுக்குச் செல்வதற்காக தன் டிரங்கு பெட்டியைத் திறந்து சாரிகளைத் தேடியிருக்கிறாள். சாரி, பொருத்தமான பிளவுஸ் எல்லாம் குடைந்து தேடியபோது பெட்டியின் அடியில் இருந்து ஒரு கவர் வெளிப்பட்டிருக்கிறது. திறந்து பார்த்தால் காணாமற்போன கூப்பன் புத்தகங்கள். அனேகமாக சாரிகளை மடித்து வைக்கும்போதோ, எப்போதோ தவறுதலாக பெட்டிக்குள் கூப்பன் கவர் சென்றிருக்கிறது. எல்லோரையும் விட எனக்குத்தான் அதிக மகிழ்ச்சி!

சீதை மாதிரி தீயில் இறங்கி வெளியே வந்து விட்டேன் என்பது முதல் சந்தோஷம். மாந்திரிகன் சொன்னது பிழைத்துவிட்டது என்பது கூடுதல் சந்தோஷம்!

**ரவி வில்லியம், கோனகல்தெனிய**

அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது...

# கொலோன் நகரின் பூட்டுப் பாலம்



உலகின் வாசனை நகரம் என்றால், அது ஜேர்மனியின் கொலோன் நகரம்தான். ஓ டி கொலோனைத் தயாரித்து உலகத்துக்குத் தந்த நகரம் அது. பல்வகை ஒயின்களை வாசனைத் திரவியங்கள் உற்பத்தியாகும் இடமும் இது.

இங்கே படத்தில் காணப்படுவது கொலோன் நகரத்தை ஊடறுத்துச் செல்லும் ரைன் நதி மீது அமைக்கப்பட்ட பாலத்தின் இறந்த தோற்றம். இரண்டாம் உலகப் போரின் போது நேச நாட்டுப் படைகளின் வான் தாக்குதலில் பாலம் தகர்ந்தது.

இப் பாலம் ஆயிரம் ஆண்டுகள் பழமையான கதீட்ரல் தேவாலயத்துக்கு அருகாமையில் 420 மீட்டர் நீளத்துக்கு அமைந்துள்ளது. இது ஒரு ரயில் பாலம். கம்பி வேலி அமைந்த நடை பாதை வழியாகவும் நடந்து சென்று ரைன் நதியின் அழகை ரசிக்கலாம்.

போர் முடிந்து ஜேர்மனி வேகமாக முன்னேறத் தொடங்கிய போது இப்பாலத்தை மீண்டும் பழைய வடிவிலேயே கட்டி எழுப்பினார்கள். இங்கே சொல்ல வந்த விஷயம் அதுவல்ல.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இக்கம்பி வேலி பாதையூடாக நடந்து சென்ற ஒரு தம்பதியினர் தமது பெயர்களையும் திருமணத் திகதியையும் ஒரு பூட்டில் பொறித்து கம்பிவலையில் அதைப் பூட்டி வைத்துவிட்டுச் சென்றுவிட்டனர். நீங்கள் தெருவில் நின்று வானத்தை அசைவற்றுப் பார்த்தபடி ஐந்து நிமிடம் நின்றால் அதைக் காணும் ஏனையோரும் அண்ணாந்து பார்க்கத் தொடங்கி விடுவார்கள். கொலோன் பாலத்திலும் இதுதான் நடந்தது.

இந்த ரயில் பாலத்தில் திருமணமானவர்கள் தம் பெயரையும் திருமணத் திகதியையும் பூட்டில் பொறித்து பூட்டி விட்டால் அது திருமண பந்தம் நீடிக்க உதவுமோ? அதனால்தான் அப்படிச் செய்திருக்கிறார்களோ? என்று எண்ணிய இளந்தம்பதியினர் ஆளாளுக்கு பூட்டுகளைத் தொங்க விடத் தொடங்கினர். கொலோன் பெரு நகரச் சேர்ந்தவர்களும் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களும், இதை ஒரு புனித சடங்காகச் செய்ய ஆரம்பித்தனர். இப்பாலத்தில் ஆயிரக் கணக்கில் பூட்டுகள் தொங்க ஆரம்பித்தன.

இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், பூட்டைப் பூட்டும் தம்பதியினர் ஒரு சாவியைத் தம்மிடம் வைத்துக் கொண்டு மற்ற சாவியை ரைன் நதியில் வீசி விடுகின்றனர். திருமண பந்தம் நீடித்து நிலைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பின் எதிரொலி இது. திருமணம் முறிந்து விட்டால் பூட்டைத் திறக்கத்தான் மற்ற சாவியை தம்முடன் வைத்துக் கொள்கிறார்களோ தெரியவில்லை.

இப்போது, பாலம் முழுக்கத் தாக்குதல் நிகழாமலேயே முறிந்து விழுமோ என்று மலைக்கும் அளவுக்கு இலட்சக் கணக்கான பூட்டுகள், பல வர்ணங்களில், பல அளவுகளில், பல வடிவங்களில் இங்கே தொங்கிக் கொண்டிருக்கின்றன. பலர், இதய வடிவிலான தகடுகளில் பெயர் பொறித்து பூட்டி வைத்திருக்கிறார்கள். யாரோ ஒருவர், நீளமான (மோட்டார் பீட்டர்) ஒன்றையும் தொங்க விட்டிருக்கிறார்.

இங்கே ஒரு பழைய ஆங்கிலப் பாடல் ஞாபகத்துக்கு வருகிறது. பாடலின் தலைப்பு ஓல்ட் ஓக் ட்ரீ (old oak tree). பாடல் நாயகன் கிராமத்தை விட்டு வேலை தேட நகருக்குச் செல்கிறான். காதலியைப் பிரிந்து செல்வது கஷ்டமாக இருக்கவே, ஊர் எல்லையில் நிற்கும் பருத்த பழைய ஓக் மரத்தின் கிளை ஒன்றில் ஒரு மஞ்சள் ரிப்பனை தன் காதலுக்கு சாட்சியாக கட்டி விட்டு, நான் திரும்பி வரும் வரை எனக்காகக் காத்திரு என்று ரிப்பன் சாட்சியாக காதலியிடம் சொல்கிறான். காதலியை முத்தமிட்டு தண்டவாளக் கடக்கிறான்.

பல ஆண்டுகளின் பின்னர் கை நிறைய பணத்துடன் அவன் ஊருக்குத் திரும்பி வருகிறான். தூரத்தில் இருந்தே, காதலுக்கு சாட்சியாக தன் மஞ்சள் ரிப்பன் மரத்தில் காணப்படுகிறதா என்று நோட்டமிடுகிறான். ஆங்கே நூற்றுக்கணக்கான ரிப்பன்கள் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன. அதாவது, வெளியூருக்குச் சென்ற நூற்றுக்கணக்கானோரின் காதலின் நினைவாக ரிப்பன்களைக் கட்டிச் சென்றிருக்கிறார்கள்! இவ்வாறு எல்லா நாடுகளிலும் நம்பிக்கைகள் இருக்கத்தான் செய்கின்றன.

இன்னும் எத்தனை இதயக் காதலர்கள் பாலங்களைத் தாழ் பூட்டுகளுடன் செல்லப் போகிறார்களோ தெரியவில்லை!

பார்த்து, அனுபவித்து, எழுதியவர்

**தம்பிலுவில் இஸ்மாயில்**

அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் பொழுது

மணி ஸ்ரீகாந்தன்

# விஸ்வரூபம் எடுத்த அப்பா...

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை கலைத்துறையில் ஜொலிக்கும் நட்சத்திரமாக திகழ்பவர் கே.சந்திரசேகரன். வானொலி, தொலைக்காட்சி, சினிமா என அனைத்து துறைகளிலும் இன்று வரை எந்த வித தடங்கலும் இல்லாமல் வலம் வந்து கொண்டிருக்கிறார்.


''சிறு வயதில் நான் ரொம்பவும் குறும்புக்கார பையன். வெளியே போனால் பிரச்சினையோடுதான் வீட்டுக்கு வருவேன். அதனால் என் பக்கம் நியாயம் இருந்தாலும் வீட்டில் எனக்குதான் அடி விழும். என்னை கே.சந்திரசேகரன் என்று தான் எல்லோருக்கும் தெரியும் ஆனால் நான் சிறுவனாக இருந்த போது என்னை சந்திரபோஸ் என்றுதான் எல்லோரும் அழைத்தார்கள். அதற்கு ஒரு காரணமும் இருக்கிறது. நான் பார்க்க கொழு கொழு வென்றிருப்பேன். பாடசாலை நண்பர்கள் 'தடியா' என்று அழைப்பார்கள். என்னை யாராவது தடியா என்று அழைத்தால் அவர்களை புரட்டிப் போட்டு அடித்து விட்டுதான் மறு வேலை பார்ப்பேன். ஒரு நாள் அப்படித்தான் என்னை ஒருவன் தடியா என்று சொல்ல நான் அவனை அடித்துப் போட்டு விட்டு வீட்டுக்கு வந்தேன். நான் வீட்டுக்கு வருவதற்கு முன்பாகவே நான் அவனை அடித்த செய்தி என் வீட்டுக்கு வந்து விட்டது. வீட்டு வாசலில் அப்பா தடியுடன் காத்திருந்தார். என் அப்பா கையில் வைத்திருந்த அந்த தடியைப் பற்றியும் கூற வேண்டும். அது என் தாத்தா காலத்து தடி. அந்த தடியின் ஒரு பக்கத்தில் உள் பிடி பந்துபோல இருக்கும். அதைப் பிடித்துக் கொண்டு அடித்தால் தடி கையிலிருந்து நழுவாது... அந்த தடியைப் பார்த்ததும் என் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

''நீ திருந்தவே மாட்டியாடா'' என்று அப்பா கோபத்துடன் என்னை நோக்கி தடியுடன் பாய்ந்து என்னை விளாசித் தள்ளினார். அப்போது அங்கே வந்த என் அம்மா'' ம்... அப்படித்தான் நல்லா போடுங்க எவ்வளவு அடித்தாலும் அவன் திருந்தவே மாட்டான்...'' என்று அப்பாவை அம்மா உற்சாகப் படுத்த அப்பாவின் உற்சாகம் அதிகரித்தது. பிறகு அப்பா அந்த தடியின் பிடியை மாற்றி குமிழ் முனை எனக்குப்படுமாறு அடித்தார் அப்படி அவர் அடித்த போது தடியின் குமிழ் முனை என் நடு மண்டையில் நச்சென்று விழுந்தது. தலையில் இருந்து ரத்தம் பொல பொலவென்று வடிய...'' அடப்பாவி மனுஷா என் புள்ளைய கொல்லப் பார்க்கிறியா'' என்று அம்மா அப்பாவைப் பார்த்து கத்த ஆரம்பித்தார்...

அப்பா என்னை விளாசித் தள்ளிய போது உற்சாகப்படுத்திய அதே அம்மா என் உடம்பில் ரத்தத்தை பார்த்ததும் பதறிப் போனாள். அம்மா போட்ட சத்தம் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை எட்டிப் பார்க்கவும் வைத்தது. இப்போது அப்பா மௌனித்து நின்றுக் கொண்டிருந்தார். பிறகு என்னை அம்மாவும், அப்பாவும் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்கள். இந்த விடயத்தில் நான் கற்றுக் கொண்ட விடயம் இதுதான்:



கே.சந்திரசேகரன்



பெற்றோர்கள் பிள்ளைகளை தண்டிப்பது, அவனை ஒரு நல்ல பிரஜையாக உருவாக்குவதற்காகத்தான். அதே நேரத்தில் அந்த பிள்ளைக்கு ஆபத்து என்றாலும் தாங்கிக் கொள்ள மாட்டார்கள். உலகெங்கும் இதுதான் நியதி. நான் அப்பாவான பின்னர் இதை அனுபவபூர்வமாகவே உணர்ந்து கொண்டேன்.

## ஜுலை மாத பலாபலன்கள்

01-07-2012 தொடக்கம் 31-07-2012 வரை

சோதிடமாமணி நவா

### மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி பார்வைகள் சிறப்பாக உள்ளதால் தொழில் சிறப்பு, பணவரவு, காரியங்களில் அனுகூலம் எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி, குடும்பத்தில் மன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. உத்தியோகஸ்தர்கள், மாணவர்களுக்கு மனக்குறைகள் நீங்கும். முதலீட்டாளர்கள் கூடிய முதலீடுகளை திட்டமிட்டு செயற்படுத்துவது நல்லது. மேட இராசியினருக்கு நன்மைகள் பல தரும் மாதமாகும்.

### இடபம்

கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருக சீரிடத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி பார்வைகள் மத்திம பார்வையாக உள்ளதால், தொழில்களில் மந்தம், பணவரவு தாமதம், எதிர்பாரா செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியற்ற தன்மையுண்டு. உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் மனக்குறைகளுக்கு உள்ளாவர். முதலீட்டாளர்கள் கூடிய முதலீடுகளை தவிர்த்து அளவுடன் வைத்துக் கொள்வது நல்லது. இடப இராசியினருக்கு சில இடர்களை தரும் மாதமாகும்.

### மிதுனம்

மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை புனர்பூசத்து முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி பார்வைகள் ஓரளவு நன்மை தருவதால் செய்தொழில் விருத்தி, தாமதமான பணவரவு, இடையிடை மனக்குழப்பங்கள், குடும்பத்தில் வீண் செலவுகள் திட்டமிட்ட கருமங்களில் தடைகள். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் கருமங்களில் மறைமுக எதிர்ப்புகள், மன சோர்வுகள் முதலீட்டாளர்களுக்கு ஓரளவு நன்மையுண்டாகும். மிதுன இராசியினருக்கு மனக்கஷ்டம் பெரிதாக தராத மாதம்.

### கடகம்

புனர்பூசத்து நாலாங்கால் பூசம், ஆயிலியம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி பார்வைகள் நன்மை தருவதால், செய்தொழில் சிறப்பு, எதிர்பார்த்த பணவரவு, காரியங்களில் அனுகூலம், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலை, நினைத்த காரியங்களில் வெற்றி. உத்தியோகஸ்தர்கள், மாணவர்களின் கருமங்களில் நிறைவு பெறும் முதலீட்டாளர்கள் முதலீடுகளால் இலாபம் அடைதல் உண்டாகும். கர்க்கடக இராசியினருக்கு கஷ்டம் பெரிதாக ஏற்படாத மாதமாகும்.

### சிங்கம்

மகம், பூரம், உத்தரத்து முற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி, பார்வைகள் ஓரளவு திருப்தி தரக் கூடியதாக உள்ளதால், செய்தொழில் நன்மை. காரியங்களில் சிறிது தடைகள், பணவரவு தாமதம் புதிய முயற்சிகள் தாமதம். குடும்பத்தில் மன மகிழ்ச்சி கருமங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் மனக் குழப்பமடைதல் முதலீட்டாளர்கள் பணக்கஷ்டங்களுக்கு உள்ளாகுதல் உண்டாகும். சிங்க இராசியினருக்கு சிறிய நன்மைகள் தரும் மாதம்.

### கன்னி

உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன் சிறப்பாகவும், சனி செவ்வாய் வரை சிறிது பாதகமாக உள்ளதால் செய்தொழில்களில் தாமதமான நன்மை பணவரவு சிறிது தாமதமாகுதல் குடும்பத்தில் எதிர்பாரா செலவுகள் அதனால் பண தட்டுப்பாடு உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் காரியங்களில் நன்மை, முதலீட்டாளர்கள் முதலீடுகளால் சிறிது கவலை கொள்ளல் உண்டாகும். கன்னி இராசியினருக்கு பெரிதாக கஷ்டம் தராத மாதம்.

### துலாம்

சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி பார்வைகள் மத்திமமாக உள்ளதால் எதிலும் கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. செய்தொழில்கள் சீராக அமையாது மனக்கவலை தரும். பணவரவுகளில் குறைபாடுகளுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியற்ற தன்மை. உத்தியோகஸ்தர்கள், மாணவர்களுக்கு வீண் கஷ்டங்கள், முதலீட்டாளர்கள் முதலீடுகளால் மனக்கஷ்டமடைவர். துலா இராசியினருக்கு அவதானமிருந்த மாதம்.

### விருச்சிகம்

விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி பார்வைகள் சிறந்து விளங்குவதால் சகல காரியங்களிலும் நன்மைகள் உண்டாகும். செய்தொழில்கள் சீராக அமையும், பணவரவுகள் முன்னேற்றம் பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் காரியங்களில் வெற்றி பெறுவர். முதலீட்டாளர்கள், புதிய முதலீடுகளை திட்டமிட்டு செய்வர். விருட்சிக இராசியினருக்கு மகிழ்ச்சி தரும் மாதமாகும்.

### தனுசு

மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி பார்வைகள் தீமை தராத வகையில் உள்ளதால் செய் தொழில்கள் சீராக நடைபெறும். பண வரவுகள் சிறிது கஷ்டம் தந்து மறையும். குடும்பத்தில் எதிர்பார்த்த கருமங்கள் தாமதமாகும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் மனக்குறைகளுக்கு ஆளாகுவர். காரியங்களில் வீண் தடைகள் ஏற்படும். முதலீட்டாளர்கள் முதலீடுகளில் அக்கறையுடன் செயற்படுவது நல்லது. தனு இராசியினருக்கு சிறிது குழப்ப நிலையை தோற்றுவிக்கும் மாதம்.

### மகரம்

உத்தராடத்துப் பின்முக்கால் திருவோணம், அவிட்டத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சனி, வியாழன் பார்வைகள் சிறப்பாக உள்ளதால் பல விதத்திலும் நன்மைகள். செய்தொழில் சிறப்பு, பணவரவுகள், புதிய முயற்சிகள் அனுகூலம். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய நன்மை உத்தியோகஸ்தர்கள், மாணவர்களுக்கு மனக் கஷ்டங்கள் விலகல், முதலீட்டாளர்கள் முதலீடுகளால் கூடிய நன்மைகளை பெறல் உண்டாகும். மகர இராசியினருக்கு மனக் குழப்பம் தராத மாதம்.

### கும்பம்

அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி, பார்வைகள் பெரிதாக பாதிப்பு தராது செய்தொழில்கள் சீராகும், பணவரவுகள் திருப்தி தரும் புதிய முயற்சிகளில் தடைகள் உண்டு. குடும்பத்தில் மனக்கஷ்டங்கள் விலகும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் பொறுமையுடன் நடத்தல் நன்மை தரும். முதலீட்டாளர்கள் பணக் கஷ்டங்களிலிருந்து விடுபடுவர். கும்ப இராசியினருக்கு குழப்பம் தராத மாதமாகும்.

### மீனம்

பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வியாழன், சனி பார்வைகள் திருப்தியாக இல்லாவிட்டாலும், தீமை செய்யாது. செய்தொழில்களில் சிறிது குழப்பநிலை உருவாகும். பணக் கஷ்டங்களுக்கும் இடமுண்டு. அவதானம் தேவை குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும் கடன் தொல்லைகளுக்கும் இடமுண்டு உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் மனக்குறைகளுக்கு ஆளாகுவர். முதலீட்டாளர்கள் பாரிய முதலீடுகளை தவிர்த்துக் கொள்ளல் நல்லது. மீன இராசியினருக்கு மனக் கஷ்டம் பெரிதாக தராத மாதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானவில் மருத்துவம்

பதில் தருபவர் :
**எஸ். எப். எல். அக்பர்,** *MBBS (Cey) MS (Cey)*
*MRCOG (UK)* மகப்பேற்று மருத்துவம், பெண் நோய் மருத்துவம்

**வயது 24. 13இல் பூப்படைந்தேன். அப்போதிலிருந்து எனக்கு வெள்ளைபடுகிறது. ஒரு வைத்தியரை அணுகியபோது மருந்து தருவதற்கில்லை என்றார். கடந்த சில மாதங்களாக உறுப்பில் அரிப்பு ஏற்பட்டுள்ளது. வெள்ளைப்படுதலின் போது கருக்கட்டல் நிகழாது எனச் சிலர் கூறுகின்றனர். வெள்ளைபடுதல் பற்றி எனக்கு விபரங்களைச் சொல்வீர்களா?**

பதில்: வெள்ளைபடுதல் ஒரு வியாதி அல்ல. வியர்வை வெளியேறுவதைப் போலத்தான் இதுவும். இயந்திரமொன்றின் காணப்படுகிறது. இதனால் பலரிடம் சிகிச்சைக்கு செல்லும் நோயாளர்கள் இறுதியில் குழப்பத்துக்கு உள்ளாகின்றனர். ஆனால் மருத்துவத்துறையை எடுத்துக்கொண்டால் நோயைக் கண்டறிவதற்கான துல்லியமான முறைகள் வழக்கத்தில் உள்ளன. ஆகவே வி.ஓ.ஜி. ஒருவரை அணுகி ஆலோசனை பெறவும்.

பொதுவாகவே பெண்கள் குறிப்பாக பருத்த பெண்கள் இறுக்கமான உள்ளாடைகளை அணிவதைத் தவிர்க்க வேண்டும். எப்போதும் தளர்வான பருத்தி உள்ளாடைகளையே அணிய வேண்டும். சலவை செய்த உள்ளாடைகளையே

நியதி. இதில் மறைக்கவோ, ஒளிக்கவோ எதுவும் இல்லை. ஆனால் தான் வாழ்வில் திருமணத்துக்கு இவ்வளவு முக்கியத்துவம் தரப்படுகிறது. சந்தோஷமாக கொண்டாட்டமாக திருமணங்கள் நடத்தப்படுகின்றன. ஆகவே ஆணும் பெண்ணும் திருமணத் தின் அர்த்தத்தையும் அதன் இயல்பு தன்மைகளையும் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் சிறுவயது முதலே பாலுணர்வு என்பது தூய்மையற்ற என்ன வளர்ச்சி என்றும் பாலியல் சேர்க்கை குற்றச் செயலுக்கு ஒப்பானது என்றும் நமது சிறுவர் சிறுமியரை பெற்றோர்கள் நம்பும்படி செய்யும் போது பின்னர் திருமணத்தின்போது அது குற்ற உணர்வாக, குறிப்பாகப் பெண்களிடத்தில் வெளிப்பட்டு தாம்பத்திய உறவில் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

சில சமயம் பெண் உறுப்பு சிறியதாக அமைந்துவிடுவதும் உண்டு. ஆனால், சிகிச்சையில் இக்குறைபாட்டை நீக்கிவிட

# வெள்ளைப்படுதல் என்றால் என்ன?

அழற்சிக்கு கிறீஸ் எவ்வளவு அவசியமோ அதே போல உராய்வினால் ஏற்படக்கூடிய சிதைவைத் தடுப்பதற்காக பிறப்புறுப்பில் இருந்த வெளியேறும் ஒரு திரவத்தையே நாம் வெள்ளைப்படுதல் என அழைக்கிறோம். இது நோய் அல்ல. பத்திரிகைகள் ஊடாக விளம்பரம் செய்து தமது 'மருத்துவ' பொருட்களை விற்பனை செய்யும் சில 'வைத்தியர்'களிதான் வெள்ளைப்படுதல் என்பது ஒரு நோய் என்ற தோற்றத்தைப் பரவலாக பெண்களிடம் ஏற்படுத்தி இருக்கிறார்கள். மனிதர்களாகிய நாம் நமது உடலின் தொழிற்பாடுகளையும் அதன் காரணங்களையும் பொது அறிவு என்ற அளவிலேனும் அறிந்து வைத்திருக்க வேண்டும். தமது உடலில் நிகழும் ஒரு சுரப்பு பற்றிய அறிவும் கூட நமது பெண்களில் பலருக்கு இல்லை என்பதையே எனக்கு வரும் கடிதங்களின் மூலம் அறிய முடிகிறது.

வெள்ளைப்படுதல் என்பது மாதவிடாயின் முன்னரும் பின்னரும், உடல் உறவின் உச்சக் கட்டத்திலும், கர்ப்பிணியாக இருக்கும்போதும், பாலியல் தூண்டுதலுக்கு உள்ளாகும்போதும், ஆடியோ மற்றும் வீடியோ பார்க்கும் கேட்கும் போதும் மனம் கிளர்ச்சி அடையும் போதும் மன அழுத்தத்துக்கு ஆளாகும் போதும் வெள்ளைப்படுதல் நிகழ்கிறது. காலநிலை மாற்றத்தின் போதும் இது நிகழும். கர்ப்பத்துக்கு உட்பட்ட வெள்ளைப் படுதல் துர்நாற்றம் வீசலாம். மஞ்சள் நிறத்துக்கு மாற்றம் அடையலாம்.

ஆகவே துர்நாற்றம், நிறமாற்றம் இருக்குமானால் அதன் சில துளிகளை எடுத்து மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கி எவ்வகையான கிருமித் தொற்று என்பது கண்டறியப்பட்டே மருத்துவம் செய்ய வேண்டும். ஆனால் இன்று பல மருத்துவர்கள் ஆளைப் பார்த்தும், யூகத்தின் அடிப்படையிலும் சிகிச்சை அளிக்கும் துரதிஷ்டமான நிலை

அணியவும் காரமான சவர்க்காரங்களைப் பாவிக்க வேண்டாம். பேபி சவர்க்காரங் களை உபயோகிக்கவும், வியர்வை நாற்றத்தைக் கட்டுப்படுத்தும் ஸ்பிரேக்களைத் தவிர்க்கவும் வியர்வையைத் தடை செய்யக்கூடாது. மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையாவது வயிற்றுப் புழுக்களைக் கட்டுப்படுத்தும் மாத்திரை சாப்பிட வேண்டும். நகங்களை வெட்டி தூய்மையாக வைத்திருக்க வேண்டும். இப்பகுதியை ஈரமாக வைத்திருக்க கூடாது. இது கிருமித் தொற்றுக்கு வாய்ப்பாக அமையும்.

**எனக்கு 32 வயதாகிறது. மனைவிக்கு 22. திருமணமாகி 1 1/2 வருடங்கள். என்னில் எந்தக் குறைபாடும் இல்லை. ஆனால் இவ்வளவு நாளாகியும் நாம் இதுவரை உறவு கொண்டதில்லை. எவ்வளவு முயற்சித்தும் கைகூடவில்லை. மனைவியிடம் ஏதோ பிரச்சினை இருப்பதாகவே கருதுகிறேன். திருமணமாகியும் பிரம்மச்சாரிகளாக இருக்கிறோம். உறவில் நாட்டமில்லாத பெண் இருக்கமுடியுமா? எனக்கு ஆலோசனை கூறுங்கள்.**

**- கே.கே.என், நீர்கொழும்பு**


பதில்: இது ஒன்றும் அசாதாரண பிரச்சினை அல்ல. திருமணம் பாலுறவு தொடர்பான நிறைய மூட நம்பிக்கைகள் மலிந்த எமது சமுதாயத்தில் இவ்வாறான பிரச்சினைகள் சாதாரணம். எமது சிகிச்சை நிலையங்களில் இவ்வாறான பிரச்சினைகளோடு வரும் தம்பதியினரை நாம் அடிக்கடி சந்திக்கிறோம். இதை மறைத்து வைக்காமல் நீங்கள் ஒரு டாக்டரை VOG நாடி இருக்க வேண்டும். இப்படி நாசி தாமதித்ததில் ஒரு குழந்தை பெற்றிருக்கக்கூடிய காலம் கடந்து விட்டிருக்கிறது என்பதை இப்போது நீங்கள் உணர்கிறீர்களா? பாலுணர்வும் உடல் உறவும் இயற்கை

முடியும். எனவே பெரும்பாலும் அப்பிரச் சினை உளவியல் சார்ந்ததே. மேலும் சிறுபராயத்தில் ஒருவர் பாலியல் துஷ்பிர யோகத்துக்கு உட்பட்டாலும், கடிகள் அல்லது வாய்வழிச் செய்தியாக அறிந்து கொள்ளும் பாலியல்வன்முறைக் காட்சிகள் மனதில் ஆழமாக பதிவாகி பின்னர் தாம்பத் திய உறவின் நாட்டமின்மை என்பதாக வெளிப்படலாம். பாலியல் குறைபாடுகள், மனச்சோர்வு, மருந்து பாவனை போன்ற வேறு சில காரணங்களினாலும் ஏற்பட வாய்ப்புண்டு எனவே முதலில் ஒரு VOG டாக்டரைச் சந்தித்து பிரச்சினையை சொல் லுங்கள். அதன் பின்னர் அவசியமானால் மனநல மருத்துவரிடம் செல்லலாம்.

உடற்பால் தொடர்பான நோய்கள், [illegible]
[illegible]
**எஸ். எப். எல். அக்பர்**
[illegible]

வானவில் மருத்துவம்,
த. பெ. எண். 1218
கொழும்பு.
e-mail: vannavaanavil@gmail.com

## 'வானவில்' குறுக்கெழுத்துப் போட்டி 20



**இடமிருந்து வலம்**

1. கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் கலக்கும் புனிதமான இடம் (9)
6. இது ஏற்பட்டால் உடல் மெலியும் (6)
7. நாய்... (5)
8. சுற்றுப்புறம் (3)
9. இதற்கு, ஈதியை உடையோர் மாத சொல்வார்கள் (6)
11. தமிழ் சினிமாவில் கவர்ச்சிக்கு இந்த நடிகையை மிஞ்ச எவரும் இல்லை (3)
12. உண்மை
13. பண்ணையை பராமரிப்பவன் (3)
15. உணவு தேவை என்பதை உடல் உணர்த்தும் சிக்னல்
17. மணல் காடு (2)
18. பார்த்திபன் நடித்து இயக்கிய படம் (5)
20. முருகன் தலம் (6)
22. அரசன் (3)
25. திக்குதிசை.. பட்டான் (2)
26. வேடனிடம் இருக்கும் (2)

**மேலிருந்து கீழ்**

1. திசை (3)
2. வீட்டு வேலைகளை செய்பவள் (6)
3. அன்னத்தும் புரிய அனைவரும் (3)
4. விளக்கம் (4)
5. இதனால் நீர் இறைக்கலாம் (2)
9. சூதுவாது தெரியாதவன் (4)
10. இளம் பெண் (3)
11. போர்வீரன் (4)
12. தங்கம் (2)
14. வெட்டும் (3)
16. தமிழ்ப்பாடகி (4)
18. கொம்மாளி (4)
19. அரசவை (4)
21. ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படும் உணர்வு (3)
22. பாடல் இசை (2)
23. கீர்த்தி (3)
24. காண் (2)
25. வெள்ளை நிறம் (2)

சரியான விடைகளை எழுதி
25. 07. 2011க்கு முன்

குறுக்கெழுத்துப் போட்டி - 20
வண்ண வானவில்
த. பெ. இலக்கம் 1218
கொழும்பு

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடை எழுதியவர்களில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர், முகவரி பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல 19க்கான விடைகளும் பரிசு பெற்றவர்கள் விபரங்களும் 33ஆம் பக்கத்தில்...





# டைட்டானிக்கை மூழ்காமல் காப்பாற்றி இருக்கலாமாம்!

டைட்டானிக் கப்பலை மூழ்காமல் காப்பாற்றி இருக்கலாம் என்கிறார்கள் இப்போது. 100 ஆண்டுகளுக்கு முன்பு, 1912ம் ஆண்டு ஏப்ரல் 10ந் தேதி 'டைட்டானிக்' என்ற பயணிகள் சொகுசு கப்பல் அட்லாண்டிக் கடலில் மூழ்கியது. நியூயார்க் நகருக்கு புறப்பட்டு சென்ற அந்த கப்பலில் 2,223 பேர் பயணம் செய்தனர்.

அக் கப்பல் புறப்பட்ட நான்கு நாட்களில் ராட்சத பனிப் பாறையில் மோதி விபத்துக்குள்ளானது. கப்பலில் துளை ஏற்பட்டு கடலில் மூழ்கியது அந்த விபத்தில் கப்பலில் பயணம் செய்த 1495 பேர் உயிரிழந்தனர்.

கப்பல் செல்லும் வழியில் ராட்சத பனிப்பாறை இருப்பதை கப்பலின் தலைமை அதிகாரி வில்லியம் முர்டோக் பார்த்து எச்சரிக்கை தகவல் கொடுத்தார். ஆனால் கப்பலை கட்டுப் படுத்தி ஓட்டிச் செல்வதற்காக மேற்புறத் தளத்தில் பணியில் இருந்த மற்றொரு பொறுப்பு அதிகாரியிடம் இருந்து மாலுமிகளுக்கு தகவல் வர அரை நிமிடம் தாமதமாகி விட்டது.

அந்த அரை நிமிட தாமதமே ராட்சத ஐஸ் பாறையின் மீது மோதி விபத்து ஏற்பட காரணமாகி விட்டது அந்த அதிகாரி ராட்சத ஐஸ் பாறை இருக்கும் தகவலை உடனடியாக தெரி வித்து இருந்தால் மிகப்பெரிய விபத்து தவிர்க்கப்பட்டிருக்கும் என புதிய ஆய்வொன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









## வண்ண வானவில் ஊடக அனுசரணையில்

### நோர்வூட்டில்

# ஊ... ல ல லா...

நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம் '2007 பழைய மாணவர்களால்' ஒழுங்க செய்யப்பட்ட 'ஊ ல ல லா' என்ற பிரமாண்டமான ஆடல் பாடல் இசை நிகழ்ச்சி கடந்த ஜூன் 23ம் திகதி சனிக்கிழமை காலை 10.30ற்கும் மாலை 3.30ற்கும் இரு காட்சிகளாக அரங்கேறியது. நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய வரலாற்றில் முதன் முறையாக இவ்வாறான ஒரு நிகழ்ச்சியை 2007 பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தது பாராட்டுக்குறியது. பல இடையூறுகளுக்கு மத்தியில் நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய அதிபர் நாகராஜ், மற்றும் குமார் ஆகியோரின் வழிக்காட்டுதலில் இந் நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்கள்.

ஜூனியர்ஸ் குட்டீஸ், நளினாலயா நாட்டியக் குழு, இங்கிரிய தமிழருவி இளைஞர் கழகம் ஆகியோரின் கலைப் படைப்புகள் ஊ லல லாவில் முக்கிய இடம் வகித்தன. நிகழ்வில் முக்கிய அம்சமாக 2007 பழைய மாணவர்களால் (2007obanorwood.com) என்ற இணையத்தளம் தொடங்கி வைக்கப்பட்டது.



இது தவிர நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக அன்பழகி ஆசிரியையால் இயற்றப்பட்ட 2007 பழைய மாணவர்களுக்கான குறியிசைப் பாடலொன்றும் பாடப்பட்டது. வண்ண வானவில் ஊடக அனுசரணையுடனும் முழுக்க முழுக்க 2007 பழைய மாணவர்களின் பேராதரவுடனும் இந் நிகழ்ச்சி அரங்கேற்றப்பட்டது. ஊ லல லாவின் மூலமாக கிடைத்த நிதி நோர்வூட் பாடசாலையின் கல்விப் பணிக்காக செலவிடப்படவுள்ளதாக 2007 பழைய மாணவர்கள் தெரிவிக்கின்றார்கள்.











# தொண்டையில் ஏதேனும் சிக்கிக் கொண்டால்...

குழந்தை வளர்ப்பின் போது சின்ன சின்ன விஷயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். துருதுருவென இருக்கும் குழந்தைகள் முன்பின் யோசிக்காமல் செய்யும் பல விஷயங்கள், நாம் கொஞ்சமும் எதிர்பாராத தருணங்களில், ஆபத்தில் கொண்டுபோய் விட்டு விடலாம்.

குழந்தைகள் பலதையும் வாயில் போட்டுக் கொள்வார்கள். நாமும் கவனக் குறைவுடன் சில சமயம் இருந்து விடுவதுண்டு. அன்னாசி, வாழைப்பழம், அப்பிள், கடலை போன்ற திண்மப் பொருட்களை சாப்பிடக் கொடுக்கிறோம். குழந்தைகள் வேகமாகவும், ஆடிப்பாடி சிரித்தபடியும் சாப்பிடுவார்கள். கடித்து மென்று சாப்பிட வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

குழந்தைகள் எப்படி சாப்பிடுவது என்பது தெரியாமல் சாப்பிடும்போது தொண்டையில் உணவுத்துண்டுகள் அடைத்துக் கொள்ளலாம் மூச்சுத் திணறல் ஏற்படலாம். மூச்சுத்திணறல் என்பது மரணத்தை ஏற்படுத்தும், உடனடியாகக் கவனிக்கா விட்டால்!

பெற்றோர், குறிப்பாகத் தாயார், உணவை எப்படி சாப்பிடுவது என்பதை குழந்தைகளுக்கு படிப்படியாகச் சொல்லித் தர வேண்டும்.




இது ஒரு புறமிருக்க,

ஏதாவது ஒரு பொருளை விழுங்கி விட்டு மூச்சுத் திணறும் போது உடனே தன் கைகள் இரண்டையும் தொண்டையில் குறுக்காக வைத்துக் கொண்டு தடுமாறும், பெரியவர்கள், இருமியோ, செருமியோ ஒன்றில் சிக்கிய பொருளை உள்ளே அல்லது வெளியே தள்ளி விடுவார்கள். குழந்தைக்கு இரும முடிந்தால் இருமச் சொல்லலாம். இருமத் தெரியா விட்டால்...?

இதற்கு ஒரு முதல் உதவி சிகிச்சை உள்ளது.

குழந்தையின் பின்புறம் நின்று கொண்டு இரு கைகளையும் குழந்தைக்கு முன்புறமாக கொண்டு சென்று (கட்டி அணைப்பது போல) வலது கையால் குழந்தையின் மார்புக் கூடு முடியும் இடத்துக்கும் தொப்புளுக்கும் நடுவே அழுத்தமாகக் குத்த வேண்டும். இப்படிச் செய்யும்போது சிக்கிய பொருள் வெளியே வந்துவிடும். இந்த முதல் உதவியை பெற்றோர் தெரிந்து வைத்துக் கொள்வதுடன், ஆபத்தில் உதவுவதற்காக ஏனையோரும் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது.

## Star Baby



எம்.ஆர்.ஹிக்ம மர்யம்
ரம்ஸீன் - முப்ளிஹா, வெலிகாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வித்யா: சிலுக்காக நடித்து உயர்ந்தார், தாழ்ந்தார்!



டர்டி பிக்சர் என்ற நமது சில்க்ஸ்மிதாவை பற்றிய திரைப்படத்தில் சிலுக்காக நடித்த வித்யாபாலனுக்கு பல வகையிலும் எதிர்ப்பு இருக்கிறது. இப்படியும் நடிக்கலாமா? ஆபாச நடிகை போல வந்து தன் பெயரைக் கெடுத்துக் கொண்டாரே என்று பலரும் விமர்சனங்கள் முன் வைத்து நடிகையை குழப்பி விட்டார்கள். நான் அப்படி நடித்திருக்கக் கூடாதோ, தவறு செய்து விட்டேனோ என்றெல்லாம் மனுஷி குமுறிக் கொண்டிருந்தபோதுதான், மத்திய அரசின் சிறந்த நடிகை விருது அவரை வந்தடைந்தது; அவரை கரை சேர்த்தது.

வித்யா இப்போது தெளிவாக இருக்கிறார். ஒரு நடிகையின் வாழ்க்கையை உள்ளது உள்ளபடி திறந்து காட்டுவதில் தொழில்சார் ரீதியாக வெற்றி பெற்றுவிட்டேன் என்பதில் வித்யாவுக்கு பெருமை. சிலுக்கு பாத்திரம் பல நடிகைகளினால் மறுக்கப்பட்ட பாத்திரம். ஆனால் வித்யா துணிந்து அதில் நடித்து விட்டதால், அவர் நடிப்பைப் பார்த்த அதே நடிகைகள், அட, நாமும் இதைச் செய்திருக்கலாமே என்று உஷ்ணப்புகைச்சல் விட்டார்கள். அதன் விளைவாகத் தான் இந்தத் தூற்றல்கள். வித்யாவுக்கு விருது கிடைத்தவுடன் கப்சிப் ஆன இந்த நடிகைகள் வாய்ப்பைத் தவற விட்டு விட்டோமே என்று இன்று பொருமிக் கொண்டிருக்கிறார்கள்.

பார்வை இழந்தவராக, ஏழையாக, விதவையாக, பிச்சைக்காரனாக எல்லாம் அதாவது சமூகத்தின் சில பிரிவினரை பிரதிபலிப்பதாக நடிக்க முடியுமானால் பாலியல் தொழிலாளியாகவும், திருநங்கையாகவும், நடிகையாகவும் ஏன் நடிக்கத் தயக்கம் காட்ட வேண்டும்? என்று கேட்கிறார் வித்யா.

டர்டி பிக்சர் படத்தைத் தமிழில் கொண்டுவர முயற்சி நடக்கிறது. திரும்பவும், சிலுக்காக யாரை நடிக்க வைப்பது என்பதில் பிரச்சினை. தேசிய விருது அந்தஸ்து உள்ள பாத்திரமானாலும், நமது கற்புக்கரசி நடிகைகள் யோசிக்கிறார்கள்.

சரி, டர்டி பிக்சர் இப்போது தமிழிலும் டிவிடியாகக் கிடைக்கிறது. நல்ல மொழி மாற்றம். நல்ல படமும் கூட. ஆனால் குடும்பத்தோடு பார்ப்பதற்கு உகந்தது அல்ல. சிலுக்கின் வாழ்க்கை அப்படிப்பட்டது தானே!

சிலுக்கு ஒரு காட்டுப் பூ. முரட்டுப்பசு. அவருக்குப் பின் அவரைப் போல ஒருவர்

## அருவிக் கரையோரம் அடிதடி!



அறிமுக இயக்குநர் பி.பாரதி மோகன், ஸ்ரீஹரி மூவிஸ் சார்பில் தயாரித்து இயக்கும் படம், 'அருவிக்கரையோரம்'. ''தலைப்புதான் மென்மை. மற்றபடி, படம் முழு நீள ஆக்ஷன் மேளா. தற்காப்பு கலைகளை கற்றவர். தன்னிடம் உதவி கேட்டு வந்த பெண்ணுக்கு அடைக்கலம் கொடுக்கிறார். ஒரு கட்டத்தில் தஞ்சம் புகுந்த பெண், அந்தக கலைஞனை வஞ்சம் தீர்க்கிறாள். அது ஏன் என்பதை பரபரப்பாக சொல்லியுள்ளேன். காதல், ஆக்ஷன், சென்டிமென்ட், நகைச்சுவை என சகல அம்சங்களும் இப்படத்தில் உண்டு...'' என்று சொல்லும் பாரதி மோகன், பிரதான வேடத்திலும் நடித்திருக்கிறார். படத்தில் இடம் பெறும் ஐந்து பாடல்களையும் இள இரத்தத்தைக் குறி வைத்தே இசையமைத்திருக்கிறாராம் தஷி.



## ஐயோ பாவம், இலியானா!



நண்பன் படத்தில் தனது இஞ்சி இடுப்பை காட்டி ரசிகர்களை கிறங்கடித்த இலியானாவிற்கு தொடர் காய்ச்சல், மன அழுத்தம், மற்றும் இளமை அனைத்துமே உதிர்ந்து விட்டன. முகத்தில் முற்றுதல் தெரிய, உடம்பில் எலும்புகள் துருத்த ஆளே உருக்குலைந்து விட்டார் பாவம்!

'நண்பன்' படத்திலேயே இது அப்பட்டமாகத் தெரிந்தது. அப்போது, 'இன்னும் இரு மாதங்களில் பழைய இலியா-னாவை நீங்கள் பார்க்கலாம்' என கர்ஜித்தார். ஆனால், நான்கு மாதங்களுக்கு பிறகு, அதுவும் சமீபத்தில் தெலுங்கில் அவர் நடித்து வரும் 'ஜூலையா'வின் ஸ்டில்ஸ் வெளியானபோது, நிலமை இன்னும் மோசமாகி விட்டதைதான் உணர முடிந்தது. யெஸ், 'நண்பனை' விட இப்போது பரிதாபமாக காட்சியளிக்கிறார். ஏதேனும் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறாரோ என்று நினைக்கும் அளவுக்கு கன்னங்கள் ஒட்டிப் போய், செழிப்புகள் வற்றிப் போய் தென்படுகிறார்.

என்ன ஆச்சு இலியானா?

## ஒரு சு

இயக்குநராக இ
நகைச்சுவை நடிகராக மா
படங்களில் வசனம்
வருகிறதாம். இதில் க
பேலன்ஸ் செய்ய முடியா
அவர். ஓரிரு படங்களுக்கு
பாடல் எழுதியுள்ளார்,
கூடை முத்தம்',



## சுனேனா போட்ட

ராசு மதுரவன் இயக்கத்தி
ஜோடியாக சுனேனா நடிக்கு
'மைக் செட் பாண்டி'.
இப்படத்தில் பாடல் காட்சிகள் மலேசியாவில் படமானது. இந்த கவர்ச்சி போதுமா? இன்னும் கொஞ்சம் வேணுமா என்று கேட்டு, படப்பிடிப்புக் குழுவினரை திணறடித்து விட்டாராம் சுனேனா. மேலும் ஒரு காட்சியில், நரைத்த தலை முடியுடன் வயதான கெட்டப்பிலும் துணிச்சலாக நடித்துள்ளாராம்.

## ஒரிஜினல் பில்லாவை பின்பற்றும் டேபிள்கெட்



'பில்லா2' வெளியான மகிழ்ச்சியில் இருக்கும் அஜீத். தொடர்ந்தம் ரீமேக் படங்களில் நடிக்கும் ஆர்வத்தில் இருக்கிறாராம். அதுவும் சூப்பர் ஸ்டாரின் பழைய படங்களில் நடிப்பதுதான் தலயின் விருப்பமாம். இதற்காக ரஜினி நடித்து மெகா ஹிட்டான பழைய படங்களின் டிவிடிக்களை வீட்டில் வாங்கி வைத்து, ஓய்வு நேரங்களி பார்த்து ரசித்து வருகிறாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்ரன் மாதிரி வருவாரா காஜல்?



மும்பை வரவுகளில் காஜல் அகர்வால் முக்கியமானவர். வழக்கமாக மும்பை வரவுகள் ஒரு படத்துக்கு மேல் தாக்கு பிடிப்பது கஷ்டம். ஆனால், காஜல் அப்படியில்லை. சிம்ரன், ஜோதிகா போல் கடுமையான உழைப்பால் தனக்கான இடத்தை கட்டி எழுப்பியிருக்கிறார். தமிழ், தெலுங்கு, இந்தி என்ற மூன்று மொழிகளிலும் கவனம் செலுத்தி வருகிறார் இவர். சினிமாவில் காஜலுக்கு இது ஒன்பதாவது ஆண்டு. தெலுங்கில் 'மகதீரா' அவருக்கு மகுடம் சூட்டியது என்றால் தமிழில் 'மாற்றான்', 'துப்பாக்கி' ஆகிய படங்கள் சிம்மாசனத்தில் அமர வைக்கப் போகிறது என்று கோடம் பாக்கத்தில் ஒரு பேச்சு அடிபடுகிறது. காஜலும் தன் பங்கிற்கு எங்கு சென்றாலும் 'மாற்றான்', 'துப்பாக்கி'யை புகழ்ந்து தள்ளி வருகிறார். 'மாற்றானில்' சூர்யாவுக்கு இரட்டை வேடங்களாம். ஒருவர், நல்லவர், மற்றவர், கெட்டவர். இருவரில் யாருடன் காஜல் டூயட் பாடுகிறார் என்பது சஸ்பென்ஸ். இதில் காஜல் பத்திரிகை நிருபராக நடிக்கிறார். வில்லனின் சட்டவிரோத நடவடிக்கைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வரும் பவர்ஃபுல் வேடமாமம்.

போட்டுத் தாக்குங்க!

## கூடை முத்தம்



...ாக இருந்து குணச்சித்தரம் மற்றும் ...் மாறிய தம்பி ராமய்யாவுக்கு பல ...னம் மற்றும் பாடல் எழுத வாய்ப்பு ...ல் கவனம் செலுத்தினால், நடிப்பை ...முடியாது என்று உஷாராகி விட்ட ...க்கு மட்டுமே வசனம் மற்றும் ...ாார். அவர் இயக்கிய 'ஒரு ...தம்', விரைவில் வெளியாகவுள்ளது.

## ...ட ஆட்டம்!

...கத்தில் சபரீஷ் ...நடிக்கும் படம்,

# சந்தானத்தின் 'ஜோடி'யாக பவர்ஸ்டார்?



பவர் ஸ்டார் எனப்படும் சீனிவாசனைப் பற்றிய செய்தி தினசரி எப்படியாவது அச்சில் ஏறிவிடுகிறது. இதுவரை அவரை நடிகராகக் கூட யோசித்துப் பார்க்காதவர்கள், இப்போது 'அட'என நிமிர்ந்து பார்க்கும் அளவுக்கு நிலைமையை மாற்றிக் காட்டியிருக்கிறார் பவர் ஸ்டார். ஏற்கனவே 10 படங்களை கைவசம் வைத்திருக்கிறேன் என்று மார்தட்டும் சீனிவாசன், அடுத்து ஒரு படத்தில் ஹீரோவாக நடிக்கப் போகிறாராம்! இந்தப் படத்தில் அவருடன் கை கோர்க்கும் இன்னொரு ஹீரோ சந்தானம்! படத்துக்கு கண்ணா ரெண்டு லட்டு திண்ண ஆசையா! என தலைப்பிட்டுள்ளனர் (இது ஒரு சாக்லேட் விளம்பர வாசகம்!) பவருக்கு பொருத்தமான பெயர்தானே! சும்மனாங்காட்டியும் ஏதோ கிளப்பிவிடுகிறார்களா... அல்லது நிஜமான செய்திதானா என தெரிந்த கொள்ள சந்தானத்திடமே உண்மைதானா என்று கேட்கப்பட்டது. அவரும் சீரியஸாக, ''ஏங்க... உண்மையா இருக்கக் கூடாதா? பவர் ஸ்டார் சீனிவாசன் கூட சேர்ந்து இந்தப் படத்தில் நான் நடிப்பது உண்மைதான். ஆனா இன்னும் பல விஷயங்கள் முடிவாகவில்லை. முடிவான பிறகு அறிவிப்பு வெளியாகும். செம ஜாலியான படமா பண்ண திட்டமிட்டிருக்கோம்'' என்கிறார். செய்தி வெளியானதும் இப்பவே பிஸினெஸ் விசாரணை வேற ஆரம்பிச்சிடுச்சாம் தமிழ்த் திரையுலகில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாத வெறும் 'கொமடி பீஸாக கருதப்படுபவரே இந்த பவர் ஸ்டார் ஆனால், அவரோ ரஜினிக்கு போட்டி நான் தான் என்கிறார். கோச்சடையானுடன் மோத 'மன்னவா' திரைப்படத்தை எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்று ரீல் விடுகிறார். புளுகு மூட்டைகளை இதற்கு முன் எவருமே இத்தனை துணிச்சலுடன் அவிழ்த்துவிட்டதில்லை. பொய்யால் மாத்திரம் ஒருவன் முன்னேற முடியுமா? ஏனெனில் தேசிய நெடுஞ்சாலை, ஆனந்த தொல்லை உள்ளிட்ட படங்களிலும் நாயகனாக நடிக்கிறராம் இவர். இயக்குனர் பாலாவின் 'பரதேசி' படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கும் வாய்பபை பாலா வழங்கியிருப்பதாகவும் ஒரு தகவல் இருக்கிறது. பாலா இவரது பம்மாத்துத்தனத்தையே பாத்திரமாக செய்யச் சொல்லலாம். நகலைத் தேடுவதைவிட அசலையே நடிக்க வைத்தால் விசில் பறக்கும் அல்லவா!

# சம்பளத்திலும் விஸ்வரூபம் தான்!



விஸ்வருபம் படத்தில் கமல் ஹாசனின் சம்பளம் ரூ.45கோடி என்று தயாரிப்பு வட்டம் தெரிவித்துள்ளது. தமிழ் மற்றும் இந்தியில் மெகா பட்ஜெட்டில் பிரமாண்டமாக உருவாகியுள்ள படம் விஸ்வருபம். இந்த படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள கிராபிக்ஸ் உலக அளவில் பேசப்படும் என்று கூறப்படுகிறது. படத்தில் கமல் ஹாசன் கதக் கலைஞர். தீவிரவாதி உள்ளிட்ட பல வேடங்களில் வருகிறார்.

# ஆர்யாவுக்கு ஜோடியாக டாப்ஸி



அஜித், ஆர்யா இணைந்து நடிக்கும் படத்தில் ஆர்யாவுக்கு ஜோடி சேர்வதில் மகிழ்ச்சியில் இருக்கிறாராம். டாப்ஸி. ''வலுவான ஒரு படத்துக்காக இதுவரை காத்திருந்தேன். அதனால்தான் 'ஆடுகளம்' படத்திற்குப் பிறகு வேறு எந்த தமிழ்ப் படத்திலும் நடிக்காமல் இருந்தேன்,'' என்று தனது மகிழ்ச்சியை எல்லோரிடமும் பகிர்ந்து கொள்கிறார் டாப்ஸி. படத்தை விஷ்ணுவர்தன் இயக்கப் போகிறாராம்.

# பூஜா போனார் தன்ஷிகா வந்தார்...



இந்த மாதம் ஆவுஸ்திரேலியாவில் படமாகப் போகின்ற சிங்களப் படத்தில் நடிக்க ஏற்கனவே கால்ஷீட் கொடுத்து இருந்ததால், பாலா இயக்கும் 'எரியும் தணல்' படத்தில் இருந்து கண்டிப்பாக விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாம் பூஜாவுக்கு. அருள்நிதி நடிக்கும் ஒரு படத்துக்காக பேசப்பட்ட தன்ஷிகாவுக்கு அந்த வாய்ப்பு அமையாத நிலையில், பாலா டைரக்ஷனில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முற்றம்



## பறந்து சென்ற குருவிகளே...

முகங்கள் தொலைந்ததால்
முகவரியும் தொலைந்து போய்
அந்திய தேசத்திடம்
அடைக்கலம் புகுந்தவர்களே
உங்கள்
தாய் மண்ணில்
தடம்பதித்த நினைவுகள்
உங்கள் நெஞ்சை
நனைக்கின்றனவோ என்னவோ
என் நெஞ்சில்
நிழலாடிக் கொண்டல்லவா இருக்கிறது

ஐரோப்பிய பனிப் பொழிவுகளில்
உங்கள்
பாதங்கள் பவனிவரலாம் இன்று
ஆனால்
எண்ணிப் பார்த்தால்
பல ஆண்டுகளுக்கு முன்
கட்டாந்தரையிலும்
கள்ளிக் காட்டிலும்
காலணி கூட இன்றி
கால் பதிய நடந்த நாட்களை கனவில் கூட
மறந்திருக்க வாய்ப்பில்லை
தாய் மண்ணல்லவா?...

உதட்டுச்சாயம், காதுகளை மறைக்கும்
தலைக் குல்லா
கம்பளிக் கோட்டு
கையுறை, காலுறை, கண்ணாடியென்று
அத்தேசத்தில் நீங்கள்....

காற்றில் கைகள் வீசி நடைபயில காத்துக்
கிடக்கிறது எங்கள் வீதி
சொர்க்கமே என்றாலும்,
அது நம்மூரைப் போல வருமா?
என்ற அமரன் பாட்டு
ஒரு வேளை
நமக்காகத்தான் பாடப்பட்டதோ?
உங்கள் வருகை எப்போது என்று ஏங்கும்
விழிகளோடு வழி பார்த்து நிற்கிறேன்.

- கவிஞர். காண்டீபன்,
வேலூர், தமிழகம்.

## என் இதயம்...

தொலைந்து போனவற்றை
தேடுவது
தேவையற்று நேரத்தை
தொலைப்பதைப் போன்று என
பலர் சொன்னபோதும்
நான் தேடிக் கொண்டிருக்கிறேன்,
இன்னும் உன்னை
ஏன் எனில்
தொலைந்துப் போனது
நீ என்பதனால் அல்ல
உன்னிடம் இருக்கும்
என் இதயம் என்பதனால்...



- எஸ்.பாஹிரா பாருக்,
ஹாலி எல



## தவிப்பு

நீ தூங்கும் போது என் விழிகள்
விழித்துக் கொண்டது நீ
விழிக்கும் போது என் விழிகள்
தூங்க ஆரம்பிக்கின்றன

- பீ.வை.எம்.ருக்ஷானா,
வவுனியா



## இதமாயில்லை

சில்லென்ற காற்று
இதமான இசை
மெலிதான இரவு
கண்சிமிட்டும் நட்சத்திரம் யாவும்
இதமாயில்லை
உனை நான் பிரிந்த இந்த
நாட்களில்...

- ஆர்.சியா (பற்றீசியா)
வவுனியா.



## உன் மௌனம்

நேற்றுவரை என்னோடு
பேசிய நீ இன்று
மௌனமாய் இருக்கிறாய்
காரணம் கேட்டால்
என் வாழ்வு நலமாக
இருக்க உன் காதலை
தியாகம் செய்தேன் என
ஊமைக் காரணம்
சொல்கிறாயே இதுதான்
உன் மௌனத்தின்
அர்த்தமா?

- நிஷா



## வெறுக்கிறேன்

உன்னை நினைத்து என்
இதயத்தை தீ வைத்து
சுடுகிறேன்
உன் உருவத்தை வரைந்த என்
கண்களை
கண்ணீரால் அழிக்கிறேன் இமை
மூடினால்
நீ கனவில் வருகிறாய் அதனால்
தூக்கத்தை
வெறுக்கிறேன்

- உய்னா, பதுளை





## என் இதயம்

காதலுக்கு கண்கள் இல்லை
என்பது பொய் உன்
கண்கள் பார்த்த பிறகுதான்
உன்னை நான்
காதலிக்க தொடங்கினேன் இன்று
உன்னை கூட பார்க்க
முடியாமல் என் கண்கள்
அழுது கொண்டு இருக்கிறேன்

- ப.நிஷா, பருத்தித்துறை

## உயிர்வரை உன் வரவு வேண்டாம்

உப்பிட்ட கடல்தாய் - எம்
உறவுகளின் உயிர்
குடித்ததை மறந்து
உல்லாசமாய் கடல் மடியில்
உறங்குகின்ற இளவல்களே!
கரைதொடும் தூரத்தில்
கனவு என்னதான்
காண்கிறீர்கள்?
கானல் நீராய் எம்
வாழ்வை ஆக்கிய கடலே
கரை வரை மட்டும் வா - எம்
உயிர் வரை உன் உறவு
வேண்டாம்!

- யோ.ருபனா,
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்.



## வலிக்கிறது...

எனக்காக காத்திரு...
என்று கூறியிருந்தாலும்
கால் வலிக்கக்
காத்திருந்திருப்பேன்
உனக்காக!

என்னை மறந்துவிடு...
என்றல்லவா கூறுகிறாய்
அதனால் என்
நெஞ்சமல்லவா
வலிக்கிறது!

- நா.கவின்வினோத்,
மன்னம்பிட்டி

### வாசக கவிஞர்களுக்கு...

பதினைந்து வரிகளுக்கு மேற்படாத வகையில் நச் கவிதைகளை எழுதி எங்களுக்கு தபாலிலோ, இ-மெயிலிலோ அல்லது எஸ்.எம்.எஸ்.சிலோ அனுப்பி வையுங்கள்

கவிமுற்றம்,
ஆசிரியர், வண்ண வானவில்,
த.பெ இல 1218, கொழும்பு.

மின்னஞ்சல் - vannavaanavil@gmail.com
SMS - 0778021501

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டம், 13+ மற்றும் இனப்பிரச்சினை

(கடந்த இதழின் தொடர்ச்சி)

கச்சி

தீர்வுத் திட்டத்தை நோக்கி விரைவாக அரசு நகர வேண்டும் என்பதைப் பற்றி அரசின் முன்னணி அமைச்சரான நிமல் சிறிபால டி சில்வா சுயாதீன தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியொன்றில் இவ்வாறு கூறியிருக்கிறார்:

''அரசு தரப்பு தேசிய பிரச்சினையை மிகவும் ஆழமாக விளங்கிக் கொள்ள வேண்டும். தற்போது யுத்தம் முடிந்துவிட்டதால் நாம் நினைத்தவாறு நடந்து கொள்ளலாம் என்று ஒரு போதும் நினைத்து விடக் கூடாது''

ஆகவே இப்பிரச்சினைக்கு துரிதமான ஒரு தீர்வைக் காணவேண்டும் என்ற அரசின் ஆர்வத்தையே நிமல் சிறிபால டிசில்வா அவர்களின் இக் கூற்று தெளிவுபடுத்துகிறது. அதனுடன் நின்று விடாது எதிர்க்கட்சிகளின் பங்களிப்பு பற்றியும் இவ்வாறான ஒரு தீர்வுதிட்டத்தை மேற்கொள்ளும் பொழுது ஆளும் கட்சியில் இருந்து எழக்கூடிய எதிர்ப்புகளை எவ்வாறு தீர்த்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றியும் அவர் நேர்முக கலந்துரையாடலின் போது எடுத்துக் கூறியது கவனத்திற் கொள்ளவேண்டிய விடயம்.

''ஐக்கிய தேசிய கட்சி தற்போது நிபந்தனைகள் எதுவும் இன்றி பாராளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கு கொள்வதாகக் கூறியிருக்கிறது. இந்திய தூதுக்குழுவினரின் வருகைக்கு பின்பே ஐக்கிய தேசிய கட்சி இவ்வாறு கூறுகிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கலந்து கொண்டால் மட்டுமே நாம் பங்கு கொள்வதாக முன்னர் இக்கட்சி கூறிவந்தது. ஆனால் தற்போது யார் பங்கு கொள்ளாவிட்டாலும் நாங்கள் பங்குகொள்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். அது ஒரு நல்ல சமிக்ஞை'' என்கிறார் நிமால் சிறிபால டி சில்வா.

இந்த உரையாடலில் அரசாங்கத்துக்குள்ளும் தீர்வு திட்டத்தினை எதிர்ப்பவர்கள் இருக்கிறார்களே அதை எப்படி வெற்றி கொள்வது என்ற கேள்வி எழுப்பியபொழுது அவர் இவ்வாறு கூறுகிறார்:

''அரசாங்கத்துக்குள்ளும் தீர்வுத்திட்டம் ஒன்று தேவையில்லை என்பவர்கள் சிலர் இருக்கலாம். நாங்கள் அவர்களிடம் இப் பிரச்சினையைப் பற்றி விளக்கிக் கூறுவோம். இப்பொழுது தீர்வாத அணுகுமுறையில் இருந்து நாம் விலகிவிட வேண்டும். இது உலகப்போக்கு.''

மேலும் கருத்துத் தெரிவித்த நிமல் சிறிபால டி சில்வா இந்தியாவுடனான தொடர்புகள் பற்றியும் எடுத்துக் கூறினார்.


''நாம் வெளிநாட்டுத் தொடர்புகளை பற்றியும் சிந்திக்க வேண்டும். இந்திய மத்திய அரசுக்கு புறம்பாக தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், ஒரிஸ்ஸா போன்ற மாநில அரசுகளைப் பற்றியும் எமது கவனத்தை செலுத்த வேண்டும். இந்திய அரசியலிலே மாநிலங்களின் செல்வாக்கு ஓங்கியிருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்தியாவின் பல பிராந்தியங்களுக்கு வரையறுக்கப்பட்ட கட்சிகளும் இருக்கின்றன. ஆகவே அவைக-ளுடனான தொடர்புகளும் மிக முக்கியமானதாகும்.

நிமல் சிறிபால டி சில்வாவின் நேர்காணலில் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும் என்ற அரசின் தேவை வெளிக்கொணரப்படுவதுடன் எதிர்நோக்கக் கூடிய சவால்களைப் பற்றியும் சர்வதேச அரங்கில் ஏற்பட்டுள்ள புதிய போக்குகள் தொடர்பில் அரசின் கூர்ந்த அவதானமும் தெளிவுபடுகிறது.

ஆகவே அரசு இனப் பிரச்சினைக்கான தீர்வு திட்டத்தில் 13க்கு அப்பாற்பட்ட ஒரு பயணத்தை நோக்கிச் செல்லும் பொழுது ஓர் பல்முனை அணுகுமுறையொன்றினை கடைப்பிடிப்பதாக தெரியவருகிறது.

ஒரு புறம் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றினை அமைத்து அதனூடாக சட்ட நிருபன வழிமுறையொன்றினை கடைப்பிடித்துக் கொண்டு இருக்கின்றது. ஆனால் இது அழுத்தத்தினை மேற்கொள்ள அவகாசம் ஏற்படும். அதன் ஊடாக நிலையானதோர் தீர்வு திட்டத்தினை நோக்கி பயணிப்பது நடைமுறை சாத்தியமானதாக இருக்கும். இல்லையேல் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்வுகளுக்கு நடந்த கதியே இதற்கும் ஏற்பட வாய்ப்பு உருவா-கலாம்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் பொதுவாக முன் வைக்கப்படுகின்ற விமர்சனம், அது



அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வா

இனப்பிரச்சினைக்கு தீர்வினை வழங்காது காலத்தை விணடிக்கும் செயலாகவே சில சாரார் விமர்சித்து வருகின்றனர். ஆனால் இந்த விவகாரத்தில் நாம் ஒரு விடயத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இப் பிரச்சினைக்கு தீர்வை வழங்க இதற்கு முன்பு பதவியில் இருந்த பல்வேறு அரசுகள் நடவடிக்கை மேற்கொண்டபொழுது பல கண்டங்கள் தெரிவிக்கப்பட்டன. குறிப்பாக பண்டா-செல்வா ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பொழுது அது இரகசியமாக செய்து கொள்ளப்பட்டது. அது பற்றி எதிர்க்கட்சியினருக்கோ பொதுமக்களுக்கோ தெரியப்படுத்தப்படவில்லை. அது பற்றி பரந்த உரையாடலுக்கு சந்தர்ப்பமோ கால அவகாசமோ வழங்கப்படவில்லை. என்று குற்றம் சுமத்தி அத் தீர்வுத் திட்டத்தினை எதிர்த்தது மட்டுமல்லாமல் அவ்வெதிர்ப்பை நியாயப்படுத்தியும் விட்டனர்.

1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது அதை எதிர்த்தவர்கள் இவ்வாறான குற்றச்சாட்டுக்களையே முன்வைத்தனர். ஒரு சாரார் இந்த ஒப்பந்தம் இந்தியத் திணிப்பு என்று விமர்சித்ததுடன் இன்னும் பலர் இது ஒரு இரகசிய ஒப்பந்தம் என்றனர். உரிய தரப்பினருக்கு உரிய விதத்தில் அறிவூட்டப்படவில்லை. மாறாக ஒரு பரந்த உரையாடலை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்காது ஒரு தலைப்பட்சமாகவே பதவியில் இருந்த அரசு செயற்பட்டது என்று குறை கூறி அரசை விமர்சித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொண்டனர்.

அரசியல் யாப்பின் 13ஆம் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மேலும் பரவலாக்குவது என்ற கேள்வி ஒரு புறமிருக்க, வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கூட செவ்வனே நடைமுறைப்படுத்துவதில் மேற்கூறிய எதிர்ப்புக்கள் மறைமுகமான ஒரு தடைக்கல்லாக இன்றும் இருப்பதை நாம் காண்கிறோம். ஆகவே வரலாற்று பாரம்பரியத்தை கொண்ட இவ் இனப் பிரச்சினைக்கு நிலையானதோர் தீர்வு திட்டத்தினை உருவாக்கும் போது ஒரு பரந்த உரையாடலின் பெறுபேறாகவே அது அமைய வேண்டியது அத்தியாவசியமானது. ஆகவே பல கட்சிகளும் சுதந்திரமாக முன்வைத்து உரையாடக் கூடிய ஓர் களமாக பாராளுமன்ற தெரிவுக்குழு, பயனுள்ளதாக அமையும்.

ஆனால் இந்த விவகாரத்தில் நாம் மற்றுமோர் விடயத்தினை கவனத்திற்கொள்வது அவசியமா-னதாகும். இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தின் போது அரசியல் கட்சிகளையும் அரசியல் தலைவர்களையும் மையமாகக் கொண்ட கலந்துரையாடல்களை மேற்கொள்வதை விட, பொது மக்களை மையமாகக் கொண்ட அடிமட்ட கலந்துரையாடல் ஒன்று தேவைப்படுவதுடன் அதன் ஊடாக அரசியல் கட்சிகள் மீதும் அரசியல் தலைவர்கள் மீதும் ஒரு காலதாமதமான ஒரு செயல்முறை என்றும் அமைகிறது. அது உண்மையாக இருப்பினும் பொய்யாக இருப்பினும் அத்தீர்வு திட்டம் வெளிவரும் வரை அபிவிருத்தியை, குறிப்பாக வட கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியை பிற்போடுவது நியாயமானதா என்ற கேள்வி எழுகிறது.

30 ஆண்டு கால போரின் விளைவாக பின்தள்ளப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி செயற்பாடுகள் எந்தவிதத்திலும் பின்தள்ளப்பட அல்லது கை விடப்பட முடியாது. ஆகவே இப் பிரச்சினையை தீர்ப்பதில் ஒரு பன்முக அணுகுமுறையொன்றினை அரசு தற்போது மேற்கொண்டு வருகிறது. அதில் ஒரு அம்சமாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் அடித்தள வசதிகள் அபிவிருத்தி, வடக்கில் வசந்தம் கிழக்கின் விடியல் போன்ற பிராந்தியக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமாக துரிதமாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசன திட்டங்கள் குடி நீர் வசதி, விவசாய அபிவிருத்தி புனர்வாழ்வு, சுகாதாரம், கல்வி மற்றும் அடித்தள வசதிகள் அபிவிருத்தி என்பன முக்கிய இடம் வகிக்கின்றன. வட பிரதேசத்தில் வீதி அபிவிருத்தியை பொறுத்த மட்டில் வடக்கு பாதை வலைப்பின்னல், தேசிய செயற்திட்டங்களாக அமுல் நடத்தப்பட்டு தேசிய வீதிகள் 1271 கி.மீ, மாகாண வீதிகள் 1960 கி.மீ, உள்ளூராட்சி பாதைகள் 5600 கி.மீ என்பதாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இச் செயல் திட்டங்களுள் மன்னார் கரையோர வீதி, மன்னார் பாலம், முருங்கன் சிலாபத்துறை வீதி, கண்டி-யாழ்ப்பாணம் வீதி முக்கிய இடம் பெறுகின்றன. நீர்ப்பாசன துறையின் அபிவிருத்தியும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பெற்றிருக்கிறது. வட பகுதியில் விவசாயம் மேற்கொள்ளக் கூடிய நிலப்பரப்பு 1 லட்சம் ஹெக்டயர்களாகும். அந்த நிலப்பரப்பில் 45 ஆயிரம் ஹெக்டயர் நிலம் பாசன நீர் வசதியை கொண்டுள்ளது.

(31ஆம் பக்கம் பார்க்க)

வடக்கின் வசந்தம்
வடகிழக்கு நிகழ்ச்சித்திட்டம் 2006 - 2013

| முதலீட்டு வகைகள் | நிறைவு- 2006-2010 | | | | திட்டமிடப்பட்ட முதலீடு (ரூபா. மில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | திட்டங்களின் எண்ணிக்கை | செலவு (ரூபா மில்லியன்) | வெளியீடு (கி.மீ/ அலகு/ திட்டம்) | பயன் பெறுநர்களின் எண்ணிக்கை | 2011 | 2012 | 2013 | மொத்தம் |
| வீதி | 338 | 190 | 311 | 64,367 | 521 | 526 | 688 | 1,735 |
| மின்சாரம் | 145 | 102 | 92 | 14,225 | 74 | 75 | 98 | 248 |
| நீர் விநியோகம் | 170 | 36 | 135 | 8,672 | 149 | 150 | 196 | 495 |
| சிறியளவிலான நீர் விநியோகம் | 57 | 51 | 54 | 7,721 | 223 | 226 | 295 | 744 |
| பொதுக் கட்டிடங்கள் | 42 | 25 | 36 | 24,694 | 74 | 75 | 98 | 248 |
| வாழ்வாதாரம் | 554 | 365 | 530 | 40,193 | 298 | 301 | 393 | 992 |
| சமூக அபிவிருத்தி | 162 | 85 | 131 | 42,829 | 149 | 150 | 196 | 495 |
| மொத்தம் | 1,468 | 874 | 1,289 | 202,701 | 1,490 | 1,503 | 1,964 | 4,958 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன்னலுக்கு வெளியே...



சரியான விடை:
இலியானா


1. என்.சதாசிவம் - ஹொரணை
2. எஸ்.சிவதர்ஷன் - தர்காடவுன்
3. ஜி.தர்ஷிகா - நீர்கொழும்பு
4. எஸ்.தினேஷ்குமார் - ஹல்வத்துர
5. விகடன் - பாண்டிருப்பு
6. ஹுா - பாண்டிருப்பு
7. பாத்திமா துஸ்கா - திந்தவூர்-13
8. உ.ஜெசி - இறக்குவானை
9. பஸ்மிலா - வெலிவேபென்ன
10. ஜே.சாரு - யாழ்ப்பாணம்
11. துர்கா - புதுக்குடியிருப்பு
12. எஸ்.ஆர்.அன்டன் - பாண்டிருப்பு
13. ப்ரியா - கோண்டாவில்
14. ரூபனா - சதுமனை
15. ஆர்.கீர்த்தனா - கொழும்பு 15
16. எச்.எம்.ரிஸ்வான் - கல்முனை
17. கே.அர்ச்சனா - மட்டக்களப்பு
18. விதுகன் - பருத்தித்துறை
19. எஸ்.ரோஜினி - அக்கரைப்பற்று
20. ஆர்.எம்.நுஸ்கா - திபத்தலாவை
21. பா.கோபாலன் - களுவாஞ்சிக்குடி
22. கே.கோகிலா - இரத்தினபுரி
23. அமுதா - கொழும்பு-14
24. எச்.எம்.கலாம் - பாலமுனை
25. நிப்ராஸ் - பண்டாரகமை
26. அருள்ராஜ் - மஸ்கெலியா
27. எஸ்.ப்ரியா - ஹட்டன்
28. கே.விதுஷன் - திருகோணமலை
29. வி.புஷ்பராஜ் - இறக்குவானை

# என்னைப் புரட்டிப் போட்ட புத்தகம்

## இயக்குநர் லிங்குசாமி

**நான்** அடிப்படையில் ஒரு புத்தகப் பிரியன். இப்போது உங்களிடம் பேசிக் கொண்டிருப்பதற்குக் காரணமே நான் புரட்டிய, என் வாழ்க்கையைப் புரட்டிய ஒரு புத்தகம்தான். ராபின் சர்மா எழுதிய 'நீ உயிர் துறந்தால் அழுபவர் யாரோ?' (ஆங்கிலத்தில் 'who will cry when you die?' என்ற புத்தகம்தான் அது!)

நான் சினிமாவில் வாய்ப்பு தேடிக் கொண்டிருந்த காலம் அது. அப்போதே வீட்டில் திருமணம் முடித்து வைத்துவிட்டார்கள். பணப் பற்றாக்குறை, வாய்ப்பு இல்லாத சூழல் என பல பிரச்சனைகள். பல நாள்கள் தூக்கமேயில்லை. என்ன செய்யப் போகிறோம்? எப்படி சமாளிக்கப் போகிறோம்? என்ற எண்ணத்திலேயே கிட்டத்தட்ட மனநிலை பாதித்தது போல் ஆகிவிட்டது. இதே சமயம் நான் வைத்திருந்த கதையை அப்படியே இன்னொருவரும் எடுத்துக் கொண்டிருக்கிறார். இறந்துவிடலாமா? என்று கூட நினைத்திருக்கிறேன். இந்தச் சூழ்நிலையில் மனைவியை எப்போது சென்னைக்கு அழைத்துப் போகப் போகிறாய்? என என் வீட்டிலும் பெண் வீட்டிலும் என்னைக் கேள்விகளால் துளைத்தெடுக்கிறார்கள்.



அப்போதுதான் 'நீ இறந்தால் அழுபவர் யாரோ?' மொழிபெயர்ப்புப் புத்தகத்தைப் படிக்க நேர்ந்தது. எழுத்தாளர் ராபின்சர்மா, காந்திய சிந்தனைகளால் செதுக்கப்பட்டவர். மிகச் சிறந்த நிர்வாகி. அந்தப் புத்தகத்தில் அவர் சொல்லும் சாரம் இதுதான்... 'உங்களுடைய பிரச்சினைகள் எவையாக இருந்தாலும் அவற்றை முதலில் பட்டியலிடுங்கள். அதன் பிறகு அவற்றில் தலையாயதாகக் கருதும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து அதற்கேற்ப செயல்படுங்கள். அதுதான் வெற்றிக்கு வழி' என்கிறார்.

1. மனைவியை சென்னைக்கு அழைத்துப் போகிறோமா.
2. படம் எப்போது செய்யப்போகிறோம்?
3. அதே கதையா அல்லது வேறு புதிய கதையா?

நன்கு யோசித்துப் பார்த்ததில் முதலில் படம் செய்தால் போதும். மற்றவையெல்லாம் தாமாக அமைந்து விடும் எனத் தெரிந்தது. எந்தெந்த கம்பெனிகளில் கதை சொல்லியிருக்கிறோம், எங்கு சொல்லவில்லை என இன்னொரு பட்டியலைத் தயாரித்துவிட்டு முயற்சி செய்தேன். கடும் முயற்சி செய்தேன். அடுத்த இருபதாவது நாளில் சூப்பர் குட் பிலிம்ஸில் இயக்குநராக அமர்ந்துவிட்டேன். 'ஆனந்தம்' படம் வெளிவர, என் வாழ்வில் ஆனந்தம் உட்புகுந்தது.

இது போன்ற விஷயங்களைப் பலர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் ரொபின் சர்மா அவற்றை வெளிப்படுத்திய விதம், அந்தப் புத்தகத்தோடு நமக்கு ஒரு நெருக்கத்தை ஏற்படுத்திவிடுகிறது. மீண்டும் மீண்டும் புத்தகத்தைப் படித்தேன். என்னைப் பற்றியிருந்த குழப்பங்கள் நீங்கி ஒரு தெளிவு ஏற்பட்டது. அவர் கூறியபடி, என் பிரச்சனைகளைப் பட்டியலிட்டேன். ஆயிரம் பிரச்சனைகள் இருந்தது போல் தெரிந்தாலும் முடிவாக மூன்றுதான் முக்கியமாகப்பட்டது.

இந்தப் புத்தகத்தை நான் வாசித்தேன் என்று சொல்வதைக் காட்டிலும் நேசித்தேன் என்று சொல்வதைக் காட்டிலும் சுவாசித்தேன் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். நான் சந்திக்கும் நபர்களிடமெல்லாம் இந்தப் புத்தகத்தின் பெருமைகளைப் பற்றிக் கூறி அவர்களையும் படிக்கச் செய்துகொண்டிருக்கிறேன்.

## சொல் விளையாட்டு - 13

சரியான விடைகள்

இடமிருந்து வலம்
இராவணன், நிபுணம், பாரி, சம்பா, கலி

மேலிருந்து கீழ்
இந்திரன், ராஜவம்சம், ஹரிதிர், பரிபரிஜாதம், பிம்பம், புலி

சரியான விடை அனுப்பியோரில் பெயர்கள் இடம்பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள்

1. எம்.எஸ்.சிவராஜா, சுரக்கப்பொல
2. எஸ்.மாலதி, கேகாலை
3. எஸ்.ஸ்ரீதரன், கிறிப்பனை




## படம் சொல்லும் கதை



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கைவேலி காண்டீபன் குடியிருப்பு கிராமத்தில் வசித்தபோது எனது ஆரம்பக்கல்வியை கைவேலி கணேச வித்தியாசாலையில் தொடர்ந்தேன். அப்போது அங்கு மாலைநேர வகுப்புகளும் இடம்பெற்றன. 1990ல் 2ம் தரத்தில் படிக்கும் போது மாலைநேர வகுப்பில் ஆசிரியர் தினவிழா கொண்டாடினோம். அவ்விழாவில் நானும் கலைநிகழ்வுகள் செய்தேன். இது அச்சமயத்தில் எடுக்கப்பட்ட படம்.

இப்படத்தை பார்க்கும் போது நான் படித்த பாடசாலையும், எனக்கு கற்பித்த ஆசிரியர்களான பார்த்தீபன், சிதம்பரேஸ், காந்தன், நித்தியா, புனையா, காந்திமதி ஆகியவர்களும், எனது நண்பர்களான ஜீவதர்சன், டெசிகரன், பவித்திரன், திவ்யா, மனோன்மணி, மடோனா ஆகியோரும் மனதில் தோன்றுகின்றனர். ஆசிரியர்கள் அறிவு, சிறந்த ஒழுக்கம், அன்பு, திறன் ஆகியவற்றை ஊக்கத் தந்து வழிநடத்தியமையும் அத்தோடு பாடசாலையில் படித்த பசுமையான நாட்களும் என் நினைவுக்கு வருகின்றன. பாடசாலையில் படித்த அந்த நாட்களை என்றுமே என்னால் மறக்க முடியாது.

நான் இப்பொழுது A/L பரீட்சையை உடுவில் மகளிர் கல்லூரியிலே முடித்து யாழ்ப்பாணம் புதிய உயர் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறேன்.

**நிரஞ்சனா புஸ்பரத்தினம்**
அழிபுரம் பெரியபுலோ, யாழ்ப்பாணம்.

உங்களுடன் அல்லது உங்கள் குடும்பத்துடன் தொடர்புடைய மறக்க முடியாத நிகழ்வுகளை பின்புலமாகக் கொண்ட பழைய புகைப்படங்கள் இருக்குமானால் அந்த சுவாரசியமான கதையை எங்களுக்கு படத்தின் பிரதியுடன் அனுப்பி வைத்தால் அல்லது இமெயில் மூலம் அனுப்பி வைத்தால் உங்கள் மகிழ்ச்சியை நாங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.



ஆறு அதிர்ஷ்டசாலிகள்
1. எஸ்.புவிதரன் - யாழ்ப்பாணம்
2. கே.மாணிக்கம் - கண்டி
3. ஆர்.விமல் - கோண்டாவில்
4. எஸ்.பவித்திரா - கிளிநொச்சி
5. எம்.கிருஸ்ணா - நுவரெலியா
6. கே.நந்தன் - மட்டக்களப்பு

சிறுவரும் சித்திரமும்

கடந்த இதழில் வெளியான படத்திலுள்ள ஆறு தவறுகள் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

## குறுக்கெழுத்து போட்டி - 19

விடைகள்

இடமிருந்து வலம்
புன்னகை, ஊசியில், ஏடு, கொடி, திராட்சி, சிலை, கறுப்பு, ஜீவியம், வாயம், விரிப்பு, புயல், அடி, கம்பீரம், ரவி, காவடி, பிரியங்கா, மகிமை, நாலாட்டு

மேலிருந்து கீழ்
புத்திஜீவி, மகராசி, ஒன்று, டிக் டிக் டிக், சிப்பு, கைலாயம், புகழ், கம்பிளி, ரகசியம், பிரான்சி, பியர், யமன், மைதா, மொடு

சரியான விடைகளை எழுதி பெயர் தெரிவான மூவர்
1. வசந்தா பாலேந்திரா, கொழும்பு-06
2. ஏ.சங்கீதா, ஹட்டன்
3. ஷிட்லாஜ், சித்தியும்மா, திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# face பக்கம்

Share Follow me!

FaceBook, Twitter, Blog பிரியர்களே!
இப்போது வண்ணவானவில் Facebook, Twitter, Blog உடன் நீங்களும் சுவாரஷ்யமான விடயங்களை Share, Tag பண்ணலாம்.
சிறந்தவை இங்கே பிரசுரமாகும்.

வண்ண வானவில் விலாசங்கள்:

facebook :- vannavaanavil@facebook.com
Twitter :- vannavaanavil@twitter.com
Blog :- vannavaanavil@blogspot.com

























தொகுப்பு: லக்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொகுப்பு: ஜெயா, ஹீனுப்பிட்டிய

## வானவில் மங்கை

# மாதவிலக்குக்கு முன் ஏற்படும் படபடப்பும் எரிச்சலும்...

பெண்கள் உயர் அதிகாரிகளாக நியமனம் செய்யப்படும் போது ஆண்களைப் போல எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்கள் ஒரே மாதிரி, மனம் அலைபாயாமல் நடந்து கொள்வார்களா என்ற சந்தேகம் அவ்வப்போது எழுப்பப்படுவதுண்டு. இந்திராகாந்தி அம்மையார் இந்தியப் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட போது எதிர்க்கட்சித் தலைவர்கள் இந்த சந்தேகத்தை எழுப்பினார்கள்.

விரைவில் உணர்ச்சி வசப்படுதல், படபடப்பு, எரிச்சல் போன்ற குணங்கள் மாதவிடாய் காலத்தில் பெண்களை ஆக்கிரமிக்கும். இக்காலத்தில் ஒரு தலைவியால் முக்கிய முடிவுகளை சரியாக சிந்தித்து எடுக்க முடியுமா? என்பதுதான் எதிர்க்கட்சியினர் முன் வைத்த சந்தேகம். சில கணவன்மார் தன் மனைவிமாரின் இந்த 'மூட்' மாற்றத்தை அறிந்து, அத்தினங்களில் கப்சிப் ஆகிவிடுவார்கள். மோதல் தவிர்ப்பு!



மாதவிலக்கு ஆரம்பிப்பதற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்போ அல்லது மாதவிலக்கு வந்த இரண்டாவது வாரத்திலிருந்து, அடுத்த மாதவிலக்கு வரும் வரையோ வருகிற பிரச்சனை இது. பெரும்பாலும் எல்லா பெண்களுக்குமே மாதவிலக்குக்கு முன்பான இந்த நோய்க்குறித் தொகுப்பு ஏதாவது ஒரு சூழலில், கட்டாயம் வந்திருக்கும். மாதவிலக்கு ஏற்படும் சமயத்தில் உடலில் சுரக்கும் ஹோர்மோன்களின் அளவில் ஏற்படும் ஏற்ற, இறக்கமே இந்தப் பிரச்சனைக்கு அடிப்படை. மாதவிலக்கின் முற்பகுதியில் புரெஜெஸ்ட்ரோன் எனப்படுகிற ஹோர்மோனின் அளவு குறைந்திருக்கும். பிற்பகுதியில் இன்னொரு ஹோர்மோனான ஈஸ்ட்ரோஜெனின் அளவு குறைய ஆரம்பிக்கும். இந்த இரண்டு ஹோர்மோன்களும் மாதாந்திர சுழற்சியின் எல்லா நாட்களிலும் ஒரே அளவில் இருப்பதில்லை. அதனால்தான் பெண்களின் உடல் மற்றும் மனநிலையில் மாறுதல்கள் உண்டாக்குகின்றன.

உடல் வீக்கம், மார்பகங்கள் மென்மையாகிவிட்ட மாதிரி உணர்வு, பாதங்கள் மற்றும் கணுக்கால்களில் வீக்கம், உடலில் நீர் சேர்தல், எடை அதிகரிப்பு, மாதவிலக்குக்கு ஒருசில நாள்கள் முன்பும், மாதவிலக்கின் போதும் வலியுடன் சிறுநீர் கழித்தல், தலைவலி, பருக்கள், களைப்பு, மயக்கம், முதுகுவலி, தசைப் பிடிப்பு, குமட்டல், இடுப்பு வலி, வயிற்று உப்புசம், வயிற்று வலி மற்றும் வயிற்றுப் போக்கு போன்றவை ஏற்படலாம்.

எரிச்சல், கவலை, மனச்சோர்வு, கவனம் சிதறுதல், குழப்பம், கோபம், அடாவடித்தனம், அழுகை, மறதி, உணவுப் பண்டங்களின் மீதான திடீர் ஈர்ப்பு என மனரீதியான மாற்றங்களும் இருக்கலாம்.

இவை நோய்த்தன்மையைக் காட்டும் அறிகுறிகள் என்பதால் சிகிச்சை தேவைப்படும்.

இல்லையேல் தினசரி உடற்பயிற்சி, சர்க்கரை குறைவான, சமவிகித உணவு, அமைதியான இரவுத்தூக்கம், டென்ஷன் தவிர்ப்பது, மருத்துவரின் பரிந்துரையின் பேரில் கால்சியம், வைட்டமின் பி6 மற்றும் மக்னீசியம் சத்து மருந்துகளை எடுப்பது போன்றவை இந்த பாதிப்பிலிருந்து விலக உதவும்.

- ஜானகி



## டிப்ஸ்

*கொழுக்கட்டைகளை இட்லி தட்டில் வேகவைப்பதற்கு பதிலாக ஓங்கில் தட்டின் மீது துணி விரித்து அதில் கொழுக்கட்டைகளை வைத்து வேகவைத்தால் சீக்கிரமாக வெந்துவிடும்.*

*பிரம்பு நாற்காலிகள் தொய்வடைந்தால் அதை வெந்நீரில் கழுவி பிறகு வெயிலில் காயவைத்தால் போதும் தொய்வுச் நீங்கி பிரம்புகள் நன்றாக இருக்கும்.*

*சப்பாத்தி ருசியாக இருக்க மாவில் இளநீரை விட்டு பிசைந்து சுட்டால் போதும்.*

*ரோஜா மலர்கள் அதிக வாசம் வீச அதனருகில் வெங்காயச் செடியை வளர்க்கவும்.*

*செம்பருத்தி இலைகளை அரைத்து தலையில் பூசி குளித்தால் அதுவே இயற்கையான கண்டிஷனராகும்.*



# கர்ப்பகால பிரச்சினைகள்

**தலைவலி:-** இது அதிகமாக முதல் மூன்று மாதங்களில் ஏற்படலாம். காரணம் இது ஹோர்மோன் மாற்றத்தினாலேயே நிகழ்கின்றது. சத்தான ஆகாரமும் ஓய்வுமே இதற்கான தீர்வு.

**தலைச்சுற்று:-** உட்கார்ந்து எழும்பும் போதும் குனிந்து நிமிரும் போது சற்று தலைச்சுற்று ஏற்படலாம். இது இரத்தத்தில் சீனியின் அளவு குறைவதால் அல்லது இரும்புச் சத்து குறைவதால் ஏற்படாலம். இதனால் உணவை தவிர்த்தல் ஆகாது. கட்டாயமாக திட உணவாகவோ அல்லது பானமாகவோ எடுப்பது அவசியம். அதுவும் காலையில் வ்யிற்றை பட்டினி போடக்கூடாது.

**மூக்கடைப்பு அல்லது மூக்கிலிருந்து இரத்தம் வடிதல்:-** இது சிலருக்குத் தான் ஏற்படும். சிறிதளவு இரத்த கசிவு ஏற்படலாம். இது இரத்த ஓட்டத்தின் அதிகரிப்பின் விளைவாகும்.

**வாந்தி அல்லது குமட்டல்:-** இது பலபேருக்கு உண்டு. கூடுதலாக காலைவேளைகளில் ஏற்படலாம். இதுவும் ஹோர்மோனின் மாற்றத்தால் வருவது. இதற்கு பயப்படத் தேவையில்லை. புரதம், கொழுப்பு அதிகமான உணவுகளை தவிர்த்து சத்தான உணவை ஒரே வேளையில் எடுக்காமல் கொஞ்சம் கொஞ்சமாக சிலமணி நேரங்கள் விட்டு விட்டு எடுப்பது நல்லது. வாந்தி வரும் மனநிலை தோன்றினால் உடனே ஒரு கிறீம் கிரக்கர் பிஸ்கட்டை சாப்பிடலாம். மனநிலை மாறிவிடும்.

**கால்வீக்கம்:-** இரத்த அழுத்தம் அதிகமானால் கூட கால் வீக்கம் ஏற்படலாம். இதை குறைக்க இடது பக்கமாகபடுத்து காலை சிறிது நேரம் மேல்பக்கமாக தூக்கி வைத்திருந்து பின் இறக்கி விடவும்.

**பல்வலி:-** சிலருக்கு இதுவும் ஏற்படலாம். பல்லின் ஈறுகள் பஞ்சு போல் மிருதுவாய் மாறும். இதனால் இரத்தக் கசிவு, பல்வலி ஏற்படலாம்.

**சோர்வு:-** இது எல்லோருக்கும் ஏற்படலாம். காரணம் கருவில் உள்ள குழந்தைக்கும் சேர்த்து உடல் இயங்குவதால் சோர்வு ஏற்படுகின்றது. கர்ப்பகாலத்தில் இரும்புச் சத்து அதிகம் தேவைப்படும். இதனால் இரத்தத்தில் ஹீமோகுளோபினின் அளவு குறையும். இது சிலருக்கு இரத்த சோகையை ஏற்படுத்தலாம். எனவே இரும்புச் சத்து அடங்கிய பேரீச்சம்பழம், கீரை வகைகள், பால் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்

**நெஞ்செரிவு:-** இது கடைசி மாதங்களில் கூடுதலாக ஏற்படாலம். சமிபாடு அடைவது குறைவதால் ஏற்படுகின்றது. இதை தவிர்க்க பாலை காய்ச்சி இளம் சூடாக பருக எரிச்சல் குறையலாம்.



# சரும பளபளப்பைத் தரும் கசகசா

**கசகசா** என்றதுமே எமக்கு ஞாபகம் வருவது சர்பத்தான். கடைவீதிக்கு போகும்போது வீதியோர குளிர்பான கடைகளில் இந்த சர்பத் கசகசாவுடன் உட்கார்ந்திருக்கும். இதை வாங்கிக் குடித்தால் உடல் குளிர்ச்சியாக இருக்கும். வெயிலின் சூடே தெரியாது. அந்தளவிற்கு அருமையான இந்த கசகசாவை நம்நாட்டில் பாவிப்பது ரொம்பவே குறைவு. இந்தியர்களோ இதை சமையலில் அதிகம் பாவிக்கின்றார்கள். அதுவும் முக்கியமாக அசைவ உணவில். காரணம், இது சூட்டை குறைத்து சுவையை அதிகரிக்கும். இது குளிர்ச்சியை மட்டுமன்றி சருமத்திற்கு பளபளப்பையும் தரும் என்பது பலருக்குத் தெரியாது. கசகசாவை பாதாம் பருப்புடன் சேர்த்து அரைத்துப் பூசி சிறிது நேரத்தில் கழுவினால் முகம் பளபளக்கும். கசகசாவுடன் தேசிக்காய்ச்சாறு, தேங்காய்ப்பால் பலந்து பூசி பின் பயற்றம் மாவினால் தேய்த்து கழுவ, கரும்புள்ளி அகலும். கசகசாவுடன் பாலை கலந்து பூசி ஒரு மணி நேரம் வைத்துவிட்டு கழுவினால், தழும்புகள் அகலும். அம்மைத் தழும்பு மறைய, வேப்பிலை, மஞ்சள் அரைத்து பூசிவீர்களே, அதனுடன் கசகசாவையும் சேர்த்து பூசினால் அது சீக்கிரமே மறைந்துவிடும். அதுமட்டுமல்ல; கசகசாவை பாலில் சேர்த்து அருந்தினால் நன்றாக நித்திரை வரும். முகச்சுருக்கத்தை கூட இது குறைத்துவிடும். இதனால் வயது அதிகரிப்பு தெரியாமல் இளமையாக இருக்கலாம். எனவே, கசகசாவை நாடுங்கள்; அது உங்களுக்குத் கை கொடுக்கும்.

# சமைத்துப் பாருங்கள்

## வேப்பம்பூ ரசம்

**தேவையானவை:-**

| | |
|---|---|
| வேப்பம்பூ | - 2 மேசைக்கரண்டி |
| பருப்பு அவித்த நீர் | - 2 கப் |
| தக்காளி | - 2 |
| கடுகு | - 1/2 தேக்கரண்டி |
| புளி | - நெல்லிக்காய் அளவு |
| மஞ்சள்தூள் | - 1/4 தேக்கரண்டி |
| நெய் | - 2 மேசைக்கரண்டி |
| பெருங்காயம் | - 1/4 தேக்கரண்டி |
| கருவேப்பிலை | - தேவையான அளவு |
| உப்பு | - தேவையான அளவு |
| மிளகு | - 1 1/2 தேக்கரண்டி |
| சீரகம் | - 1 தேக்கரண்டி |
| காய்ந்த மிளகாய் | - 2 |

**செய்முறை:-**
புளியை 1 1/2 கப் நீரில் கரைத்தெடுக்கவும் அத்துடன் தக்காளி, மஞ்சள்தூள், பெருங்காயம், கருவேப்பிலை, உப்பு சேர்த்துக் கரைத்துக் கொள்ளவும் மிளகு, சீரகம், கா.மிளகாய் ஆகியவற்றை வறுத்து பொடி செய்து அதையும் சேர்ந்து அடுப்பில் கொதிக்கவிடவும். நல்ல வாசனை வந்ததும் பருப்பு நீரை ஊற்றி நுரைத்து வரும்போது நெய்யில் கடுகு, வேப்பம்பூ சேர்த்துப் பொரித்து ரசத்தில் சேருங்கள்.

## மீன் ரோஸ்ட்

**தேவையானவை:-**


| | |
|---|---|
| மீன் | - 1/2 கிலோ |
| வெங்காயம் | - 4 |
| பச்சமிளகாய் | - 3 |
| இஞ்சி | - 1துண்டு |
| தக்காளி | - 1 |
| புளி | - 2 மேசைக்கரண்டி |
| தேங்காய்ப் பால் | - 1கப் |
| மஞ்சள் | - 1/4 தேக்கரண்டி |
| மிளகாய்த் தூள் | - 2 தேக்கரண்டி |
| மிளகு | - 1/2 தேக்கரண்டி |
| உப்பு | - தேவைக்கேற்ப |
| எண்ணெய் | - தேவைக்கேற்ப |

**செய்முறை:-** மீனை சுத்தம் செய்து மஞ்சள், மிளகு, உப்பு சேர்த்து பிரட்டி 2 மணிநேரம் ஊறவிட்டு எண்ணெயில் முக்கால்பாகம் வேகும் வரை பொரித்தெடுக்கவும் பின் வேறு பாத்திரத்தில் எண்ணெய் விட்டு இஞ்சி, வெங்காயம், பச்சமிளகாய் சேர்த்து வதக்கி பின் தக்காளி சேர்த்து அதுவும் வதங்கியதும் புளிகரைசல், மஞ்சள், மிளகாய்த்தூள் சேர்த்து பச்சை மணம் போனதும் தேங்காய்ப்பாலை விட்டு கொதித்ததும் மீனை போட்டு கிளறாமல் ஒரு முறை திருப்பிவிட்டு குழம்பு சுண்டும் வரை வைத்துவிட்டு இறக்கி பரிமாறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூங்கு மூஞ்சி

**ரா**மன் சரியான முட்டாள். எங்கு வேலைக்குப் போனாலும் ஒரே நாளில் தன் வேலையை முட்டாள்தனத்தாள் பறி கொடுத்துவிட்டு வந்து விடுவான்.

அவனை அறிந்த யாரும் உள்ளூரில் வேலை கொடுக்க மறுத்தனர். அதனால் வெளியூருக்குச் சென்று வேலை தேடினான் ராமன்.

ஒரு ஓட்டலில் அவனுக்கு வேலை கிடைத்தது. அதனால் நல்ல சாப்பாடும் கிடைத்தது. இங்கே வந்ததில் இருந்து சாப்பிட அமர்ந்தால் சாப்பிட்டுக் கொண்டே இருப்பான். தூங்கினால் தூங்கிக் கொண்டே இருப்பான். ஆனால் மாடு மாதிரி உழைப்பான். அதனால் உரிமையாளர் பொறுத்துக் கொண்டார்.

இப்படி இருப்பதால் எல்லோரும் அவனை சாப்பாட்டு ராமன் என்றும், தூங்கு மூஞ்சி என்றும் அழைத்தனர். இதுவே அவன் பெயராகவும் மாறியது.

ஒரு முறை முதலாளி வெளியூருக்குச் சென்றார். ஓட்டலை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறிச் சென்றார். இரவு நேர ஓட்டல் என்பதால் நெடுநேரம் கவனிக்க நேர்ந்தது. பசி எடுக்கவே மூக்குப் பிடிக்கச் சாப்பிட்டான் ராமன். வயிறு முட்ட சாப்பிட அவனுக்கு தூக்கம் கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது. உடனே படுக்க ஆரம்பித்தான், கும்பகர்ணன் போல் தூங்கிவிட்டான்.

சாப்பிடுவது போல வந்த திருட்டு ஆசாமிகள் ஓட்டலில் இருப்பதை எல்லாம் சாப்பிட்டு விட்டுப் பணப் பெட்டியையும், சாமான்களையும் சுருட்டிக் கொண்டு போய்விட்டனர்.

முதலாளி அதிகாலையில் ஊர் திரும்பி கடைக்கு வந்தார். கடை சுத்தமாக துடைக்கப் பட்டிருப்பதை கண்டு அலறி-னார். தூங்கிக் கொண்டிருந்த தூங்கு மூஞ்சி ராமன் முகத்தில் தண்ணீரை ஊற்றி எழுப்பினார்.

''என்ன முதலாளி, வந்துட்டீங்களா? ஆமா, கடைக்கு என்னாச்சு, சாமான்களையெல்லாம் எங்கே?" என்றான் ஏதும் அறியாதவன் போல....


''தூங்கு மூஞ்சி நாயே, உன்னை கடையைக் கவனிச்சுக்கச் சொன்னால், எல்லாத்தையும் திருட்டு கொடுத்துவிட்டு என்னிடமே கேள்வி கேட்கிறாயா?"

''முதலாளி என்ன மன்னிச்சிடுங்க, நான்தான் சாப்பிட்டதும் நல்லா தூங்குவேன்னு தெரியுமல்லவா, நேற்றும் வழக்கம்போல் தூங்கிவிட்டேன்" என்றான் முட்டாள் தனமாக.

''உனக்கு இனியும் வேலை கொடுத்தால் நான் நடுத்தெருவுக்குத்தான் வரவேண்டும். ஓடிப்போ!" என்று அவனை அடித்து விரட்டினார் முதலாளி.

**நீதி: வேலை நேரத்தில் தூக்கத்திற்கு முக்கியத்துவம் தருபவன் வாழ்க்கையில் முன்னேற முடியாது.**

## சொல் விளையாட்டு 20




### இடமிருந்து வலம்

1. உலகில் உயர்ந்த மலை
5. கிருஷ்ணனின் இரு மனைவியரில் ஒருவர்
7. மாதங்களில் ஒன்று
9. சுவைகளில் ஒன்று
10. புரட்சி போராட்டம்

### மேலிருந்து கீழ்

1. இது இயங்காவிட்டால் மரணம் ஏற்படும்
2. ஆட்கள்
3. பாசவலை வீசுபவன்
4. நேரம்
6. கல்வி
8. சோற்றில் ஊற்றி சாப்பிடலாம்

**சரியான விடை அனுப்பும் அறுவரின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சொல்விளையாட்டு 18ன் விடைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களும் 22ஆம் பக்கத்தில்...**

## தெரிந்து கொள்ளுங்கள்

நத்தையால் மணிக்கு 17 அடி தூரம்தான் செல்ல முடியும்.

பாம்புகளின் கண்களுக்கு மேல் இமை கிடையாது.

'ஈ' மணிக்கு 7 கி.மீ வேகத்தில் பறக்கும்.

கரப்பான் பூச்சி 35 கோடி ஆண்டுகளாக வடிவம் மாறவில்லை.

நின்றபடியே அடைகாக்கும் பறவை பெங்குவின்

முதலை 300 ஆண்டுகள் வரை உயிர்வாழும்.

உலகில் மிகவும் உலர்ந்த பாலை வனம் சிலியில் உள்ள அடகாமா.

புயலின் தீவிரத்தை துல்லியமாக கணக்கிடுபவை, டாப்ளர் காலநிலை ரேடார்கள்.

இந்தியாவில் அதிக நூலகங்கள் உள்ள மாநிலம் கேரளா!

**- எஸ்.தமயந்தி, வவுனியா**



## மீன்

மீனின் தலைப்பகுதியில் இரண்டு துவாரங்கள் உள்ளன. நீந்தும் போது, அதனுள் நீர் செல்லும். அது உள்ளே சென்று உணர்வு செல்களைத் தூண்டிவிடும். இதன்காரணமாக, மீன்கள் வாசனையை அறிகின்றன. மீன், தான் செல்லும் வழியை வாசனையை வைத்தே கண்டறியும். தொடுதல், சுவைத்தல், கேட்டல் மற்றும் பார்த்தல் போன்ற உணர்வுகளும் மீன்களுக்கு உண்டு.

## விடுகதைகள்

1. பிறக்கும் போது வால் உண்டு, இறக்கும்போது வால் இல்லை - அவன் யார்?
2. ஒன்பது பிள்ளைகளுக்கும் ஒரே குடுமி - அது என்ன?
3. பிச்சு எறிந்தாலும் பின்னாலேயே முளைக்கிறான், வெட்டி எறிந்தாலும் வேகமாக முளைக்கிறான் - அவன் யார்?
4. தொப்பைப் பையனுக்கு ஒரு வாசல், தோழனுக்கு இரு வாசல் - அவன் யார்?
5. காற்றால் உயிர் பெறும், காதுக்கு இனிமை தரும் - அது என்ன?

**விடைகள்**
1. தவளை
2. வெள்ளைப்பூண்டு
3. முடி
4. சட்டை
5. புல்லாங்குழல்


## வரைந்து பாருங்கள்

**இரவில் கொட்ட கொட்ட விழித்திருக்கும் ஆந்தையை வரைந்து பழகுவோம்.**



## கண்டுபிடியுங்கள்

**பலூன் யார் கையில் உள்ளது? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!**




## புகழ் நாடுகள்

ஆயிரம் ஏரிகளின் பூமி என்றழைக்கப்படுவது - பின்லாந்து

கங்காரு பூமி என்றழைக்கப்படுவது - ஆவுஸ்திரேலியா

அதிகாலையின் அமைதி பூமி என்றழைக்கப்படுவது - கொரியா

உதய சூரியனின் பூமி என்றழைக்கப்படுவது - ஜப்பான்

நள்ளிரவு சூரியனின் பூமி என்றழைக்கப்படுவது - நார்வே

அல்லிமலர்களின் பூமி என்றழைக்கப்படுவது - கனடா

'கேக்'குகளின் பூமி என்றழைக்கப்படுவது - ஸ்காட்லாந்து

உலகின் புனித பூமி என்றழைக்கப்படுவது - பாலஸ்தீனம்

**- [illegible]**

| ஸ்டார் பேபி பகுதிக்கு உங்கள் குழந்தைகளின் படங்களையும் அனுப்பலாம். | முகவரி:<br>STAR BABAY,<br>Editor,<br>Vanna Vaanavil Editorial,<br>Lake House<br>Colombo - 10 |
|---|---|

## நிழல் எது?




**வாத்தின் உண்மையான நிழல் உருவம் எது?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜன்னலுக்கு வெளியே...



இவர் தமிழ் திரையுலகில் பிரபல்ய நடிகர்

A. பிரபு
B. பிரபுதேவா
C. சசிகுமார்
D. பாண்டியன்

சரியான விடையைக் கண்டுபிடித்தால் உங்கள் பெயர், முகவரியுடன் 0778021501 என்ற தொலைபேசி எண்ணுக்கு டைப் செய்து உடனே அனுப்பி வையுங்கள்

மீன் சாப்பிடும் போது முள் குத்தாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? சூப்பர் ஐடியா! வாயில் செருப்பு போட்டுக் கொள்ளுங்களேன்!

- சஸ்னா, குருநாகல்



நான்கு கால் இருக்கும் அதன் மீது ஈக்கள் இருக்கும்.
அது என்ன?
நாயா?
இல்லை, உங்க வீட்டு சாப்பாட்டு மேசை!

- என்.பிரசன்னா, கஹவத்தை



ஒருத்தியை லவ் பண்ணி 1000 பிகரை மிஸ் பண்றதை விட ஒருத்தியை மிஸ் பண்ணி 1000 பிகரை சைட் அடிப்போம். சந்தோசமா வாழ்வோம்.

- வி.நிலக்ஷன், தோப்பூர்

## ரோஜாவின் புலம்பல்

பொய் காதல் கொண்ட பெண்களின் தலையில் இருப்பதை விட, உண்மை காதல் கொண்ட ஆண்களின் கல்லறையில் இருக்கவே விரும்புகிறேன்

- ரோஜா, வவுனியா





சைனா காரர் ஒருவர் தனக்கு பிறந்த முதல் குழந்தைக்கு 'யங் மங் சிங்' என்று பெயர் வைத்தாராம். இரண்டாவதாக கொழு கொழுன்னு சிவப்பா ஒரு குழந்தை பிறந்ததாம். அதுக்கு 'சிங் மங் யங்'ன்னு பெயர் வைத்தாராம். ஒரு 5 வருடம் கழித்து படு கறுப்பா ஒரு குழந்தை பிறந்ததாம். அதுக்கு 'சம் திங் ரோங்'ன்னு பெயர் வச்சாராம்.

- புளியாவத்த, பாஸ்கரன்



# SMS பூக்கள்

நீங்கள் படித்தது, கேட்டது, கற்பனையில் உருவானது என்று உங்களுக்குப் பிடித்த எஸ்.எம்.எஸ். கதை, கவிதை, ஜோக்குகளை இங்கே பதிவு செய்யலாம். இப்போதே உங்கள் செல்போன்களை எடுத்துப் பதிவு செய்து உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள். செல்போன் வசதியற்றவர்கள் தபாலட்டையிலும் அனுப்பலாம். முகவரி 3ஆம் பக்கத்தில்.

0778021501



## லவ்வர் இல்லாம இருப்பதால் உள்ள நன்மைகள்:

1. நன்றாகத் தூங்கலாம்
2. டைம், பணம் சேமிக்கலாம்.
3. நம்மலப் பற்றி கவலைப்பட அவசியமில்லை.
4. மிட் நைட்ல மிஸ்ட் கோல் இருக்காது.
5. போன்ல ஸ்பெஷல் ஒப்பர்ஸ்சை எக்டிவ் பண்ண தேவையில்லை.
6. எல்லா பெண், ஆணுடனும் தைரியமா பேசலாம்.
7. போன்ல எனி டைம் பெலன்ஸ் இருக்கும்.
8. நோ டென்ஷன்.'. சோ பி.கூல் என்ஜோய் யுவர் லை.'.ப்

- ஏ.ரிஸ்னி, இறக்காமம்-08, அம்பாறை



என்னதான் நெருப்பு கோழியாக இருந்தாலும் அவித்த முட்டை போடுமா?

- மு.டிஸாந்தன், சமயபுரம்



பறவைகள் எல்லாம் ஏன் வெளிநாட்டில் இருந்து இங்க பறந்து வருது தெரியுமா? நடந்து வந்தா லேட் ஆகும் அதான்...



எல்லா ஷிப்பும் கடலுக்குள் மூழ்கும் but பிரன்ட்ஷிப் மட்டும் கடலுக்குள் மூழ்காதுங்க...
ஏன்னா பிரண்ட்ஷிப் அவ்வளவு ஸ்ட்ரோங்கானது

- புஸ்பஜோதி, ஹல்வத்துர, இங்கிரிய



## பிரண்டுக்கு அர்த்தம்...

F - Frand
R - rowdy
I - Idiot
E - Enemy
N - Non sense
D - Donkey



படிக்கும் போது தூக்கம் வந்தால் என்ன செய்யணும்...?
நமக்கு படிப்புதான் வரலை தூக்கமாவது வருதேன்னு தூங்கணும்.

- சாபியா, அபுகஸ்தலாவ



திருமணம் முடிக்கப் போகும் மணப்பெண்ணைப் பார்த்து முதல் நாள் நைட் ஒருத்தன் லெட்டர் கொடுத்து ஐ லவ் யூ சொல்லி கூட்டிக் கொண்டு ஓடினா எப்படி இருக்கும்? மணமகனின் வாழ்வில் வெளிச்சம் உதிக்கும். சோ. மாப்பிள்ளை அதிர்ஷ்டசாலி!

- ஏ.எம்



பைக்கில் காலை கீழே வைக்காம 8 போட முடியும். ஆனா லைப்பில் காலை தூக்காம அன்டர்வெயார் போட முடியுமா? இது தான் உங்க வாழ்க்கையின் தத்துவம்.

- ஜெயகாந்த், றைகம், இங்கிரிய



23 புலிகேசி: அமைச்சரே ஏதேனும் செய்தி உண்டா?
அ: ஆம் மன்னா!
பு: கூறும், கூறித் தொலையும்,
அ: எதிரி நாட்டு மன்னன் போர் தொடுக்க இருப்பதாக SMS அனுப்பி உள்ளான்.
பு: கிராதகா என்ன உளருகிறாய்?
அ: இதோ பாருங்கள் SMS.. இப்போது என்ன செய்வது?
பு: ம் ம்... பேசாமல் மெசேஜ் சென்டிங் பெயில் என்று ரிப்ளை அனுப்பும், அனுப்பி தொலையும்.
அ. அருமையான யோசனை மன்னா!

- துர்கா, யாழ்ப்பாணம்

## பேஸ்புக் செட்



boy - ஹாய்
girl - ஹாய்
boy - உங்க இமெயில் அட்ரசை தரமுடியுமா?
girl - ஹா எழுதிக்கோ...
'எனக்கு போய் பிரண்ட் இருக்கு. எனக்கு அவரை பிடிக்கும் நீ மரியாதையா தொலைஞ்சு போ. கொம்'
boy - அப்படியா என்னுடைய மெயிலையும் எழுதிக்குங்க...
'நான் உன் அப்பா நீ இன்றைக்கு தொலைஞ்ச இரு வீட்டுக்கு வாரேன். கொம்'

- எஸ்.ஏ.சி.இஸ்திக்கான்



லவ்னா வெள்ளத்தில் மாட்டிக்கிற மாதிரி... தப்பிக்க 75% சான்ஸ் இருக்கு. ஆனா கல்யாணம் என்பது சுனாமியில் மாட்டிக்கிற மாதிரி. தப்பிக்க 100% சான்சே இல்ல! பி.கேர்ப்!! புல்

- பெயர் சொல்ல மறந்தவர்



காதலிக்கும் போது குழந்தையாக இரு. அப்போதுதான் அவள் ஏமாற்றும் போது சிரித்துக் கொண்டு இருக்கலாம்.

- M.Fasha, தர்காநகர்.



டீ கடைக்காரன் போடாத டீ என்ன டீ?
நைட்டீ!

- ஜே.பாஹிம், Flvth dennawa



சினிமா காதல் ரீலுடா
சீரியல் காதல் போருடா
அதெல்லாம் மணல்வீடுடா
ஒரிஜினல நீ தேடுடா

- கிரிஸ், திகன



அவள் அப்படி ஒன்றும் அழகில்லை
அவள் தங்கைக்கு யாரும் இனிஇல்லை
அவள் அப்படி ஒன்றும் கலரில்லை
but
அவள் அக்காவை போல் பிகரில்லை

- வினோத், மட்டக்களப்பு



அமைச்சர்: மன்னா நாட்டில் பஞ்சம் தலை வரித்து ஆடுகிறது!
மன்னர்: அப்படியா ரிப்பனை கட்டிக்கொண்டு ஒழுங்கா ஆடச் சொல்லுங்கள்

- ஐ.எம்.பஸ்லீம், நாச்சியாதீவு



என்னைத் தெரிகிறதா?

விக்ரம்



காரணத்தோடு யாரையும் நேசிக்காதே
காரணமின்றி யாரையும் வெறுக்காதே...
இரண்டுமே உன்னை காயப்படுத்தும்.

- அமுதா, ஹாலிஎல



சினம் கொண்ட சிங்கத்தை ஒரு பிளாஸ்டிக் கவரில அடைக்க முடியுமா முடியும் எப்படி தெரியுமா....?
வந்து என் ஐடின்டி கார்டை பாருங்க....
ஹீ... ஹீ...

- உபிரேம்



பிரண்ஷிப் என்பது உடம்பில் உள்ள மச்சம் மாதிரி சாகும் வரை போகாது...
but லவ் என்பது கேன்ஷர் மாதிரி சாகடிக்காமல் போகாது...

- பி. நிஷா

ஐ லவ் யூடா, உன்னைப் பார்க்காம இருக்க முடியலை! உங்க கிட்ட பேசனும் போல இருக்கு! உன்னை நான் மிஸ் பண்ணிடுவேன்னு பயமா இருக்கு! ஐ லவ் யூ ஐ லவ் யூடா. 1000 உண்மையாடா! இப்படித்தான் டெய்லி அனுஷ்கா எஸ்.எம்.எஸ் அனுப்புறா! என்ன பண்றது அழகா பொறந்தாலே இதுதான் தொல்லை. உங்களுக்கு என்னப்பா...
நீங்க தப்பிச்சீங்க.... கூல்... கூல்... கூல்...

- ஏ.என்.ரிப்பா, வாழைச்சேனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலிக்க நேரமில்லை ஸ்ரீதர்



திரும்புமுனைத் திரைப்படங்களை எடுத்து நீங்காப் புகழ் பெற்றவர்கள் வரிசையில் ஸ்ரீதர் பெயர் நிரந்தரம். நிறைய வசனங்கள், நிறைய பாடல்கள், செயற்கைத் தனமான காதல், நடிப்பு என்று நகர்ந்து கொண்டிருந்த தமிழ் சினிமாவில் புரட்சிகரமான கதைகளையும், யதார்த்தமான நடிப்பையும், வித்தியாசமான கோணங்கள் மற்றும் சிந்தனைகளையும் புகுத்தி, ரசிகர்களுக்கு புது அனுபவங்களைத் தந்தவர் டைரக்டர் ஸ்ரீதர்.

நடிகராக வேண்டும் என்ற இலட்சியத்துடன் சென்னை வந்தவர்தான் ஸ்ரீதர். பள்ளி காலத்தில் இருந்தே நாடகம் என்றால் அவருக்கு உயிர். செங்கல்பட்டு சப்-ரிஜிஸ்டர் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த அவர் அலுவலக ஆண்டு விழாவில் நாடகம் ஒன்றை மேடையேற்றினார். அது சூப்பர் ஹிட்டாகிவிடவே வேலையில் கவனம் செல்லவில்லை. இதனால் பிரச்சினை எழ, வேலையை ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று.

அவர் கையில் 'இரத்த பாசம்' கதைக் கருத்துடன் சென்னைக்கு 1950ம் ஆண்டு தனது 19வது வயதில் வந்தார். அந்தக் கதையை பலர் ஏற்கவில்லை. டி.கே.சண்முகம் மட்டும்தான் அதை வாங்கிப் படித்து சில திருத்தங்களைச் சொல்லி வசனம் எழுதித் தரச் சொன்னார்.

அதன் பின்னர் அவர் பட வாய்ப்புகள் [illegible], மாமன்மகள், மகேஸ்வரி, அமரதீபம், உத்தமபுத்திரன் ஆகியவற்றுக்கு கதை வசனம் எழுதினார். அவர் இயக்கிய முதல் படம் கல்யாணப்பரிசு. அது அவரை சிறந்த ஆளுமை கொண்ட இயக்குநராக அறிமுகப்படுத்தியது.

கலைக்கோவில், பனித்திரை, நெஞ்சில் ஓர் ஆலயம், காதலிக்க நேரமில்லை, [illegible] என வித்தியாசமான, சமூக பிரச்சினைகளையும் காதலையும் வேறு பட கோணத்தில் தந்தவர் ஸ்ரீதர். 'வெறும் கதைகளை' படமாக்காமல், சிறந்த சிறுகதைகளை அருகில் சினிமாவாக்கித் தேவையான மாற்றங்களுடன் உணர்ச்சி மிக்க காட்சிகளுடன் எடுப்பதே சரியான அணுகுமுறை என்று இவர் கூறியிருக்கிறார்.

நெஞ்சில் ஓர் ஆலயம் எப்படி அவருக்கு பெயர் பெற்றுத் தந்ததோ அதே போல காதலிக்க நேரமில்லையும் அவருக்கு பெரு வெற்றியைத் தந்து, புகழின் உச்சத்துக்கே அவரைக் கொண்டு சென்றது. காதலிக்க நேரமில்லை இன்றளவும் பேசப்படும் ஒரு நகைச்சுவைப் படம். இன்றைய தலைமுறையினரும் இதை ரசிக்கலாம். இளமையும் நகைச்சுவையும் (யாரையும் புண்படுத்தாதது) பொங்கி வழிந்த இந்தப் படம் வெள்ளிவிழா கொண்டாடியது.

1964ம் ஆண்டு வெளியான இப்படத்தை விமர்சனம் செய்திருந்த தமிழக பத்திரிகைகள் ஆஹா! ஓஹோ! எனப் புகழ்ந்து தள்ளியிருந்தன.

"புதுப்புது முயற்சிகள் செய்யும் ஸ்ரீதரின் மற்றொரு சாதனைப் படம். படம் பிரமாதம். இரண்டரை மணிநேரம் ஒரு இடத்திலும் 'போர்' அடிக்காமல் வயிறு குலுங்க குலுங்கச் சிரிக்கும்படி இந்த மாதிரி ஒரு படம் தமிழில் இதுவரை வந்ததே இல்லை" என ஆனந்த விகடன் தன் விமர்சனத்தில் குறிப்பிட்டிருந்தது.

## அரசியலமைப்பின் 13வது...

(21ஆம் பக்கத் தொடர்)

ஆகவே நீர்ப்பாசன மறு சீரமைப்பு திட்டங்கள் வட பகுதி விவசாய அபிவிருத்தியிலே முக்கிய இடத்தை பெறுகின்றன. இதற்காக வட பகுதியில் பிரதான 24 செயற்திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டு வருகின்றன. மன்னார் மாவட்டத்தில் ஆக்கத்தி முறிப்பு, பாவற்குளம், வவுனியா மாவட்டத்தில் யோதவாவி போன்ற செயற்திட்டங்கள் நன்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு 30 ஆண்டுகால போரினால் பிடிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக பொருளாதார, சமூக, கலாசார அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கு புறம்பாக அரச இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணும் பொருட்டு 13க்கு அப்பால் நகர்விற்காக சர்வதேச உறவுகளையும் வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இலங்கையின் இனப்பிரச்சினை தற்போது என்றும் இல்லாதவாறு சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்விவகாரத்தில் இந்தியாவின் பங்கு மிக முக்கியமானதாகும். ஆகவே இந்தியாவுடனான நேச உறவுகளை வலுப்படுத்தி அதன் பங்களிப்பினை பெற்றுக் கொள்ளவும் அரசு பல்வேறு முயற்சிகளை மேற் கொண்டதை நாம் கடந்த கால சம்பவங்களின் போது கண்டோம். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவின் விஜயம் முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமின் விஜயம், இந்திய பாராளுமன்ற தூதுக் குழுவின் விஜயம் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

முடிவாக இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதில் உள்ள ஒரு யதார்த்தத்தினையும் நாம் விளங்கிக் கொள்ளுதல் அவசியம். இப்பிரச்சினை நீண்ட காலமாக அதாவது எமது வரலாறு முழுவதும் பரிணாமம் அடைந்து இன்றுள்ள நிலையை அடைந்திருக்கிறது. ஆகவே இப்பிரச்சினைக்கு சடுதியாக ஒரு தீர்வினை பெற்றுக் கொடுப்பது கடினமானதாகும். மாறாக அத்தீர்வு படிப்படியாக இலங்கையின் சமூக பரிணாம வளர்ச்சியுடன் பல்வேறு கட்டங்களாக மேற்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

பரந்த அடிப்படையிலான கலந்துரையாடல்களும். இரு தரப்பினரிடையே ஏற்படும் புரிந்துணர்வும் பரஸ்பர நம்பிக்கையும் நிரந்தரத் தீர்வு ஒன்றுக்கான பரந்த அடிப்படையாக அமையும்.

## ஒலிம்பிக் போட்டிகள்...

(03ஆம் பக்கத் தொடர்)

**1984ஆம் ஆண்டு - லொஸ் ஏஞ்சலிஸ்**

இப்போட்டிகளின் போது அமெரிக்காவின் கறுப்பு இன வீரரான கார்ல் லூயிஸ் 100 மீட்டர் 200 மீட்டர் ஓட்டப் போட்டிகள், நீளம் பாய்தல் மற்றும் 4x100 அஞ்சலோட்டப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்று புகழ் பெற்றார். 1936ஆம் ஆண்டு பேர்லினில் நடைபெற்ற போட்டியில் அமெரிக்க வீரர் ஜெஸி ஓவன்ஸ் தங்கப் பதக்கம் வென்ற அதே போட்டி அம்சங்களில் கார்ல் லூயிஸ் 1984ஆம் ஆண்டு லொஸ் ஏஞ்சலீஸ் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

**1988ஆம் ஆண்டு - சியோல்**

1988 சியோல் போட்டிகளில் கனேடிய குறுந் தூர கறுப்பு இன ஓட்ட வீரர் பென் ஜொன்சன் 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 9.79 செக்கன்களில் முதலிடம் பெற்றார். பிரபல அமெரிக்க வீரர் கார்ல் லூயிஸ் இரண்டாம் இடத்துக்கு தள்ளி இப்போட்டியில் உலக சாதனையை நிலைநாட்டினார். ஆனால் இவரது புகழ் ஒரு நாள் மட்டுமே நீடித்தது. அன்றைய தினம் எடுக்கப்பட்ட சிறுநீர் மாதிரி சோதனையில் அவர் ஊக்க மருந்து எடுக்கப்பட்டமை உறுதிப் படுத்தப்பட்டதையடுத்து பென் ஜொன்சனின் வெற்றி அவரிடமிருந்து அடுத்த நாள் பறிக்கப்பட்டது.

**2008ஆம் ஆண்டு - பீஜிங்**

ஜமேக்காவை சேர்ந்த ஓட்ட வீரர் உசேய்ன் போல்ட் 9.69 செக்கன்களில் 100 மீட்டர் ஓட்டத்தையும் 19.30 செக்கன்களில் 200 மீட்டர் ஓட்டத்தையும் 37.10 செக்கன்களில் 4X100 மீட்டர் அஞ்சலோட்டத்தையும் உலக சாதனை நேரங்களில் ஓடி புகழ் பெற்றார்.

ஒரே ஒலிம்பிக் போட்டியில் மூன்று உலக சாதனைகளை நிலைநாட்டிய ஒரே வீரராகவும், 100 மற்றும் 200 மீட்டர் ஓட்டப் பந்தயங்களில் ஒரே நேரத்தில் ஒலிம்பிக் மற்றும் உலக சாதனைகளை நிலைநாட்டிய ஒரே வீரரும் இவரேயாவார்.

100 மீட்டர் ஓட்டத்தில் 9.58 செக்கன்கள் 200 மீட்டர் ஓட்டத்தில் 19.19 செக்கன்கள் என்ற ரீதியில் தற்போதைய உலக சாதனைகளுக்கும் இவரே சொந்தக்காரராவார்.

## பெண்கள் அதிகளவில்...

(10ஆம் பக்கத் தொடர்)

காயத்தைச் சுற்றியுள்ள தோல் காயம்பட்ட இடத்தை நோக்கி இழுக்கப்படுகிறது. இது தோல் இழுபட்ட ஒரு நிலையை, விகாரத் தோற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது. இச் சந்தர்ப்பத்தில்தான் நோயாளி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தீக்காயம் ஏற்பட்டு அவை குணமான பின்னர் பலர் எல்லாம் சரி என்று கருதி சும்மா இருந்து விடுவார்கள். இந்த அலட்சியத்தால் தான் அவர்களின் உடம்பில் தீத்தழும்புகளும், தோல் இழுபட்டுப் போன தோற்றமும் ஏற்படுகின்றன. தீக்காயங்களின் ஆழம், அதன் தீவிரத் தன்மையை கணக்கில் கொண்டு, மருத்துவர்கள் நோயாளர்களுக்கு ஆலோசனை வழங்குவார்கள். ஏனெனில் காயங்கள் ஆறும் போதுதான் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மருத்துவர்கள் விசேட ஆடை அல்லது ஒரு வகை பண்டேஜ் என்பனவற்றை உபயோகிக்கச் சொல்வார்கள். பாதிக்கப்பட்ட இடத்தை இது கெட்டியாகப் பற்றிக் கொள்வதால் புதிதாக உருவாகும் இழையங்கள் முறையாக உருவாகி வளர்ச்சி அடையும். சில பயிற்சிகளையும் செய்யச் சொல்வார்கள். இது நடைபெறுவதற்கு ஒன்றரை ஆண்டு முதல் இரண்டாண்டு காலம் வரை எடுக்கலாம். மருத்துவ ஆலோசனைப்படி நடந்து கொண்டால் வீங்குவது, தோல் சுருங்குவது, இழுபட்டு போவது போன்றவற்றை நோயாளர்கள் தவிர்க்க முடியும்.

எனவே நோயாளர்கள் காயம் குணமான பின்னரான சிகிச்சையின் போதே கவனமாக இருக்க வேண்டும் என்பது முக்கியம். அப்போதுதான் முற்றிலும் குணம் என்ற நிலைமை அடைய முடியும். தீக்காயம் ஏற்படும் போது நேரடியாக பாதிக்கப்படும் செல்கள் எரிந்து போகின்றன. இறந்து போகின்றன. அதற்கு அடுத்ததாக உள்ள பகுதியில் உள்ள செல்கள் பாதிக்கப்படுகின்றன. அதற்கு அப்பால் உள்ள பகுதி சிவந்து காணப்படும். காயம் பெரிதாகவும் ஆழமாகவும் காணப்படும் போது அதற்கான குணமாகும் காலமும், சிகிச்சை முறைகளும் வேறுபடுகின்றன. தீக்காயங்கள் மோசமடைவதற்கு நமது அறியாமையே காரணமாகின்றது என்பதை மறந்துவிட வேண்டாம்.

இவ்வாறு தீக்காயங்கள் பற்றி விரிவாகப் பேசி முடித்தார் கொழும்பு தேசிய வைத்தியசாலை தீக்காயங்களுக்கான மருத்துவர் இஸட்.எம்.ஹாஜித்.

## தோட்ட டிஸ்பென்சரி...

(07ஆம் பக்கத் தொடர்)

நோயின் ஆரம்ப கட்டத்திலேயே நோயாளர்கள் ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்படாத சந்தர்ப்பங்களில் துரைமார் மற்றும் கங்காணிமார் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் ஏற்பாடு சட்டத்தில் இருந்தபோதிலும், அது நடைமுறை சாத்தியமற்றது என்பதால் மாற்று வழி பற்றி யோசிக்க வேண்டிய தேவை உணரப்பட்டது.

இந்த அடிப்படையில் இவ்வாணைக்குழு புதிய யோசனையை முன்வைத்தது. இதன் பிரகாரம் ஒவ்வொரு தோட்டமும் அல்லது சில தோட்டங்கள் ஒன்றிணைந்து தத்தமது தோட்டங்களில் டிஸ்பென்சரி ஒன்றை நிறுவ வேண்டும். ஒரு மருத்துவரை இதற்கு பொறுப்பாக நியமனம் செய்து அவருக்கு தோட்ட செலவில் சம்பளம் வழங்க வேண்டும். இந்த டிஸ்பென்சரிக்கான மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை அரசாங்கமே தனது மருத்துவ உதவி நிதியில் இருந்து வழங்கும். மொத்தச் செலவு அரசாங்கம் மற்றும் தோட்ட உரிமையாளர் ஆகிய இரு பிரிவினராலும் பகிர்ந்து கொள்ளப்படும். என்று இணக்கம் காணப்பட்டது. இந்த ஏற்பாட்டை தோட்ட உரிமையாளர் தரப்பு ஏற்றுக்கொண்டது.

இந்த புதிய நடைமுறை தோட்ட நிர்வாகங்களுக்கு அதிக செலவை ஏற்படுத்துவதாக இருக்கவில்லை. மேலும் இத்திட்டம் பரீட்சிக்கப்பட்டதில் இது நடைமுறைச்சாத்தியமானது என்பது கண்டறியப்பட்டது.

தோட்டங்களில் டிஸ்பென்சரி முறை இவ்வாறே தோற்றம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஒலிம்பிக் தங்க பதக்கக் கனவு: கானல் நீரை நோக்கிய நீண்ட ஓட்டம்!


சுசந்திகா ஜயசிங்க

இரா. மகேஸ்வரன்

உலகெங்கும் உள்ள எல்லா விளையாட்டு ஆர்வலர்களும் இம்மாத ஒலிம்பிக் போட்டிகளுக்காக மிகுந்த எதிர்பார்ப்புகளோடு காத்திருக்கின்றனர், ஏன், நீங்களும் நானும் கூடத்தான்.

இம் முறை லண்டனில் ஜூலை 27முதல் ஆகஸ்ட் 17 வரை இந்த ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதை உலக விளையாட்டுத் திருவிழா என்றழைப்பதுதான் மிகப் பொருத்தம்.

உலக நாடுகள் முழுவதிலுமிருந்து சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கூடும் இடமாக இப் போட்டி விளங்குகிறது. இன்று நாடுகளின் அபிவிருத்தியினை நிர்ணயிப்பதில் விளையாட்டு தொடர்பான தரவுகளும் ஆராயப்பட வேண்டும் என பொருளியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தலா வருமானம், கல்வி நிலை, சுகாதார நிலை, பொதுவசதி காரணிகள், போக்குவரத்து வசதிகள், வேலை வாய்ப்பு ஆகியவற்றுடன் விளையாட்டு துறை வளர்ச்சியும் கணக்கில் கொள்ளப்படுகிறது. உலக நாடுகள் தமது ஒட்டு மொத்த வளர்ச்சியை வெளிப்படுத்தும் களமாக ஒலிம்பிக் போட்டி விளங்குகிறது. ஒலிம்பிக்கில் பெறும் வெற்றிகள் அந்தந்த நாடுகளின் வளர்ச்சியைக் காட்டுவதாகவே கொள்ளப் படுகிறது. வளர்ந்த ஒரு நாடு ஒலிம்பிக்கில் பின்னடைவை சந்தித்தால் அது அந்நாட்டில் ஒரு பாரிய குறைபாடு, நிலவுவதாகவே பொருள் கொள்ளப்படுகிறது. எனவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் இதில் கவனம் செலுத்துகின்றன.

இப் பின்னணியில் எமது இலங்கையின் நிலை என்ன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இலங்கை 1948ம் ஆண்டு முதல் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றி வந்துள்ளது. ஒலிம்பிக் வரலாற்றில் புராதன ஒலிம்பிக் நடைபெற்றது பற்றி நிறைய தகவல்கள் உள்ளன. நவீன ஒலிம்பிக் அதாவது எழுதப்பட்ட சட்டதிட்டங்களை உருவாக்கி அவற்றை நாடுகள் ஏற்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர் முதல் ஒலிம்பிக் போட்டி 1896ம் ஆண்டு ஏதென்ஸில் நடைபெற்றது. அன்றிலிருந்து ஒவ்வொரு நான்கு வருடத்திற்கு ஒரு முறை ஒலிம்பிக் போட்டி நடைபெற்று வருகிறது. இந்த ஒலிம்பிக் போட்டியை சர்வதேச ஒலிம்பிக் சபை (IOC) நடத்துகிறது. இந்த சர்வதேச ஒலிம்பிக் சபையின் (IOC) தேசிய ஒலிம்பிக் சபைகள் (NOC) அந்தந்த நாடுகளில் உள்ளன. இந்த சபைகளே அந்தந்த நாட்டு ஒலிம்பிக் வீரர் தெரிவுகளுக்கு பொறுப்பாளிகள். இந்த தேசிய ஒலிம்பிக் சபையின் கீழ் ஒவ்வொரு விளையாட்டு சம்மேளனமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம், இலங்கை ஹொக்கி சம்மேளனம் ஆகியன இத்தேசிய ஒலிம்பிக் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ளன. இச் சம்மேளனத்தின் வாக்கு பலத்தின் மூலம் தேசிய ஒலிம்பிக் சபை தெரிவுகள் நடைபெறுகின்றன.

இலங்கை தேசிய ஒலிம்பிக் சபை 1937ம் ஆண்டு நிறுவப்பட்டது. உலக நாடுகளின் ஒலிம்பிக் சபையும் தேசிய ஒலிம்பிக் சபைகளும் எந்தவித அரசியல், ஆட்சி தலையீடுகளுமின்றி இயங்க வேண்டும் என்பது முக்கியமான அம்சம்.

ஆனால் இலங்கையிலும் சில நாடுகளிலும் நிலமைகள் சற்று வித்தியாசமானவை. இலங்கை விளையாட்டு அமைச்சும், தேசிய ஒலிம்பிக் சபையும் இரண்டு முனைகளிலிருந்து சமச்சீராக இயங்கும் நிறுவனங்களாகவுள்ளன. இலங்கையின் விளையாட்டுத்துறை சட்டத்திற்கமைய சகல சம்மேளனங்களும் இலங்கை விளையாட்டு அமைச்சில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மறுமுனையில் தேசிய ஒலிம்பிக் சபையிலும் பதிவு செய்யப்பட வேண்டும். தேசிய ஒலிம்பிக் கமிட்டி விளையாட்டு வீரரை தெரிவு செய்தாலும் அந்தந்த விளையாட்டு வீரர்களை அந்த விளையாட்டுக்கான சம்மேளனம் தெரிவு செய்தாலும் இறுதியில் விளையாட்டு அமைச்சரின் அனுமதிபெற்றே இலங்கை சார்பாக சர்வதேச போட்டியொன்றில் பங்குபற்ற முடியும். இந்த சட்டம் நிர்வாகிகளையும் பயிற்றுனர்களையும் உள்ளடக்குகிறது.

அது போலவே இலங்கை விளையாட்டு சம்மேளனங்கள் தேசிய குழுவினை தெரிவு செய்யுமுகமாக ஒரு தெரிவுக்குழுவை நியமிக்க முடியாது. அமைச்சரின் அங்கீகாரத்துடனேயே விளையாட்டு அமைச்சு தெரிவுக்குழுவை நியமிக்கும். இதற்கான சகல அதிகாரங்களும் விளையாட்டு அமைச்சருக்கு உண்டு. அது போலவே தேசிய வீரர்கள் சர்வதேச போட்டியில் பங்குபற்று முன் விளையாட்டு அமைச்சின் உடற்பயிற்சி சோதனை (Fitness Test)க்கு முகம் கொடுக்க வேண்டும்.

தனித்தனியே வீரர்களது மூச்சுத்திறன், நின்று பாய்தல், ஓடிப் பாய்தல், நேரத்தில் ஓடல், குறுந்தூரத்தின் நேரகணிப்பீடு, நீண்ட தூரம் (200 மீட்டர்) ஓட்ட நேர அளவீடு ஆகியன சோதனையிடப்பட்டு தேசிய குழுவில் பங்குபற்ற தகுதியானவர் என்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

இவ்வாறு ஒருபுறம் விளையாட்டு அமைச்சும் மறுபுறம் ஒலிம்பிக் சபையும் வீரர்களை தெரிவு செய்கின்றன. ஆனால் விளையாட்டு அமைச்சின் கட்டுப்பாட்டிலேயே சகல தேசிய விளையாட்டு குழுக்களும் உள்ளன. எனவே இலங்கையில் விளையாட்டு அமைச்சு சகலதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது. ஏனைய நாடுகளில் இந்த முறை பின்பற்றப்படுவதில்லை. அவை சுயமாக இயங்கும் அரசசார்பற்ற நிறுவனமாகவே உள்ளன.

1948 முதல் இலங்கை ஒலிம்பிக்கில் பங்குபற்றத் தொடங்கியதில் இருந்து இன்று வரை தங்கப் பதக்கமொன்றைப் பெறவில்லை. வெண்கலப்பதக்கமும் வெல்லவில்லை. இரண்டு வெள்ளி பதக்கங்களை மட்டுமே இலங்கை வென்றிருக்கிறது.

எனவே இலங்கை விளையாட்டுத்துறைக்கு என்ன நடந்துள்ளது என்ற கேள்வி இங்கு எழுகிறது. அமெரிக்காவும், ரஷ்யாவும் தங்கப் பதக்கங்களுக்காக போட்டியிடுகின்றன. இலகுவாக 40 தங்கப்பதக்கங்களை எட்டிப் பிடிக்கின்றன. மிகவும் பின்தங்கிய சோமாலியா மற்றும் தென் ஆபிரிக்கா நாடுகள் பல பதக்கங்களை வெற்றி கொள்கின்றன. ஆனால் இலங்கையின் நிலை கொஞ்சமும் முன்னேற்றம் கண்டதாகத் தெரியவில்லை!

இலங்கை அணிகள் ஓட்டப் போட்டி, குத்துச் சண்டை, நீச்சல், பாரம் தூக்குதல், மல்யுத்தம், பெட்மின்டன், குறிபார்த்து சுடுதல் ஆகிய போட்டிகளில் மட்டுமே பங்குபற்றியுள்ளன. ஏனைய துறைகளை எடுத்துக் கொண்டால் தகுதிகாண் போட்டிக்கே தெரிவாகாத நிலையே காணப்படுகிறது.

இலங்கைக்கு முதன் முதலில் வெள்ளிப் பதக்கத்தை பெற்றுத் தந்தவர் டங்கன் வைட். கண்டி திருத்துவக் கல்லூரியை சேர்ந்த டங்கன் வைட் 400 மீட்டர் தடைதாண்டும் ஓட்டத்தின் மூலம் இப்பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தார். இது 1948ம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வு. ஓட்டப் போட்டிக்காக டங்கன் வைட், ஜே.பீரிஸ் ஜோண்டி சேரம் ஆகியோரும், குத்துசண்டைக்காக எட்டி கிரே, லெஸ்லி அதுன்கே, எலெக்ஸ் ஒபயசேகர, எல்பட் பெரேரா ஆகியோரும் அந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டனர்.

அதன்பின் ஒவ்வொரு ஒலிம்பிக் போட்டியிலும் இலங்கை கலந்து கொண்டது. 1971ம் ஆண்டில் மட்டும் இலங்கையிலிருந்து ஒருவரும் பங்குபற்றவில்லை. இதன் பின் 2000ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா சிட்னிநகர் ஒலிம்பிக்கில் 200மீட்டர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றிய சுசந்திகா ஜயசிங்க மூன்றாம் இடத்தைப் பெற்றார். முதலிடம் பெற்றவர் ஊக்க மருந்து பரிசோதனையில் சிக்கிக் கொண்டதால் இரண்டாம் இடத்தை பெற்றவர் முதலிடத்துக்கும் மூன்றாம் இடத்தைப் பெற்ற சுசந்திகா இரண்டாம் இடத்துக்குமாக இடம் மாற்றப்பட்டனர். சுசந்திகாவுக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. இவை தவிர வேறு பதக்கங்கள் இலங்கைக்கு கிடைக்கவில்லை. இம்முறை ஐந்து பேர் மட்டும் லண்டன் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளனர்.

அனுருத்த இந்திரஜித் குரே (மரதன் ஓட்டம்) மங்களா சமரகோன் (குறி பார்த்து சுடல்) ஹேசான் உனம்போவ (நீச்சல்), ரேசிகா உடுகம்பொல (நீச்சல்) நிலூகா கருணாரட்ன (பெட்மின்டன்) ஆகியோர் மட்டுமே தெரிவாகியுள்ளனர்.

இத்தகைய பின்னடைவை ஏன் நம்நாடு அடைந்திருக்கிறது என்பதை கொஞ்சம் பார்ப்போம்.

1. அரசியல் தலையீடு. இது தெரிவுக் குழு தெரிவு முதல், தெரிவுகளை அங்கீகரிக்கும் வரை செல்வாக்கு செலுத்துகிறது.

2. போதிய பயிற்சியின்மை. எமது நாட்டில் திட்டமிட்ட செயற்பாடுகள் இல்லை. சிறுபராயம் முதல் தொடர்ச்சியானதும் முறையானதுமான பயிற்சித் திட்டம், குறுகிய கால பயிற்சித் திட்டம் என்பன கிடையாது. சீனா, ஜப்பான், கொரியா, பெல்ஜியம், ஜேர்மன், ஸ்பெயின், ஆர்ஜென்டினா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் 2016, 2020 ஒலிம்பிக் போட்டிகளுக்கு இப்போதிருந்தே குழுக்களைத் தெரிவு செய்து பயிற்சியளித்து வருகின்றன. பயிற்சி பெறுவோரின் உடற் பயிற்சி, உணவு, சுகாதார நிலை, பார பயிற்சி, உடற்கட்டமைப்பு பயிற்சி, பொழுது போக்கு, நித்திரை, மருத்துவம் ஆகியவற்றை கூர்ந்து கவனித்து ஆவன செய்வதற்கென தனித்தனி பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பயிற்சியாளர் ஒரு வீரரது தந்தையாகவும், தாயாகவும், நண்பனாகவும் இருத்தல் அவசியம். ஒரு வீராங்கனையின் மாதவிடாய் தினங்களை பயிற்றுவிப்பாளர் அறிந்திருத்தல் வேண்டும். அந்நாளில் போட்டி வருமாயின் மாத்திரை மூலம் மாதவிடாயை முன், பின் தள்ளி வைக்க முடியும். அதிக பயிற்சி ஆபத்தானது. இதை சிறு நீரின் நிறம் பார்த்து அறியலாம். எனவே உடல் ஆரோக்கியம் அல்லது திட காத்திரமானது உடல் என்பது முக்கியமானது. இலங்கையில் இவை பூரணமாகக் கருத்திற் கொண்டு பயிற்சி வழங்கப்படுவதில்லை. நீண்டகால பயிற்சி திட்டங்கள் இல்லை.

3. பயிற்சியையும், திறமையையும் அளவிடும் நவீன உபகரணங்கள் இல்லை.

4. ஒலிம்பிக் அல்லது தெரிவு போட்டி நடைபெறவுள்ள சூழல், காலநிலை, என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த புவியியல் காரணிகளுக்கேற்ற இடம் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட வேண்டும். சுகததாச மட்டுமே தேசிய போட்டிக்கு ஏற்ற மைதானம். எனவே வேறு இடங்களில் செயற்கை தரை மைதான வசதி இல்லை.

5. வெளிநாட்டு பயிற்சியாளர்கள் பெற்றுத் தரப்படுவதில்லை.

6. வெளிநாடுகளுக்கு அனுப்பி பயிற்சி வழங்கப்படுவதில்லை. ஏனெனில் ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்ற பயிற்சியாளர் இல்லை. அனுபவம் போதுமானதாக இல்லை.

7. தெரிவில் குழறுபடி. சிறுவயது முதல் தெரிவுகள் நடைபெற வேண்டியது அவசியம்.

8. போதியளவு போட்டிகள் உள்நாட்டில் நடைபெறுவதில்லை.

9. சர்வதேச போட்டிகள் சகலவற்றிலும் பங்குபற்றும் வாய்ப்பு இல்லாமை. போதிய நிதி வசதியின்மை.

10. விளையாட்டு சம்மேளனங்களுக்கு அனுசரணையாளர்கள் இல்லாமை.

11. அனுசரணையாளர்களை பெற்றுக் கொள்ளக்கூடிய தகுதியான நிர்வாகிகள் சம்மேளனத்தில் இல்லாமை.

12. கிராமத்து வீரர்களுக்கான தெரிவுப் போட்டிகள் இல்லாமை. ஓரங்கட்டல், பக்க சார்பு போன்ற பாகுபாடு.

13. ஆய்வுகள் இல்லாமை.

எனவே இவற்றை சரிசெய்ய அரசாங்கம் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக இத்துறை சார்ந்தவர்களது நிபுணத்துவமும் வெளிநாட்டு நிபுணத்துவமும் பெறப்பட வேண்டும். இங்கு விளையாட்டு, உடற்கல்வித் துறை ஆகிய பிரிவுகளில் பல்கலைக்கழக பீடங்கள் இல்லை.

எனவே 1948இல் ஆரம்பமான ஒலிம்பிக் தங்கப்பதக்கத்துக்கான இலங்கையின் ஓட்டம், இன்னும் கால்வாசிக் கிணறு தாண்டாத நிலையில்தான் உள்ளது. இன்னும் நீண்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கும், இலங்கை விளையாட்டுத் துறையில் பாரிய மாற்றங்களை கொண்டு வந்தாலும் கூட!


டங்கன் வைட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு: கொசு வலையே சிறந்தது

டெங்கு நோயின் அபாயம் முன்னெப்பொழுதையும் விட இப்போது பெருமளவு அதிகரித்துள்ளது. கடந்த 3 மாத காலத்தில் மட்டும் டெங்கு நோயால் ஆயிரக்கணக்கானோர் பீடிக்கப்பட்டதாகவும் அதில் 80பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் பத்திரிகைகள் கூறுகின்றன.

டெங்கு நோயாளர்கள் நாட்டில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் நிரம்பி வழிவதாகவும், டெங்கு நோய்க்கு காரணமாகும் கொசுக்கள் உற்பத்தியாகும் வகையில் தமது வீடுகளின் சுற்றுப் புறங்களை வைத்திருப்போருக்கான அபராதம் 5 ஆயிரம் ரூபாவில் இருந்து 50 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அதே பத்திரிகை செய்திகள் கூறுகின்றன.

கொசுக்களை ஒழிப்பதில் நீங்கள் எவ்வளவுதான் அக்கறை எடுத்துக்கொண்டாலும் உங்கள் அண்டை வீடுகளில் உருவாகும் கொசுக்கள் உங்கள் வீட்டுக்கும் வந்து டெங்கு நோயை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பு உண்டு. எனவே உங்கள் வீட்டிலேயே சரியான பாதுகாப்பை தேடிக் கொள்வதன் மூலமே உங்கள் வீட்டில் இருப்போர் டெங்கு நோயில் இருந்து பாதுகாப்பு பெறுவது உறுதிப்படுத்தப்படும்.



இரவு நேரங்களில் கொசுவர்த்தி மற்றும் சுருள்களை ஏற்றி வைத்தல், கொசுக்களை விரட்டியடிக்கும் இரசாயனங்களை ஆவியாக்கி காற்றுடன் கலக்கவைக்கும் உபகரணங்கள் ஆகியவை வீடுகளில் பெருமளவில் பயன்படுத்தப்படும் முறைகளாகும். ஆனால் கொசுவர்த்தி மற்றும் கொசுவிரட்டி என்பனவற்றில் இருந்து வெளிவரும் இரசாயனப் பொருட்கள் கொசுக்களை விரட்டும் அதே நேரம் உங்கள் சுகாதாரத்துக்கும் பங்கம் விளைவிக்கக் கூடும்.

டெங்கு நோயை உருவாக்கும் கொசுக்கள் தற்போது இரவு நேரங்களில் மட்டுமன்றி பகல் நேரமும் மனிதர்களை கடிப்பதாகவும் அதன் மூலம் டெங்கு ஏற்பட வாய்ப்பு இருப்பதாகவும் டாக்டர்கள் கூறுகின்றனர். எனவே உங்களுக்கு பகல் நேரங்களில் கொசுக்களிடம் இருந்து போதுமான பாதுகாப்பு தருவதற்கு கொசு வலையே மிகவும் உகந்ததாகும். அதாவது பகலில் உறங்கும்போது. சிறுவர்கள் உறங்கும் போது கொசு வலையை எப்போதும் பயன்படுத்தவும்.


உங்கள் தொட்டிலுக்கு அல்லது கட்டிலுக்கு அளவாகவும், படுக்கையறையில் மாட்டுவதற்கு எளிதாகவும், உறுதியானதாகவும், உயர்தர துணி (நெட்டிங்)களினாலும் உருவாக்கப்பட்ட கொசுவலைகள் பல ரகங்களில் இப்போது கிடைக்கின்றன.

உங்களது கட்டிலுக்கும் தொட்டிலுக்கும் அளவாக உங்கள் கொசுவலை அமைய வேண்டும். இடம் போதாத நிலையில் அதனை இழுத்து உங்கள் கட்டிலுக்கு அளவாக போட முயன்றால் சில நேரங்களில் வலைத்துணி கிழிந்து விடும் அபாயம் உண்டு.

எனவே கட்டில் அளவை விட கொஞ்சம் அதிகமாக இருக்கும் வகையில் கொசு வலையை வாங்க மறந்து விட வேண்டாம்.

உங்கள் கொசுவலையை இரண்டு வாரங்களுக்கொரு முறை கழுவுங்கள். கொசு வலையை கழுவும் போது சலவை இயந்திரத்தை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். சலவை இயந்திரம் உங்கள் கொசுவலையை பாதிக்கும். கூடிய வரை கையினால் கழுவவும்.

உங்கள் கொசுவலை நீண்ட காலம் உழைக்க இது முக்கியமாகும்.



நன்றி: தருணி

# விருந்தினர் விரும்பும் பழ அலங்காரம்



பழங்களை கண்கவரும் வகையில் வெட்டியெடுத்து அவற்றை அலங்காரமாக வைத்து வீட்டுக்கு வரும் விருந்தினர்களை வரவேற்கும் பொழுது அவர்களுக்கு ஏற்படும் சந்தோஷத்தை நீங்கள் அவர்கள் முகங்களைப் பார்த்தே அறிந்து கொள்ளலாம். குறிப்பாக பெண்கள் இவ்வகை அலங்காரத்தை பெரிதும் விரும்பவார்கள். ஆண்கள் விரும்புவது மட்டுமன்றி அதில் ஒரு துண்டை எடுத்து வாயில் போட்டு ருசி பார்க்கவும் தவறமாட்டார்கள். பிளாஸ்டிக் பொருட்களுக்கு கொடுக்கும் பணத்தை சாப்பிட்டு மகிழக் கூடிய பழங்களுக்குக் கொடுத்து அலங்காரம் செய்வது எல்லா வகையிலும் உயர்வானதுதான். பழங்களின் மணமே விருந்தினரை மயக்கும்.

**தார்ப்பூசணி**

மேற்தோலை அகற்றிவிட்டு முக்கோண வடிவில் வெட்டி அலங்காரமாக பாத்திரத்தில் அடுக்கி விருந்தினரை வரவேற்கலாம்.

**மாங்காய்**

பழத்தை நன்றாக கழுவி காம்புப் பகுதியை வெட்டி அப்புறப்படுத்தவும். அதன்பின் பழத்தின் பக்கங்களையும் கூரிய கத்தியால் கொட்டையில் இருந்து வேறாக பிரித்தெடுங்கள் நடுப்பகுதி பழத்தை பாற்சோறு துண்டின் வடிவத்தில் ஆழமாக தோல் வெளியே தெரியாதவாறு வெட்டி தோற்பகுதி அடியில் இருக்கும் வகையில் பாத்திரத்தில் அலங்கரித்து விருந்தினரை வரவேற்கவும்.

**தோடம்பழம்**

தோலை முழுமையாக அப்புறப்படுத்திவிட்டு கூரிய கத்தியினால் வட்டமான துண்டுகளால் வெட்டி பாத்திரத்தில் வைத்து வரவேற்கலாம்.

**திராட்சை**


வட்டமான கோப்பையில் சிறிய வட்ட வடிவத்தில் வெட்டப்பட்ட வாழை இலையின் மேல் பச்சை மற்றும் சிகப்பு நிற திராட்சைகளை சிறிய கொத்துகளாக வைக்கலாம்.

**வாழை**

பழத்தின் ஒரு பக்கத்தில் தோலை அகற்றிவிட்டு பழத்தை வட்டமான துண்டுகளாக வெட்டி பாத்திரத்தில் வைத்து வரவேற்பு வழங்கலாம்.

**பப்பாளி**

பழத்தில் ஒரு பகுதியை வெட்டி தோலை அகற்றாமல் துண்டு துண்டாக வெட்டி பாத்திரத்தில் வைத்து அலங்கரித்து விருந்தினரை வரவேற்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலங்குகளின் விந்தை உலகம்



மருத்துவர்
அருந்ததி பொன்னுசாமி
தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை



# துருவ எருமைகள்



எமது மாடுகளின் தூரத்து உறவினர்தான், வட அமெரிக்காவின் துருவப் பகுதிகளில் கடுங்குளிரை சகித்துக் கொண்டு வசித்து வரும் இத்துருவ எருமைகள். ஹட்சன் குடாவின் வடக்கே உள்ள துருவத் தீவுகளிலும் கிறீன்லாந்தின் வட பிரதேசத்திலும் காணப்படும் இவை சுமார் 600 இறாத்தலுக்கும் அதிக எடை கொண்டவை. தோள் உயரத்துக்கு ஐந்தடி உயரத்துடன் சடா முடியுடனும் வகிடெடுத்த மாதிரியான அமைப்பில் கீழ்ப்புறமாக சுருண்டு நிமிரும் கூரிய கொம்புகளுடனும் காணப்படுகின்றன. இத்தோற்றத்தை ஒத்த எருமைகள் ஆபிரிக்காவில் காணப்படுகின்றன.

இவை வாழும் பகுதிகளில் இரவு வேளை நீண்டது. கடுங்குளிர் இரவுகளிலும் இந்த எருமைகள் பனி வனாந்தரங்களில் உறைந்துபோன காளான் வகை தாவரங்களைத் தேடியலையும். உடல் மரத்து உயிரை எடுத்துவிடக் கூடிய குளிர் இந்த எருமைகளை ஒன்றும் செய்வதில்லை. எனவே, ஏனைய குளிர்பிரதேச உயிரினங்களைப் போல இவை இடத்துக்கு இடம் மாறுவதில்லை.

இவை கூட்டம் கூட்டமாக அலைந்து திரியும். எஸ்கிமோக்கள் இவற்றை இறைச்சிக்காகவும் தோலுக்காவும் வேட்டையாடுகிறார்கள். மேலும் வெளியில் இருந்துவரும் வேட்டைக்காரர்களும் இவற்றை சுட்டு வீழ்த்தியதால் இவற்றின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துபோனது.

எஸ்கிமோக்கள் இவற்றைத் தேடிச் சென்று, எருமைக் கூட்டமொன்றைக் கண்டதும் தமது வேட்டை நாய்களை அவிழ்த்து விடுவார்கள். நாய்களை கண்டதும் கொஞ்சதூரம் ஓடிய பின்னர் எதிர்த்தாக்குதலுக்கு தயாராகி விடும். ஆண் எருமைகள் வெளிச்சுற்றில் வட்டமாக நிற்க வட்டத்தின் உள்ளே பெண் எருமைகளும் குட்டிகளும் நிற்கும். இது, இவற்றின் தாக்கும் முறை. துருவ ஓநாய்களை இப்படித்தான் எதிர்க்கும். கூரிய கொம்புகள் ஓநாய்களுக்கு எமனாகி விடுவதுண்டு. நாய்களின் தாக்குதலை சடா முடி பெரும்பாலும் தடுத்து விடுகிறது.

ஆனால் எஸ்கிமோக்களின் துப்பாக்கிகளுக்கு முன் இந்த வியூகம் எம் மாத்திரம்? எனினும் உலகம் இந்தத் துருவ எருமைகளை இன்று பொக்கிஷமாகப் பார்க்கிறது.

## அபூர்வ நட்பு

வெளிநாட்டு விலங்கியல் பூங்காவில் இருந்த தாய் சிம்பன்ஸி இறந்து விடவே குட்டி தனித்து விடப்பட்டது. அதை வீட்டுக்கு எடுத்துச் சென்று வளர்க்க ஆரம்பித்தார் பொறுப்பாளர். அந்த வீட்டு நாய் குரங்குக் குட்டியை எதிரியாக பார்க்கவில்லை. இரண்டும் நண்பர்களாகின. இந்த அபூர்வ நட்பைத்தான் இந்தப் படங்கள் சொல்கின்றன.




# வொல்ரஸ்: வித்தியாசம் விநோதம்

உலகில் காணப்படும் மிருகங்களிலேயே அவலட்சணமான மிருகம் என வொல்ரஸ் என்ற இக்கடல்வாழ் உயிரினத்தை அழைக்கலாம். துருவப் பகுதிகளில் மட்டுமே அக்கருங்குளிரைச் சகித்துக் கொண்டு வொல்ரஸ் வாழ்கிறது. குளிர்பிரதேச மிருகங்களுக்கு, குளிரில் இருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்கு சடை முடி உதவும். இதற்கோ மயிர் கிடையாது. பதிலாக, கடினமான, சுருள் சுருளான தோல் உள்ளது. தவழ்ந்து செல்ல உதவும் கட்டையான, மீன் வாலைப் போன்ற நான்கு கால்கள். சிறிய தலை பருத்த கழுத்து. யானைத் தந்தம் போல இரண்டு பற்கள். மீன்களை உண்டு வாழும் வொல்ரசுக்கு 'அய்விக்' என்றொரு பெயரும் உண்டு. எஸ்கிமோர்கள் அப்படித்தான் இதை அழைக்கிறார்கள். நமக்கு மாடுகள் எப்படியோ அப்படித்தான் இது எஸ்கிமோர்களுக்கு!

இதைக் கடல்வாழ் மிருகம் என்றுதான் அழைக்க வேண்டும். எஸ்கிமோக்கள் இதை வேட்டையாடி வாழ்கிறார்கள். மாமிசம் உணவுக்கும், கொழுப்பு சமையலுக்கும், எரிக்கவும், விளக்கு கொளுத்தவும், பற்கள் வேட்டை ஆயுதமாகவும், காலணி, கூடாரம், படகு தயாரித்தல் போன்றவற்றுக்கு தோலும் பயன்படுத்தப்படுகிறது. அலஸ்கா முதல் சைபீரியா வரையிலான கடற் பரப்பில் பெருவாரியாகக் காணப்படும் இவை, ஐஸ்பாறைகளின் மீதே வாழ்க்கை நடத்துகின்றன. பெண் வொல்ரஸ் ஒரு தடவையில் ஒரு குட்டியை மட்டுமே பிரசவிக்கும். சுமார் மூவாயிரம் இறாத்தல் எடை கொண்ட இவை பனிப்பாறைகளை உடைத்துக் கொண்டு கடலில் மூழ்கி உணவைத் தேடித் தின்கின்றன.

மனிதனின் வேட்டைப் பசிக்கு ஆளாகியதால் இதன் எண்ணிக்கை இன்று குறைந்து விட்டது. இதை வேட்டையாடும் வேட்டைக்காரர்கள் பெருத்த இலாபத்துக்கு அதை விற்கிறார்கள். தோல் பொருட்களைச் செய்வதற்கு இதன் கடினமான தோல் பயன்படுத்தப்படுகிறது. இதன் கூரிய பற்களை ஆடம்பரப் பொருளாக செல்வந்தர்கள் வைத்துக் கொள்கிறார்கள். பழங்கால மிருகங்களை ஞாபகப்படுத்தும் வொல்ரஸ், தற்போது அருகி வரும் பாதுகாக்கப்பட வேண்டிய மிருகங்களில் ஒன்றாக அறிவிக்கப்பட்டுள்ளது.





# இயற்கையின் எழில்

இயற்கை எவ்வளவு அற்புதமானது! கடலையும்; மேகக் கூட்டங்களையும்; அந்தி மாலையின் அதிசயமும் அலுக்கவே அலுக்காது! இயற்கையின் வண்ணம் அடிப்படையில் பச்சை. கண்களுக்கு குளுமை தரும் வர்ணம். அடுத்தது; நம் சிந்தையை நிமிரச் செய்யும் சிவப்பு. பச்சை மரத்தில் சிவப்புக் குருவி... எவ்வளவு எடுப்பான காட்சி! இங்கே சில பச்சை சிவப்பு காட்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIP Iswarya Album













அம்மாவுடன்...



சகோதரனுடன்...






கணவருடன்...





பெற்றோருடன்...



அம்மாவுடன்...



இப்போதைய தோற்றம்...

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஐஸ்வர்யா கிருஷ்ணராஜ் ராய் |
| பிறப்பு | : | 1 நவம்பர் 1973 மங்களூர், கர்நாடகா, இந்தியா |
| தந்தை | : | கிருஷ்ணராஜ் |
| தாய் | : | விருந்தா ராய் |
| சகோதரன் | : | ஆதித்யா ராய் |
| பட்டம் | : | உலக அழகி (1994) |
| முதல் படம் | : | இருவர் டைரக்டர் -மணிரட்ணம் |
| கணவர் | : | அபிஷேக்பச்சன் - நடிகர் |
| திருமண திகதி | : | 20 ஏப்ரல் 2007 |
| மகள் | : | ஆரத்யா |
| பிறந்த திகதி | : | 16 நவம்பர் 2011 |

அதிக புகைப்படம் எடுக்கப்பட்ட இந்தியர்



பட உதவி: லக்ஷன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



'கபார்சிங்'
பவன் கல்யாண், ஸ்ருதி ஹாஸன்

Printed and published by ANCL No: 35, D.R.Wijewardena Mawatha, Colombo-10 in July, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org